ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஞு ஐப்பசி-மீ 28-உ (13—11—1932) | மலர் 29.

விற்பனைக்குத்தயார். முந்துங்கள். விற்பனைக்குத்தயார்.

## தோழர். ம. சிங்காரவேலு பி.ஏ., பி.எல்.,

அவர்கள் எழுதிய

# "கடவுளும் பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதிக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர் சிறந்த நூல். பகுத்தறிவு வளர்ச்சியும், உலக முற்போக்குமடைந்துள்ள இதுகாலை, அஞ்ஞானத்திலும், மூடபக்தியிலும் கிடந்துழலும் நம் மக்கள் அவசியம் படித்துப் பயன்பெறவேண்டுமென்றே கூறுவோம். "கடவுள்" என்னும் வார்த்தை வெறும் சொல் மயக்கேயொழிய வேறில்லை என்பதையும், புராணக்காரர்கள் கடவுளைக் கற்பித்திருக்கும் பொய்யுரைகளையும், தத்துவ நூலாசிரியர்கள் கடவுளைப்பற்றிக் கூறும் கற்பனைகளையும் விஞ்ஞானமுகத்தால் ஆராய்ந்து, அவைகள் யாவும் கற்பனைகள் என்பதைத் தெள்ளிதில் விளக்கப்பட்டுள்ளது. "கோழி முதலில் உண்டானதா முட்டை முதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள். குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.

சுமார் 80 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணா 0—4—0

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபால்தலைகள் அனுப்பவேண்டும்.

மானேஜர்,

குடி அரசு புக்டிபோ, ஈரோடு.

உங்கள்

## கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

## பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

## செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works

Beadon St. Calcutta.



## சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலு பி.எ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமையொழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.



## குஷ்டம்

வெண்குஷ்டம் · பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413

Calcutta- (k)



## காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வறவேற்புக்கு பதிலளிக்குமுகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோறும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0

தபால் சிலவு 0—6—0

கிடைக்குமிடம்:—

மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.



## "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

## "ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் சேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்

"குடி அரசு"

ஈரோடு.



Read the

## "SUPERSTITION OF KHADI"

A Discussion

By

S. Ramanathan

Pattabhi Sitharamyya

& N. S. Varadachari

in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

*Apply to:—*

Manager "Kudi Arasu" Erode.





Dr.T.K.V. Chalam.

## Goshaye office pillss.

## கோஷாயி ஆபீஸ் மாத்திரை

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—0 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு.

*Proprietor. T. K.* வெங்கடாசலம்,

(Disciple of Late Dr B. A. Ehiraj Cholera Bairi)

கோஷாயி வைத்தியசாலை,

தென்னூர், திருச்சி.



## எங்கே கிடைக்கும்?

பல மருந்துகளையும் கையாடி பயனடையாமல் இருப்பவர்கள் தக்க மருந்தையறிந்துகொள்ளும் பொருட்டு இதைப்பிரசுரம் செய்திருக்கிறோம்.

எவ்வித வியாதிக்கும் ஏற்றமருந்து பழனி மலையப்பசாமி வைத்தியசாலையில்தான் கிடைக்கும்.

வியாதிவிபரம் எழுதி ஏற்ற மருந்தை அடையுங்கள்! இன்றே ஆர்டர் செய்யுங்கள்!

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி.S.I.


மதம் மதமென மதிகெட்டலையாதே.

# ஈ. வெ. இராமசாமியின் கொழும்பு விஜயம்.

சென்ற பத்துமாத காலமாக ஆப்ரிக்கா, ஐரோப்பா சுற்றுப்பிரயாணம் செய்து வந்த சுயமரியாதை இயக்கப் பிரமுகரும், "குடி அரசு" ஆசிரியருமான திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் ஈஜிப்ட், கிரீஸ், துருக்கி, ரஷியா, ஜெர்மனி, இங்கிலாந்து, வேல்ஸ், பாரிஸ், ஸ்பெயின், போர்த்துக்கல், இட்டாலி முதலிய தேசங்களைச் சுற்றிப்பார்த்து விட்டு சென்ற மாதம் 17 தேதி "ஹருனா மாரு" என்ற ஜப்பான் கப்பலில் (இலங்கை தேசம்) கொழும்புக்கு வந்து சேர்ந்தார். (அவருடன் கூடச் சென்ற தோழர் எஸ். இராமநாதன் அவர்கள் இன்னும் சில தேசங்களைச் சுற்றிப்பார்த்துவிட்டு வரவேண்டும் என்னும் ஆசையால் மார்சேல்ஸ் என்னும் பட்டணத்திலேயே தங்கிக்கொண்டார்) ராமசாமி கொழும்பு துறைமுக எல்லைக்குள் வந்ததும் அவரது மனைவி நாகம்மாள், தோழர். சி. நடராஜன், அ. இராகவன், கொழும்பு பிரபல வியாபாரி தோழர். ஹமீது, கொழும்பு இந்திய சுயமரியாதைச் சங்கத்தலைவர் தோழர் ஆறுமுகம், கொழும்பு கேரள சுயமரியாதைச் சங்கத்தலைவர், காரியதரிசி, ஆதிதிராவிட சங்கத்தலைவர்கள் ஆகியவர்களும், மற்றும் பல வாலிபர்கள், வியாபாரிகள் ஆகியவர்களும் பெருங்கூட்டமாய் பல ஸ்டீம் போட்டுகளில் நேரே கப்பலுக்குச் சென்று வரவேற்று ஆரம்பத்துடன் கரைக்கு அழைத்து வந்தார்கள். கரைக்கு வந்து ஆர்பாகடந்து வெளியில் வந்ததும் ஏராளமான ஜனங்கள் கூடியிருந்து பற்பல சங்கங்களின் பேரால் ராமசாமிக்கும், அவரது மனைவியாருக்கும் மாலைகள் இட்டு வரவேற்புகோஷங்கள் செய்து கொழும்பு டையஸ் பிளேஸ் என்கின்ற இடத்தில், தோழர் ஹமீது அவர்களால் ஏற்பாடுசெய்துவைத்திருந்த ஜாகைக்குஅழைத்துச்செல்லப்பட்டார்கள். அன்று முழுவதும் சிறிது நேரம்கூட ஓய்வு இல்லாமல்உள்ளூர்பிரமுகர்களும், பத்திரிகைநிருபர்களும், பல பொதுநல இயக்க வாலிபர்களும் சமய ஸ்தாபன பிரமுகர்களும் இரவு 12 மணிவரை கூட்டம்கூட்டமாக வந்து பார்த்தும்,பல விஷயங்களைப்பற்றி பேசிக்கொண்டு இருந்துவிட்டுப் போனார்கள்.

அடுத்தநாள் 18ந் தேதி இலங்கை அரசாங்கசபை என்னும் சட்டசபை நடவடிக்கைகளைப் பார்க்க இரண்டொரு சட்டசபை அங்கத்தினர்கள் அழைப்புக்கு இணங்கி அங்கு சென்று பல சட்டசபை அங்கத்தினர்களுடன் இலங்கை அரசியல் நிர்வாக விஷயமாய்ப் பேசிக்கொண்டிருந்து விட்டு, பிற்பகல் தேயிலைபான விருந்தில் இருந்து விட்டு மாலையில் சில "தேசிய" வாலிபர்களின் விருப்பத்திற்கு இணங்க இரண்டொரு இடங்களுக்குச் சென்று அவர்களிடமும் பல விஷயங்களைப்பற்றிப் பேசப்பட்டது.

மறுநாள் 19ந் தேதி வேறு இரண்டொரு சட்டசபை கௌரவ அங்கத்தினர்கள் அழைப்புக்கிணங்கி சட்டசபை மண்டப விருந்துக்குச் சென்று அங்கு சாப்பிட்டு விட்டு, சுற்றுப்பிரயாணத்தைப்பற்றியும்ஆங்காங்குள்ள அரசியல் கொள்கைகளைப்பற்றியும் நிர்வாகத்தைப்பற்றியும் பேசப்பட்டதுடன், ஜாகையில் பல சிங்கள சமூகத்தலைவர்களுடன் புத்த மத விஷயமாகவும், சிங்கள சமூக் வாழ்க்கை விஷயமாகவும் பேசப்பட்டது.

மறுநாள் 20ந் தேதி காந்தி சங்கத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு ஒரு சிறு வரவேற்பு நடத்தி புகைப்படங்கள் எடுக்கப்பட்டது.

இரவு கொழும்பு பர்ஷியன் ஹோட்டலில் தோழர் டி. சாரனுதன் மற்றும் சில செட்டித்தெரு தோழர்கள் ஆகியவர்களால் ஒரு பிரபல விருந்துநடந்தது. அதற்கு உள்ளூர் பிரமுகர்களும், அரசாங்க சபை அங்கத்தினர்களும், அரசாங்கமந்திரிகளும் அழைக்கப்பட்டு எல்லோரும் வந்து விருந்துண்டு பல உபன்யாசங்களும் செய்யப்பட்டன. தொழில் இலாக்கா மந்திரி தோழர் பெரி. சுந்தரம் அவர்கள் தலைமை வகித்து விருந்தாளியாகிய ராமசாமியைப்பற்றி தனக்குப் பல வருஷங்களாகவே தெரியுமென்றும், அவரது இயக்கமும், சுற்றுப்பிரயாணமும் உண்மையான ஏழை மக்களுக்கும், கஷ்டப்படும் தொழில் மக்களுக்கும் மிகவும் நன்மைபயக்கக்கூடும் என்றும் பேசிய பின்பு, பல அரசாங்கசபை அங்கத்தினர்கள் பாராட்டிப் பேசினார்கள். விருந்தினும், மந்திரி முதலியவர்கள் பாராட்டிப்பேசியதற்கும் பதில்அளிக்கையில் ஈ. வெ. ராமசாமி பேசியதின் சுருக்கமாவது:—

இன்று உலகில் பெரும்பாகத்தில் நடக்கும் தேச பக்திக்கிளர்ச்சிக்கும், ஜாதியக் கிளர்ச்சிக்கும், அரசியல் கிளர்ச்சிக்கும்தனது அபிப்பிராயம் மாறுபட்டிருப்பதாகவும், இவ்விதக்கிளர்ச்சிகள்கஷ்டப்படும் மக்களுக்கு எவ்விதமாறுதலையோ பயனையோ கொடுக்காதென்றும், ஏழை மக்களின் கஷ்டங்களைச் சொல்லிக்கொண்டு அதின் பேரால் சோம்பேரி வாழ்க்கைப்பிரியர்களாலும், பேராசைக்காரர்களாலும் நடத்தப்படும் போட்டி "வியாபாரங்களே" இன்று தேசியமாயும், ஜாதியமாயும், மதாபிமானமாயும்இருக்கின்றதே தவிர அவற்றால்நாணயமோ உண்மையோ சிறிதும்தன்னால்காணக்கூடவில்லையென்றும், உலகில், ஒருபெரிய மாறுதல், அதாவது வெடி மருந்துசாலையில் தீப்பிடித்து வெடிக்கிளம்புவது போல் சமீபத்தில் ஏற்படப் போகின்றதென்றும், வாழ இஷ்டமிருக்கின்றவர்கள் அதற்குத் தகுந்தபடி தங்களை ஆக்கிக்கொள்ள வேண்டுமென்றும், இப்போதைய பெரும்பாக கிளர்ச்சிகள் உலக உண்மைக் கஷ்டத்தைக் கஷ்டப்படும் மக்கள் அறியமுடியாமல் இருப்பதற்குச் செய்யும் தந்திரமென்றும் பேசினார். பிறகு விருந்தளித்தவர்கள் சார்பாக தோழர் ராஜம் பேசினார். 21ந் தேதி சில சிங்கள வாலிபர்கள் தங்கள் ஜாகைக்கு அழைத்துப் போய் தேயிலை பானம் அளித்து, அரசியல் விஷயமாய் தங்களது சந்தேகத்தைத் தெரிவித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

### படக்காக்ஷி.

பிறகு அன்று மாலை கொழும்பு கொபிட்டி தியேட்டரில் தோழர் ராமசாமியின் ஆதரணையின் கீழ் ஒரு சினிமாக் காட்சி நடத்தினார்கள். அதற்கு ஏராளமான கூட்டம் வந்திருந்தது. அங்கு ராமசாமிக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அதற்கு பதிலளிக்கையில் ராமசாமி பேசியதாவது:-

இந்த சினிமாக் காட்சி பார்ப்பதற்கு மிக அதிசயமாயும் ரம்மியமாயும் காணப்பட்டாலும், இதைப்பார்ப்பதனால் ஏற்படும் பயன் மூட நம்பிக்கையும் அடிமைத்தனமும் தவிர வேறு ஒன்றும் இல்லை என்றும், இந்த மூட நம்பிக்கையும், அடிமைத் தன்மையையும் சோம்பேரிகள் பயன் படுத்திக்கொண்டு ஏழைகளை வருத்தி செல்வம் பெருகிக்கொள்ள பயன் படுகின்றதென்றும், இனி இப்படிப்பட்ட காட்சிகள் தடுக்கப்படவேண்டுமென்றும், பகுத்தறிவும், சுதந்திரமும் ஏற்படக்கூடிய விஷயங்களையே நாடகமாகவோ,படக்காட்சியாகவோ காட்ட இந்த தியேட்டர் சொந்தக்காரர் முயற்சிக்கவேண்டும் என்றும், உண்மையான சுதந்திர, சமத்துவ தேசங்களில் உள்ள காட்சிகள் அப்படித்தான் இருக்கின்றதென்றும் சொன்னார். காட்சியைக் காண வந்த ஆயிரக்கணக்கான ஜனங்கள் பெருத்த ஆரவாரம் செய்தார்கள்.

22ந் தேதி பகலில் மகமதிய புரபசர் அவர்களும், அவருடன் பல மகமதிய தோழர்களும் வந்து சுயமரியாதை இயக்கத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

### வரவேற்பு.

இரவு 8 மணிக்கு மேல் கொழும்பு ராமநாதபுரம் திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிடர் சங்க வரவேற்பு ஒன்று பலமாய் நடந்தது. என்றாலும் அதற்குஇடம் கொடுப்பதாய் வாக்களித்து நாலு நாளைக்கு முன்பாகவே சிறிது தொகையும் முன்பணமாகப் பெற்றுக்கொண்ட இரக்ஷண்ய சேனை சொந்தக்காரர்கள் திடீரென்று இன்றைய தினம் பிற்பகலில் இடம் கொடுக்கப்படமாட்டாது என்று சொல்லி விட்டார்கள். ஆதிதிராவிட சங்க வரவேற்புத் தலைவர்கள் வெகு கஷ்டப்பட்டு வரவேற்பை நடத்த வேறு ஒரு பள்ளிக்கூட மண்டபத்தைப்பெற்றார்கள். அம்மண்டபம் சற்று சிறிதாய் இருந்தாலும் வரவேற்புக் கூட்டத்திற்கு ஏராளமான ஜனங்கள் வந்து விட்டபடியால் மிக ஜன நெருக்கமாக

வே இருந்தது. வரவேற்புக்குத் தலைமை வகித்த தோழர் எஸ். ஆர். முத்தையா அவர்கள் ராமசாமிக்கு அவர் மேல்நாட்டுக்குச் சுற்றுப்பிரயாணம் போகும்போதும் தாங்கள் வரவேற்பு செய்ததாகவும், அதுபோலவே இப்போது திரும்புங்காலையிலும் தாங்கள் வரவேற்பு செய்ததற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டதென்றும், அவரது தொண்டு முழுவதும் தங்களுக்கு விடுதலையும், சுதந்திரமும் அளிக்கக்கூடியது என்றும், தங்கள் சமூகம் அவரை என்றும் மறக்க முடியாதென்றும் பேசினர். மற்றும் தோழர் பி. அருளானந்தம், எஸ். பெரியசாமி ஆகியவர்கள் அளவுக்குமீறிப் புகழ்ந்து பேசினர்கள். ராமசாமி வரவேற்புக்கு நன்றி செலுத்துகையில் பேசியதாவது:—

தாழ்த்தப்பட்டவர்கள் ஈடேர ஒரே ஒரு வழிதான் உண்டென்றும், அது உலகில் உள்ள தாழ்த்தப்பட்டவர்கள் எல்லாம் ஒன்று சேரவேண்டிய முயற்சி எடுக்க வேண்டுமென்றும், அம்முயற்சிக்கு எதிரியாய் இருக்கும் சாதனங்களான தேசாபிமானம், மதாபிமானம் என்பவைகளை அடியோடு அழித்து உலக ஏழைகள் அபிமானம்-உலக தாழ்த்தப்பட்டவர்கள் அபிமானம் என்பதன் உணர்ச்சியுடன் வேலை செய்யத் துணிய வேண்டும் என்றும், உலக மனித சமூகத்தை 2 வகுப்பாகத்தான் பிரிக்கவேண்டுமென்றும், அது ஒன்று, தொழில் செய்து கஷ்டப்பட்டு வாழும் ஏழை, மற்றொன்று தொழில் செய்யாமல் மற்றவர்கள் தொழிலின் பயனை அனுபவிக்கும் சோம்பேரி செல்வவான்கள் என்றும் இரண்டே பிரிவாகப் பிரித்து போராடி விடுதலை அடையத் தயாராயிருக்கவேண்டுமென்றும் பேசினர்.

பிறகு தோழர் அ. இராகவன் பேசுகையில் மக்கள் பிரிவுக்கும், வறுமைக்கும் அவர்களது கடவுள் உணர்ச்சியும் மத உணர்ச்சியுமே காரணமென்றும், அவற்றைக்கண்டித்தும் பேசினர். பிறகு தோழர் சி. நடராஜன் இவ்வபிப்பிராயத்தை ஆதரித்துப் பேசினர்.

## கடவுள் நம்பிக்கை.

கடைசியாக ஒரு உபதேசியார் எழுந்து ராமசாமியின் உழைப்பையும் உபதேசத்தையும் தான் பல வருஷங்களாகப் பார்த்து வருவதாகவும், அவர் மூலம் தான் மக்கள்கஷ்டம் ஒழியக்கூடுமென்றும், ஆனால் அவர் கடவுளை நம்பவில்லையென்று சொல்லுவது தனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறதென்றும் சொன்னர். அதற்கு ராம

# ஈ. வெ. இராமசாமியின் கொழும்பு விஜயம்.

சாமி பதிலளிக்கையில் கடவுளை நம்பவேண்டுமென்பது ஒரு அடக்குமுறை யென்றும், அது அவனவன் சொந்த விஷயமாகப் பாவிக்கவேண்டுமென்றும், கடவுள் மீது சிறிதாவது நம்பிக்கை இருப்பவர்கள் ராமசாமியால் கடவுள் இல்லாமல் போய்விடுமோ என்று பயப்படவேண்டியதில்லை யென்றும், உலகில் நடக்கும் அக்கிரமங்களுக்கும், ஏழைகளை வஞ்சித்துக் கொடுமைப்படுத்தி வேலை வாங்கி சோம்பேரியாய் வாழும் அயோக்கியத்தனத்திற்கும் பெரிதும் கடவுள் நம்பிக்கைக்காரர்கள் தான் காரணஸ்தர்களாகவும் பொருப்பாளிகளாகவும் இருக்கிறர்களே ஒழிய வேறில்லை என்றும், ஆதலால் கடவுள் நம்பிக்கை போய்விட்டால் உலகம் என்ன கதியாகும் என்று யாரும் பயப்படவேண்டியதில்லை என்றும்சொன்னர்.

23-10-32ந் தேதி காலையில் எலிபின்ட்ஸ்டோன் பிக்சர் பாலஸ் நாடகக் கொட்டகையில் கொழும்பு சுயமரியாதைச் சங்கத்தாராலும், கொழும்பு மலையாளி யுவஜன சுயமரியாதைச் சங்கத்தாராலும், தோழர் சி. கே. குஞ்சிராமன் பி. ஏ. அவர்கள் தலைமையில் ஒரு வரவேற்புக் கொண்டாட்டம் நடந்தது. கூட்டத்திற்கு இரண்டாயிரம் பேர்கள் வரை வந்திருந்தார்கள். கொழும்பு சுயமரியாதைச் சங்கத்தலைவர் தோழர் ஆறுமுகத்தால்தமிழில்சுயமரியாதைப்பத்திரம் வாசிக்கப்பட்டது. பிறகு காரியதரிசி தோழர் பிரான் சிசால் ஆங்கிலத்தில் ஒரு உபசாரப்பத்திரமும், சி. கே. குஞ்சிராமன் பி. ஏ. வால் ஆங்கிலத்தில் ஒரு உபசாரப்பத்திரமும், மலையாள யுவஜன சுயமரியாதைச் சங்கக் காரியதரிசி "சமத்துவ வாதி" பத்திராதிபர் பி. வேலாயியால் மலையாளத்தில் ஒரு உபசாரப்பத்திரமும் வாசிக்கப்பட்டது. அவற்றிற்கு ராமசாமி பதிலளிக்கும் முறையில் நீண்ட உபன்யாசம் ஒன்று செய்தார். (இந்த உபன்யாசமும், மற்றும் சில உபன்யாசங்களும் சேர்த்து ஒரே தொகுதியாக தனியாய் பிரசுரிக்கப்படும். ப-ர்)

பிறகு, இந்தியன் முஸ்லீம் அசோசியேஷன் வைஸ் பிரசிடெண்டும், சைஹாரா காலேஜ் புரோபசர் ரவூப் பாஷா பி. ஏ. அவர்கள் பாராட்டிப்பேசினர். அதன் சுருக்கம், "ராமசாமியின் சுயமரியாதை இயக்கக்கொள்கைகள்முழுவதும்இஸ்லாமியக்கொள்கைதவிர புதிதொன்றும் இல்லை யென்றும், இஸ்லாமியக் கொள்கையை நன்குய் அறிந்தவர்களுக்குத்தான் அதன் உண்மை விளங்குமென்றும், ஆண்டவனைப்பற்றி அவர்கொண்ட அபிப்பிராயத்தில் மாத்திரம் தான்மாறுதல் அடைவதாகவும், கால்கைகளுடன் ஒரு ஆண்டவன் இல்லாவிட்டாலும் ஒரு சக்தியிருப்பதை மறுக்க முடியாதென்றும், ஆனல் உலகம் இன்று இருக்கும் நிலையைப்பார்த்து அதை அடியோடு புரட்டிப்புதுப்பிப்பதற்காக முதலில் அழிவு வேலை செய்து பிறகு ஆக்க வேலை செய்யக் கருதி இந்தப்படி அவர் செய்து வருகிறார்" என்றும் பேசினர்.

பிறகு தோழர் அ. இராகவன் அவர்கள் பேசும் போது, சுயமரியாதை இயக்கத்தார் பெரிதும் பகுத்தறிவு வாதிகளானதால் அவர்களது ஆராய்ச்சிக்கும், பகுத்தறிவிற்கும் எட்டியதைத்தான் பேசுகிறர்கள் என்றும், ஆகையால் கடவுளைப்பற்றிய அபிப்பிராயம் அவரவர்கள் அறிவின் ஆராய்ச்சியின் தன்மையைப் பொருத்ததென்றும், மற்றபடி உலக மக்கள் கஷ்டத்தை கடவுள் மீது போடாமல் எங்களுடன் ஒத்துழைத்து அதை விலக்க உதவி செய்தால் போதுமென்றும்பேசினர். கடைசியாய் தலைவர் தோழர் சி. கே. குஞ்சிராமன் முடிவுரை கூறி தோழர் ஆறுமுகம் வந்தனம் கூறக் கூட்டம் கலைந்தது.

## பெரிய பொதுக்கூட்டம் 10000 பேர். விஜயம்

பிறகு அன்று மாலையில் கொழும்பு சமுத்திரக்கரை பிச்சுக்குப் பக்கம் கால்பேஸ் மைதானத்தில் டாக்டர் எஸ். முத்தையா அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதற்கு சுமார் 10000 பத்தாயிரம் பேர்வரைவந்திருந்தார்கள், 2மணி நேரம் ராமசாமி பேசினர்.

பிரசங்கம் தனியாய் பிரசுரிக்கப்படும்.

24ந் தேதி கண்டி, ஹட்டன், யாழ்பாணம் முதலிய இடங்களில் இருந்து சுயமரியாதை இயக்க சங்கத்தாரும், மருத்துவகுல சங்கத்தாரும், ஆதிதிராவிடகுல சங்கத்தாரும் தொழிலாளர் சங்கத்தாருமாக பலர் கொழும்புக்கு வந்து தங்கள் தங்கள் ஊருக்குவர வேண்டுமென்பதாக அழைத்ததற்கு இணங்க, கொழும்பிலிருந்து வடகோடி அதாவது கொடிக்காமம் வரை ஒரு சுற்றுப்பிரயாணம் ஏற்பாடு செய்யப்பட்டது. 25ந் தேதி காலையில் கொழும்பில் இருந்து புறப்பட்டு நேரே கண்டிக்கு ரோட்டு மார்க்கமாய் மோட்டாரில் அழைத்துச் செல்லப்பட்டார்கள். கண்டியில் மூன்று நாள் தங்கி பல விஷயங்கள் தெரிந்தது டன், சுற்றுப்பக்கத்தோட்டங்களுக்கும், தொழில்சாலைக்கும் சென்று பார்த்ததுடன் மாத்தளை, உக்களை முதலிய இடங்களுக்கு தோழர் சாரநாதனுடன் சென்று தொழிலாளர் கூலிகள் என்னப்படுபவர்கள் நிலைமையையும் அறிந்துவந்தார்கள்.

## கண்டி.

28ந் தேதி மாலையில்கண்டியில் புஷ்பதான சபாமண்டபத்தில் ஒரு வரவேற்பும், பொதுக்கூட்டமும் நடந்தது. அக்கூட்டத்திற்குக் கண்டி பிரபல வக்கீல்களில் ஒருவராகிய தோழர் அட்வகேட் என். குமாரசாமி தலைமை வகித்தார். தோழர் அட்வகேட் கே. குமாரசாமி சுயமரியாதை இயக்கக்கொள்கைகளை ஆதரித்து நீண்ட உபன்யாசம் செய்தார். பிறகு கண்டி மருத்துவகுல சங்க சார்பாக ஒரு உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது, பிரபல வக்கீலும், அரசாங்கசபை மெம்பரும், கண்டி முனிசிபல் தலைவருமான தோழர் டி. சில்வா மற்றும் இந்திய வியாபாரிகள், வக்கீல்கள் ஆகியவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள், தோழர் டி. சாரநாதன், சில்வா ஆகியவர்கள்பேசினர்கள். தோழர் கௌரவ, டி. சில்வா ராமசாமியையும் மற்ற நண்பர்களையும் வீட்டிற்கு அழைத்து ஒரு சிற்றுண்டி விருந்து நடத்தினர். தோழர் சாரநாதன் ஒரு சிற்றுண்டி விருந்து நடத்தினர். தோழர் வக்கீல் என். குமாரசாமியும், அவரது மனைவி தோழர் கிருபாகுமாரசாமியும் தங்கள் வீட்டில் ஒரு விருந்து நடத்தினர்கள். மற்றபடி மூன்று நாள் அங்கு தங்கியிருந்ததற்கும் கண்டி மருத்துவர் சங்கத்தார் ஆதரணையே முக்கியமாய் இருந்தது.

## நாவல்பட்டிய.

பிறகு கண்டிக்கு 30 மைல்

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

# "சமதர்ம முரசு"

## தன்மதிப்பும், தன்னம்பிக்கையும் அற்ற வாழ்வு ஓர் வாழ்வா?

பணக்காரத்தன்மையும், மதக்கட்டுகளையும் பட்டொழியவேண்டும்.

(தோழர். A. இரத்தினசபாபதி)

(12)

"தன்மதிப்பு" "தன்னம்பிக்கை" என்ற இரண்டும், ஒவ்வொரு மனிதனுக்கும் இயற்கையாயமைந்திருக்கும், இரண்டு அரும்பெரும் பொக்கிஷங்களாகும். மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு ஆடவனுக்கும் அல்லது ஸ்திரீக்கும் இவ்விரண்டு குணங்களும் ஏற்பட்டிருக்கின்றன. சரியான மானுஷீகத்தன்மையடைந்துள்ள எந்த ஒரு ஆடவனும், அல்லது எந்த ஒரு ஸ்திரீயும், இவ்விரண்டு அரும்பெருந் தன்மைகளையும் பெற்றிருக்கக்காண்கின்றோம்.

தன்மதிப்பென்பதை, இது சமயத்திலும் ஒவ்வொருவரிடமும் ஒவ்வோரளவில் காணலாம். வெற்றி, தோல்வியாகியவற்றையும், வியாபார நஷ்டத்தையும், அல்லது ஏதாவதொரு பொருளை இழந்து விட்டமைபற்றி ஏற்படும் மனக்கஷ்டத்தையும் தவிர்த்து, ஏதேனுமொரு செயலால் மனிதனது மனதில் 'சுருக்' கெனப் பாய்வது போல் உண்டாகும் ஓர்வித உணர்ச்சி இந்தத்தன்மதிப் பின்பாற்பட்டதெனக் கூறலாம்.

ஒருவன் தன் நண்பனொருவனின் வீட்டிற்கு ஓர் விசேஷமாகச் செல்லுகிறான். அந்நண்பன், இவன்வரவை விரும்பாதவன் போல் காணப்படுவானாயின், அதை, அங்கு சென்றவன் உணருங்கால் அவனது மனதில் "மளுக்"கென்று பாய்ந்து தைக்கும் ஓர்வித உணர்ச்சி இந்தத் தன்மதிப் பின்பாற்பட்டதேயாகும். இதை நாம் சாதாரணமாய் "மானம்" "ரோஷம்" என்னும் சொற்களாலும் வழங்குகிறோம்.

சாதாரணமாக ஏழையாயுள்ள ஒரு நேர்மையான நடையுடையவன், ஓர் செல்வவந்தரிடம் ஓர் காரியமாகச் செல்வானேல்; அத்தனவந்தர், அம்மனிதன் ஏழை யென்பதற்காக, சாதாரணமனிதனுக்குரிய மரியாதையை அம்மனிதன்பால் காட்டாது மமதை கொண்டிருப்பானேல், அச்சமயத்தில் அதனை உணரும், அந்த ஏழையின் மனதில் ஓர்வகை உணர்ச்சி தோன்றி, சினத்தையும், ஆத்திரத்தையும் உண்டுபண்ணக்காண்கின்றோம். இதுவும் தன்மதிப்பின்பாற்பட்டதோர் உள்ளத்தின் நிகழ்ச்சியேயாகும்.

இன்னும் கூறவேண்டுமானால், பார்ப்பனரல்லாத ஒருவன் ஒரு பிராமணனெனப்படுவோரின் வீட்டிற்குச் சென்று தாகத்திற்குச் சிறிது தண்ணீர் கேட்கிறானென்று வைத்துக் கொள்ளுங்கள். சாதாரணமாக நன்கு பழக்கமற்ற வீடாயிருப்பின் நிச்சயமாக அவ்வீட்டுப் பிராமணர் அம்மனிதனுக்குத் தண்ணீர் தரமாட்டார். அப்படிக்கில்லாமல் சற்று பழக்கமுடைய வீடாயின், ஒரு தம்ளரில் சிறிது ஜலம் கொடுக்கப்படும். இந்தப் பார்ப்பனரல்லாதார் அதைக்குடித்தவுடன், அந்தப்பாத்திரத்தைத் தரையின் மேல் குப்புறக்கவிழ்த்து வைக்குமாறு கூறி, அவ்வாறு வைத்தவுடன் அப்பாத்திரத்தின் மேல் ஒரு கை தண்ணீர் தெளித்து அதன் பின்னர் அப்பாத்திரத்தை உள்ளே எடுத்துச் செல்கிறார். அதாவது, பார்ப்பனர் வீட்டுப் பாத்திரத்தை ஒரு பார்ப்பனரல்லாதான் தொட்டுவிட்ட தீட்டு நீங்குவதற்காக, அதன் தலையில் சிறிது தண்ணீரைக் கொட்டி, அதனால் அத்தீட்டைப் போக்குவதாகத் தாத்பரியம்! இதை உணருகையில் அந்தப்பார்ப்பனரல்லாதானின் மனம் வேதனையடைகிறது. அந்த வேதனையும், இந்தத்தன்மதிப்பின் பாற்பட்ட மனோ எழுச்சியேயாம்.

இந்தத் தன்மதிப்பின் உணர்ச்சி சாதாரணமாக எல்லா ஆடவனுக்கும், எல்லா ஸ்திரீக்கும் இயற்கையில் உண்டெனினும், அடிமைப்புத்தியால் அவ்வுணர்ச்சி வேக மற்ற தாக்கி விடப்பட்டிருக்கிறது. இவ்வடிமைப்புத்தியுண்டானதற்குக் காரணம் பலவாயினும், ஒரு சிலரின் சுயநலச் சூழ்ச்சியே முக்கிய காரணமாம்.

ஆதி இந்தியாவில், இன்று காணப்படுவது போன்ற பலபல மதங்களும், எண்ணத் தொலையா ஜாதிப்பாகுபாடுகளும், மதத்திற்கு மதம் அடிமை, ஜாதிக்கு ஜாதி அடிமை, ஆணுக்குப் பெண் அடிமை, என்ற மிடிமைகளெல்லாம் எதுவும் கிடையாதென்பதற்குச் சான்றுகள் பலவுள. பின்னர் இந்நாட்டின் கண் குடி புகுந்த ஆரியர் தம் சூழ்ச்சியால் நான்கு வருணங்களும், அவற்றுள் நாலாயிரம் ஜாதிகளும், அந்த நாலு வருணத்திற்கும் அப்பாற்பட்ட பஞ்சம,—பார்க்கப்படாத—தீண்டப்படாத நீசஜாதியென்ற ஒன்றையும் சிருஷ்டித்து, அவற்றின் மூலம் தம்மை உயர்த்திக் கொள்ளலாயினர். இந்த அவர்களது குள்ள நரிச் சூட்சி பயனளித்தது. இந்த நாலாயிரம் சாதிக்காரர்களும், தத்தமக்கு மேல் எத்தனையோ வகுப்பார்களிருந்த போதிலும். ஒரு சில சாதியாரைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று கூறிப்பெருமையடைதல் பிரத்தியக்ஷம். இந்த அர்த்தமற்ற பெருமையின் காரணமாய் தமக்கு மேல் சில சாதியினர் தங்களை உயர்ந்தவர்களென்று கூறிக்கொண்டு ஆதிக்கஞ் செலுத்துவதை மறந்து—மறந்து அல்ல—அந்த உணர்ச்சியற்று—"மேல் குலத்தானுக்கு நாம் தாழ்வுதான்—என்ற ஓர்வகை அடிமைப் புத்தி குடி கொண்டு, அதனால் தன்மதிப்பென்பதை அதன் மூலம் பலியிட்டுவிட்டனர். இந்த அடிமை புத்தி மக்களை ஆட்கொண்டுவிடவே, மக்களிற் தன்மதிப்பென்பது கீழே தள்ளப்படலாயிற்று. இது ஒருவிதம், இரண்டாவதாக நாட்டிலுள்ள பணக்காரன், ஏழை என்ற பதங்களும் மக்களின் தன்மதிப்பைத்தகர்த்தெரியக் காரணமாயிருந்தன. இருக்கின்றன. ஏழையென்னும் தலைப்பின் கீழ்வரும் மக்கள், தங்களது இயற்கையான தேவைகளான, உணவு, உடை, வீடு முதலியவற்றிற்காக பணக்காரரென்போரின் ஆதரவையும், தயவையுமே நாடி நிற்குமாறு ஏற்பட்டதால் அந்த இடத்திலும் பெரும்பாலான மக்களின் சுயமதிப்பு, பலியிடப்பட்டுப் போயிற்று. தன்மதிப்பை விரும்பும் ஒரு தொழிலாளி முதலாளியிடம் பலவகைகளிலும் அல்லலே அடைவதை நாம் அனுபவத்தில் காண்கிறோம். எனவே இந்த தொழிலாளி, முதலாளி, "ஏழை, பணக்காரன்" என்ற தோரணையில் இந்த தொழிலாளி ஏழை என்போரின் சுயமரியாதைத் தன்மை—தன்மதிப்பு பலியிடப்பட்டுப் போயிற்றென்பது யாரும் மறுக்கப்படாத உண்மையாகும். இது மற்றொரு விதம்.

ஆகவே ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொருஸ்திரீயும்தனக்கினிய தன் மதிப்புடன்—சுயமரியாதையுடன் நாட்டில் வாழவேண்டுமாயின் இந்த மேல்ஜாதி கீழ்ஜாதி என்ற மனப்பான்மை மக்களிடையிருந்து அகலவேண்டும். எந்த வகை சாதிப்பாகுபாடும் இருக்கும் வரையில் மேல்சாதி கீழ்சாதி என்ற பேதம் இருந்து கொண்டுதானிருக்கும்.

எனவே சமதர்மத்தை விரும்பும் இடத்தில் எவ்வகைச்சாதியும் இருத்தலாகாதென்று பெறப்படுகின்றமை காண்க.

அடுத்தபடியாக, தன்மதிப்பை அடக்குவதற்குக் காரணமாயிருக்கும் "ஏழை" என்ற பதமும் நாட்டிடை வழங்கப்படாத வகை செய்யப்பட வேண்டிய தவசியமாகும். இதைச் செய்ய வேண்டுமானால் இந்த ஏழை என்பதற்கு எதிரான பணக்காரன் என்ற பதமும், அதைச்சார்ந்திருக்கும் மமதை, திமிர், ஆணவம், யதேச்சாதிகாரம் என்பவையும் தகர்த்தெரியப் படவேண்டும்.

இந்த சாதிப்பாகுபாடும், பணக்காரத்திமிரும் மட்டந்தட்டு விடப்பட்டு விட்ட இடத்தில், மக்களது தன்மதிப்பிற்கு—சுயமரியாதைக்கு— மனிதனுக்கியற்கையான கம்பீரத்தன்மைக்கு—எந்தவிதமான பாதகமும் ஏற்படாதென்பது வெளிப்படையாக விளங்குகின்றமை காண்க, இவ்வாறு இவ்விரண்டு கொடு விருக்ஷங்களும் வெட்டி வீழ்த்தப்பட வேண்டுமாயின்; அதன்வழி, யாண்டும் சமதர்மத்தை நிலைநாட்டவேயாகும். சமதர்ம உலகில் இந்த விஷ விருக்ஷப் புற்கள் கூட காணப்பட மாட்டாது.

இனி, தன்னம்பிக்கை என்பதை எடுத்துக்கொள்வோம். தன்னம்பிக்கையற்ற யாரும் எந்த ஒரு அற்ப காரியத்தையும் செய்து விடமுடியாதென்பது பிரத்தியாக்ஷானுபவமாகும். ஒருவன் ஒரு காரியத்தைச் செய்ய முயலுங்கால் தான் அவ்வேலையைச் செய்து முடிப்போம் என்ற நம்பிக்கை அவனுக்கே இல்லாது போகுமானால், அவன் அக்காரியத்தைச் செய்து முடித்தல் எங்ஙனம் இயலும்? எந்தக்காரியத்தையும் ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும், மனோ வலிமையோடும், விடா முயற்சியோடும், நுண்ணுணர்வோடு செய்பவனே வெற்றியடைகிறான். இது உலகப்பிரத்தியட்சம். எடுத்த காரியத்தில் தோல்வி ஏற்படினும், மறுபடியும், அத்தோல்வியின் காரணத்தைக் கண்டு பிடித்து அதை அகற்றி, மீண்டும் செய்து வெற்றி பெறுவதே விரும்பத்தக்கதாகும். இதற்குத் தன்னம்பிக்கை அவசியம்வேண்டும்.

ஆனால் இந்த நாட்டின் இன்றைய நிலைமையில் இத்தன்னம்பிக்கைஎன்பதைக்காண்பது மிகமிக அரிதாயிருக்கிறதென்று கூறுவது மிகையாகாது. தன்னம்பிக்கையுடைய ஒரு சிலர்தான் எக்காரியத்தையும் முழு நம்பகத்தோடும் செய்து வெற்றி பெறுகிறார்கள். ஆனால் இந்தக்காரியங்களை யெல்லாம் செய்து வெற்றியடைபவர்கள் லக்ஷத்திற்கு—அல்லது கோடிக்கு ஒருவராகத்தானிருக்கிறார்கள். இதனால் உலகிலுள்ள 200 கோடி மக்களில் பெரும்பான்மையோரிடம் தன்னம்பிக்கை என்பது இல்லாதிருக்கிறது. இதற்கும் ஓர் காரணம் இருந்து தீரவேண்டுமல்லவா?—அது என்ன? ஒவ்வொருவருக்கும் தத்தமது புத்தியிடத்திலும், முயற்சியிடத்திலும் போதிய நம்பிக்கையின்மையே முதற் காரணம். பெருத்த தன்னம்பிக்கையால்—மனோ உறுதியால் தான், இன்றைய அற்புதமான "ஹிப்னுடிசம்" என்

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

# அறிவில்லார் எவரும் இல்லை.

## அறிவை அமிழ்த்துவது நம்பிக்கையே.

[சாமி. சிதம்பரனார்]

அறிவு என்பது மிகவும் திறமை வாய்ந்தது. அதன் ஆற்றலை அளவிட முடியாது; அதன் திறமையை வரையறுக்க முடியாது, அதனால் ஆகாத செயல் ஒன்றுமில்லை. உலகில் இப்பொழுது நமது கண்முன் காணப்படும் செயற்கைக் காட்சிகளெல்லாம் அறிவுமயமே. அறிவு இன்றேல், மோட்டார் வாகனமெங்கே? புகைவண்டியெங்கே? ஆகாய விமானம் எங்கே? இயந்திர மனிதனெங்கே? கம்பியில்லாத் தந்தியெங்கே? ஆணைப்பெண்ணாக்குவதெங்கே? பெண்ணை ஆணாக்குவதெங்கே? கிழத்தை வாலிபமாக்குவதெங்கே? தந்தியின் மூலம் படம்பிடிப்பதெங்கே? இன்னும் இப்பொழுது நடைபெறும் விஞ்ஞான அதிசயங்களெல்லாம் எங்கே? எல்லாம் இராதன்றோ? இவையெல்லாம் அறிவினால் தோன்றியது; அவ்வறிவின் மூலம் உண்டான ஆராய்ச்சியினால் தோன்றியது என்பதில் ஏதேனும் ஐயமுண்டோ?

இப்படிப்பட்ட அறிவு என்பது எல்லா மனிதர்களுக்கும் உண்டா? என்றால் "உண்டு" என்றே நாம் கூறுவோம். நமக்கு இதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆனால் சிலர், அறிவு விளக்கமுடையராய், உயர்ந்த, சிறந்த செயல்களைச் செய்கின்றனர்; திறமையுடையவராக விளங்குகின்றனர்; எச்செயலையும் இடையூறின்றி எளிதில் முடிக்கின்றனர்; தாம் முடிக்கும் வினைகளால் பெரும்பயன் அடைகின்றனர்; இவை நாம் உலகில் காணும் காட்சி. ஆனால் பலர் அறிவில்லாதவர்கள் போலக் காணப்படுகின்றனர்; அவர்கள் எச்செயலையும் தாமே உணர்ந்து செய்து முடிக்கும் திறமையில்லாமலிருக்கின்றனர்; மிருகங்களைப் போல—பறவைகளைப் போல, உண்டி ஒன்றையே உயர்வாகக் கருதுகின்றனர்; இதைத்தவிர வேறொன்றிலும் அவர்களுடைய அறிவு செல்லுவதில்லை. இப்படிப்பட்ட மக்களையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஆதலால் முதற்கூறிய மக்களை அறிவுடையவர்களென்றும், பிற்கூறிய மாந்தரை அறிவற்றவர்களென்றும் உலகினர் கூறுகின்றனர்.

ஆனால் நாம் அவ்வாறு முற்கூறியவர்களை அறிவு உள்ளவர்களென்றும், பிற்கூறியவர்களை அறிவு இல்லாதவர்களென்றும் கூறமாட்டோம். இதற்கு மாறாக, முற்கூறிய திறமையாளரை, அறிவு வளர்ச்சியுடையவர்களென்றும், பிற்கூறியவர்களை அறிவு வளர்ச்சியற்றவர்களென்றும் கூறுவோம்.

உதாரணமாக மக்களால் செய்யப்படும் காரியங்களையெல்லாம் எடுத்துப்பார்த்தால், அவைகள் அனைத்தும் அறிவுடன் செய்யப்படும் செயல்களாகவே காணப்படும்; அறிவின்றிச் செய்யப்படும் செயல்கள் யாதொன்றும் இல்லை; அறிவு இன்றேல் செயல் நிகழவே இடமில்லை.

ஆனால் உலகத்தினர் இதற்கு மாறாக நினைக்கின்றனர்; சிலசெயல்களை அறிவுடைய செயல்களென்று கருதுகின்றனர்; சிலவினைகளை அறிவற்ற வினைகளென்று கூறுகின்றனர். சில வினைகளை நல்லனவென்றும், உயர்ந்தனவென்றும் கூறுகின்றனர்; சிலவினைகளைத் தீயனவென்றும், தாழ்ந்தனவென்றும் கூறுகின்றனர். இக்கூற்றே அறிவுடைய செயல்கள் என்பதற்கும், அறிவற்ற செயல்கள் என்பதற்கும் காரணமாயிற்று. எச்செயலும் ஒத்தனவே; தொழிலில்— செயலில்—வினையில் உயர்வு தாழ்வு இல்லையென்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்குமானால் "அறிவுண்டு" "அறிவில்லை" என்னும் கொள்கைகள் அவ்வளவாகத் தோன்றியிருக்கமுடியாது.

மொழியில் வல்லவன் ஒருவன் இருக்கின்றான்; அவனைப்புலவன்; வித்துவான்; பண்டிதன்; கவி; நாவலன்; மேதாவி; அறிஞன் என்றபல பெயர்களால் அழைக்கின்றனர். இவனிடத்தில் இருக்கும் அறிவு என்ன? இவன் ஒரு சொல்லுக்குப் பலசொற்களைக் கற்றிருக்கின்றான். உதாரணமாகச் "சென்றான்" என்ற ஒரு சொல்லுக்குப்பதிலாக, "படர்ந்தான், ஏகினான், கழிந்தான்; நீங்கினான், ஒழிகினான். தவிர்ந்தான்" என்பனபோன்ற பலசொற்களை அறிந்திருக்கிறான். பாட்டிசைப்பதற்குரிய சிலஒழுங்குகளை அறிந்திருப்பதனால், தனக்குத் தெரிந்தசொற்களை வைத்து, தான் அறிந்த ஒழுங்குமுறைப்படி பாடல் கட்டுகிறான். ஆகவே, இம்முறையில் பழகியிருக்கின்றான். இதுதான் புலவனுடைய அறிவு

அடுத்தாற்போல் ஒரு உழவனை எடுத்துக்கொள்வோம். அவன் இன்னின்ன விதைகள் நல்லவிதைகள் எனத் தேர்ந்திருக்கின்றான். இன்னவிதமான மண்ணில் இன்னவித நெல் நன்றாய் விளையும் என அறிகின்றான். நாற்றுவிடும்காலம், அதைப்பறிக்கும் காலம், நடும்காலம், களையெடுக்கும்காலம், காயும்காலம், நீர்பாய்ச்சும்காலம் ஆகிய வகைகளை அறிந்து அவைகளை முறைப்படிச் செய்கின்றான். அது அவனுடைய அறிவு.

அடுத்தபடி, தச்சுத்தொழில், கொல்லத்தொழில், தட்டாரவேலை, கொத்துவேலை முதலியவற்றை அறிந்தவர்களைப்பாருங்கள்! அவர்களும் தங்கள் கருவிகளை உபயோகிக்கும் முறையையும், ஒரு பொருளை எவ்வாறு செய்து முடிப்பது என்பதையும் அறிந்திருக்கின்றனர். அவ்வறிவின்படியே அவர்கள் தமது வேலையைச்செய்து முடிக்கின்றனர். அவ்வகையில் அவர்களுக்கு அறிவின்றேல் அவர்கள் வேலையைச்செவ்வையாகச் செய்து முடிக்க இயலுமா? ஆகவே அவர்கள் தொழிலில் அவர்களும் அறிவுடையவர்கள்தான்.

அடுத்தபடி சமயல்காரனைப்பாருங்கள்! பலகாரபட்சணங்கள் செய்கின்ற ஒருவனைக் கவனியுங்கள், அவன் அவ்வகையில் அறிவில்லாமலிருக்க முடியாது. ஒவ்வொரு பதார்த்தங்களுக்கும், எந்தெந்தப் பண்டங்களில் எத்துணை அளவு சேர்க்க வேண்டும் என்பதை அறிந்திருக்கின்றான். அவைகளில் ஏதேனும் ஒன்று கூடினாலும், குறைந்தாலும் பதார்த்தம் கெட்டுவிடும். கெட்டுவிட்டால் உண்பதற்கு உதவாது; அவ்வளவையும் குப்பையில் கொட்டவேண்டியதாகிவிடும். ஆகவே இவ்வகையில் அவர்களை யாரேனும் அறிவற்றவர்கள் என்று கூறமுடியுமா? அவர்களும் அறிவுடையவர்கள்தானே.

அடுத்தபடியாக இயந்திர அறிவு படைத்த ஒருவனைப்பாருங்கள்! அவன் தான் பழகிய ஒவ்வொரு இயந்திரங்களின் உட்கருவி, வெளிக்கருவி ஆகியவைகளை நன்றாய் உணர்ந்திருக்கின்றான்; எந்தெந்தக் கருவிகள் எந்தெந்த இடத்தில் எப்படி எப்படி இருக்க வேண்டும் என்பதைக் கவனித்திருக்கின்றான். ஆகவே ஒரு இயந்திரம், கெட்டுவிட்டால், அதில் எந்தக்கருவி உடைந்து விட்டது; வளைந்து விட்டது; மாறிவிட்டது; என்பதைக் கண்டுபிடிக்கின்றான். உடனே உடைந்ததற்குப்பதில்கருவியைச்சேர்க்கின்றான்; வளைந்ததை நிமிர்த்துச் சரிப்படுத்துகின்றான்; மாறியதை எடுத்துச்சரியான நிலையில் வைக்கின்றான்; இயந்திரம் சீர்ப்பட்டுவிடுகின்றது. இதற்கு அறிவு வேண்டுமா? வேண்டாமா? இத்தகைய இயந்திர அறிவு படைத்த ஒருவனை அறிவற்றவன் என்று கூறமுடியுமா?

இவ்வாறே ஒவ்வொரு அறிவாளியையும்—அதாவது தொழிலாளியையும் எடுத்துக் கொண்டால், எல்லாரும் அறிவாளிகளே; எல்லாரும் தொழிலாளிகளே; இதில் சிறிதும் ஐயமில்லை. அறிவாளி என்பவன் வேறு; தொழிலாளி என்பவன் வேறு; என்று கூறுவதற்கில்லை; அறிவாளிதான் தொழிலாளி; தொழிலாளிதான் அறிவாளி என்பதை ஆழ்ந்து யோசித்துப்பார்த்தால் யாரும் மறுக்க மாட்டார்கள்.

ஆகவே, ஒரு புலவன், உழவன், தச்சன், கொல்லன், தட்டான், சமையற்காரன், இயந்திரக்காரன் முதலியவர்களைப்போலவே, வைத்தியன், விஞ்ஞானி, வியாபாரி, தோட்டக்காரன், நெய்பவன், வாத்தியக்காரன், வாய்ப்பாட்டுக்காரன், கூத்தாடி முதலிய பலதிறப்பட்ட தொழிலாளர்களும் இருப்பார்களென அறியலாம்.

ஆனால் இத்தகைய அறிவாளிகளில்—தொழிலாளிகளில் சிலர் தாம் கற்றிருக்கும் தொழிலின் அனுபோக முதிர்ச்சியினால், வேறு சில புதிய தொழில்களைக் கண்டுபிடிக்கின்றனர். இவ்வாறு புதியவற்றைக் கண்டுபிடிப்பவர்களைச் சிறந்த அறிவாளிகள் என்று கூறுகின்றனர். ஆனால் இவர்களைச்சிறந்த அறிவாளிகள் என்று கூறுவதைக் காட்டிலும், சிறந்த உழைப்பாளிகள் என்று கூறுவதே பொருத்தமென்பது நமது அபிப்பிராயம்.

உதாரணமாக மோட்டார் இயந்திரத்தில் அதிக தேர்ச்சியும், மிகுந்த பழக்கமும் உடைய ஒருவன் இருக்கின்றான் என்று வைத்துக்கொள்ளுவோம். அவன் இடைவிடாமல், தான் பழகும் இயந்திரங்களைப்பற்றியே சிந்திப்பதனாலும், அவற்றைப் போல புதியதாக ஒன்றைச்செய்ய முயற்சிப்பதனாலும், அவனுடைய அறிவு சில அனுபோகங்களைப் பெறுகிறது. அதனால் தான் பழகும் மோட்டார் யந்திரங்களை விட விரைவிற் செல்லக்கூடியயாகவோ, குறைந்தகருவிகளுடன் எளிதில்- குறைந்த செலவில் செய்து முடிக்கக்கூடியதா வேறொன்றை அவன் செய்யக்கூடும். இதற்குக் காரணம் உழைப்பும், விடா முயற்சியுமே யன்றோ; இவைகளினால் அறிவு விசாலமடைகின்றதன்றோ?

அன்றியும் மக்கள் செய்கின்ற தொழில்களையெல்லாம் எடுத்துக் கொண்டால், அவைகள் ஜனசமூகத்திற்குப் பயன் கூடியனவாகவேயிருக்கின்றன. ஜனசமூகத்திற்குச் சிறிதும் பயன் தராத காரியங்கள் தொழில்கள் ஆகமாட்டா. இவ்வாறு மக்களுக்கு உதவியாக இருக்கின்ற தொழில்களை உயர்ந்ததென்றும், தாழ்ந்ததென்றும், அறிவற்ற தொழிலென்றும் அறிவுள்ள தொழிலென்றும் பிரிப்பது தகாது. இப்பிரிவு ஏற்பட்ட காரணம் சுயநலமே யாகும். சுயநலங்கொண்ட கூட்டத்தினர் சில தொழில்களை இழிந்தனவென்றும் அறிவற்றனவென்றும் தாழ்த்தி வைத்தினர்; அத்தொழில்களைச்செய்யும் மக்களையும், தாழ்ந்தவர்களென்றும், அறிவு குறைந்தவர்களென்றும் ஏற்படுத்தி வைத்தனர். இவ்வேற்பாடே இன்றும் நிலைத்து நின்று நம்மை வெவ்வேறாகப் பிரித்து வைத்திருக்கின்றது.

மேலே கூறிய செய்திகளை ஆராய்ந்துணர்பவர்கள், ஒவ்வொரு மனித

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

# உலக விடுதலைக்கு வழி.

## "கடவுள் என்ற வார்த்தை ஒழியவேண்டும்."

[தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

இந்த வருஷ முதலில் சென்னை சுயமரியாதை மகாநாடு, பச்சையப்பன் கல்லூரியில் கூடிற்று. அதைத்திறக்கும் பாக்கியத்தை எனக்கு அளித்தீர்கள். ஆங்கு செய்த திறப்பு உபந்நியாசத்தில், உங்கள் சுயமரியாதை இயக்கம், நாட்டுக்கு செய்யவேண்டிய பணிகளை விவரித்து எடுத்துக்காட்டியுள்ளேன். உங்கள் இயக்கம் ஒழுங்குபெற்று நடக்கவேண்டிய முறைகளையும் சுருக்கமாக குறிப்பிட்டுள்ளேன். ஆங்கு நடந்த வைபவங்களும், உபந்நியாசங்களும் உங்கள் இயக்கத்தைப்பற்றி சென்னை வாசிகளுக்கு விபரமாக தெரிவித்ததோடு, அந்த இயக்கத்தின் நோக்கங்களையும், கோரிக்கைகளையும் நன்கு தெரிவித்து வந்தன. முதல் முதலில், சமதர்ம பிரசுரங்களில், முதன்மையான சிறு புத்தகமொன்று, "சுயராஜ்யம் யாருக்கு" என மகுடமிட்டு வெளிவந்தது. முதல் முதலில், சென்னையில், சுயமரியாதையோரின் வீரமொழிகள் பல்லாயிரவர் தெரிந்து கொள்ளும்படி கர்ஜித்தன—இரண்டு நாளும் அம்மகாநாட்டில் நடந்தேரிய வைபவங்களை, நமது நகர தினசரிபத்திரிகைகளும், பொழிந்து வந்தன. அக்கூட்டம் இனிது கூடி, இனிதாகவே முடிவு பெற்றது. நமது தென்னாட்டிற்கு பிரதம நகரமாகிய சென்னையில், அன்றுமுதல் உங்கள் இயக்கம் வேரூன்றி வளர்ந்து வருவதைக் காணலாம்.

அந்த மகாநாட்டில், நான்கண்ட விசேட மொன்றை உங்களுக்கு தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை. அதாவது, உங்கள் இயக்கத்தை பரவச்செய்யும் Speakers என்று வழங்கும் பிரசார தொண்டர்களின் ஆற்றலே ஆற்றல். அநேக இயக்கங்களில் கலந்து உழைத்து வருகின்றேன். உழைத்து வந்து மிருக்கின்றேன். ஆனல், சுயமரியாதை இயக்கத்தாரைப்போன்ற பேசுந்திறமையுடையவர்கள், மற்ற இயக்கத்தில் மிகச்சில உங்கள் இயக்கத்தொண்டர்கள் பேசும் திறமையே திறமை. அந்த வேளையில் எனக்கு ஓர் எண்ணம் எழும்பியது. இவ்வாற்றலையுடைய மக்கள், ஒரு காலத்தில், அரசியல் துரையில் நுழையுங்காலை, இவர்களை வெல்வார் யார் என்ற எண்ணம் உள்ளுக்குள்ளே உதித்தது—இன்னும் சொல்லுகிறேன். இனிவரும் புதிய அரசியல் திட்டத்தை வழங்க, நமது சுயமரியாதையோர், தேர்தலில் தலையிடுவார்களேயாகில், Sweep the Polls என்று சொல்லும், தேர்தலை முற்றும் அவர் கைகொள்ள என்னதடை? இவர்கள் முனயார் நிற்பார்கள்? இவர்கள் முன் யார் நிகர்? இந்து மகாசபையா இருப்பினும், முஸ்லீம்லீக்கா இருப்பினும், எந்த கட்சியாய் இருப்பினும், சுயமரியாதைத் தொண்டர்கள் முன், பேசும் திறமையில் நிகர் யாருமில்லை என்றே சொல்லலாம்.

இன்னொருவியக்கத்தக்கக்காட்சியும் ஒன்றுண்டு. அதாவது, சொற்பொழிவாற்றும் திறமை பெற்ற பெண்மணிகள் உங்கள் இயக்கத்தில் தோன்றியுள்ளதுபோல், வேறு எந்த இயக்கத்திலும் காண்பதரிது. தேசீய காங்கிரசில் கடந்த 40 வருஷங்களாக ஒரு சரோஜனி தேவியைத்தான் பெற்றுளது, இருந்தாலும், இரண்டொரு பெண்மணிகள் தான், மகா காங்கிரசில் பேச வன்மையுடையார். ஆனல், உங்கள் இயக்கத்தில், பேசும் திறமை பெற்ற பெண்களுக்கு கணக்கே இல்லை என்று சொல்லலாம். ஆணுக்கும், பெண்ணுக்கும் பேசும் திறமையில் சமதத்துவம் உங்கள் இயக்கத்தில் தான், நான் கண்டேன். இந்தியப் பெண்கள், அரசியல் துறையில் நுழைவார்களே யாமாகில் தேர்தலில் சுயமரியாதையோரை வெல்வாரும் உளரோ? நமது மகாநாடுகளில், இன்னொரு விசேடமும் உண்டு. அதாவது நமது மகாநாடுகளில், பெண்கள் உண்மையாகவே' சமத்துவத்துடன் தங்கள் மகாநாட்டை தனிப்பட நடத்தும் திறமையேதிறமை! மற்றஇயக்கங்களில், ஆண்கள் நடவடிக்கையில், பெண்கள், ஒரு Adjunct ஆக, அதாவது ஒட்டுவைத்த கூட்டமாக காணப்படுகின்றனர். ஆனல், நமது இயக்கத்தில், பெண்கள் தனி கூட்டமாகவே இருந்து, ஆண்களுடன் சமத்துவமாகவே நடவடிக்கைகளை நடத்துகின்றனர். இவைகளின் சிறப்பை யோசிக்குங்காலை, உங்கள் இயக்கத்திற்கு; ஒரு மகத்தான வருங்காலம் இருக்கிறது. அதற்கு There is a Great future என்று சொல்லலாம். இனிவருங்காலத்தில், உங்கள் இயக்கம், இந்திய உலகிற்கு சிறந்ததோர் நன்மை பயக்கத்தக்க கருவியாக நிற்கப்போகின்றது. ஆனல், அந்த எதிர்கால செல்வாக்கு உங்கள் தளரா வன்மையையும், ஆற்றலையும் விடா முயற்சியையும் பொருத்தது.

இன்னொரு சம்பவத்திலும், உங்கள இயக்கம் Unique ஒப்பற்றதெனக் கூறல்வேண்டும். அது என்னவெனில், தீண்டாதவர்களெனப்படும் மக்கள், உங்கள் இயக்கத்திலொன்றில்தான், தாங்கள் தீண்டாதவர்களென மறந்து, சகலருடன் சரிநிகர் சமத்துவத்துடன் பழகும் காட்சியைக்காணலாம்! நானும் கடந்த 40 வருஷமாக, மற்ற இயக்கங்கள் தீண்டாதாரை பக்த்தும் மாதிரியும் அவர்கள் அவைகளில் கலந்து கொள்ளும் கலப்பையும் பார்த்து வருகின்றேன். அந்த இயக்கங்களிலெல்லாம் தீண்டாதவன் தீண்டாதவனென்றே எண்ணிக்கொண்டிருக்கின்றான். In all other associations, he is conscious of his inferiority என்று சொல்லலாம் உங்கள் இயக்கத்தில், நீர்த்துளியானது பெரும் சமுத்திரத்தில் கலந்துகொள்வதைப்போல், தீண்டாதவன், உங்கள் இயக்கத்தில் பூரணமாகவே கலந்துவிடுகிறான். He dissolves him-self into your body social and completely merges in your broad self-respecting humanity நமது இயக்கத்தில், பஞ்சமன், தீண்டாதவன், ஆதிதிராவிடன் என்ற இழிவுற்ற கொள்கைகளை மறந்து, ஜனசமூகத்தில். சீவன் பிரமத்துடன் ஐக்கியமாகும் என்று சொல்லும் கதைபோல், ஐக்கிய முக்தி அடையும் சமத்துவத்தை உங்கள் இயக்கமொன்றில் தான் அவன் பெறுகின்றான். இதற்கு அத்தாட்சி வேண்டுமானல் நமது இயக்கத்தில் கூடிவாழும் மனிதர் சமத்துவத்தையும், குரு குல கூட்டங்களில் கூடி வாழும் மக்களின் வேற்றுமைகளுமே போதுமானது! (In fact in our movement, untouchability is no problem at all, for, there is no untouchability in Self-Respect movement In fact, untouchability has ceased to be a problem among the Self-Respectors except in relation to current politics. Once the Self-Respectors come into power the very name of untouchability, Panchamas, pariahs, Adidravidas will be expunged from all Public records in the land.) தீண்டாமை என்ற தோஷம், சுயமரியாதை இயக்கத்திற்கே கிடையா. முதலிலும் தீண்டாதவனல்ல, நடுவிலும் தீண்டாதவனல்ல, கடையிலும் தீண்டாதவனல்ல. ஒரு காலத்தில், புத்தர் என்ற ஓர் பெரியார் இருந்தார். அவர் பிச்சை எடுத்து வருங்காலை, ஸுனித்தா என்ற தீண்டாதவன் அவருக்கு வெகு தூரத்தில் நின்று அவரைத் தரிசிக்க முயன்றான். அவனை புத்தர்காண மற்ற குலத்தோர்விடவில்லை. இதைப் பார்த்திருந்த புத்தர், ஸுனிதாவை அருகாமையில் அழைத்து, "ஸுனிதா இங்கே வா" என்றார். அதுபோலவே, சுயமரியாதை யோரும், யாராயிருப்பினும், "இங்கு வாருங்கள், சரிசமத்துவத்தைப்பெருங்கள், சுக வாழ்வை அடையுங்கள்" என்று கூவியழைக்கும் தன்மையுடையவர்களென அறிக.

சுயமரியாதையோருக்கு மதங்கள் ஒழிந்து விட்டதென இன்று கூறலாம். இந்த இயக்கம், முதலில் லூத்தர் மிஷின் மதத்தைப் Luthern Protestantism போல், மதங்களைசீர்திருத்தும் இயக்கமாக (Reformation) ஆரம்பித்து, இன்று "கடவுளென்ற" பெயரையே, அகராதியிலிருந்து எடுத்துவிடும் போல் தோன்றுகின்றது. உங்கள்இயக்கத்தால், தமிழ் நாட்டில், பல்லாயிரவர் வாயில் 'கடவுளென்ற" பெயரை பயபக்தியோடு உச்சரிப்பது போய், பரிகாசம் செய்யும் நிலைமையில் வந்து விட்டது. "கடவுளென்ற ஒருவர் இருப்பாராமாயின், அவர் என்முன் வருவாராயின், அவர் கழுத்தை அறுப்பேன்" என்று ஒரு சுயமரியாதையோர் (Self-Respector) எழுதுகிறார்! இவ்வித மனப்பான்மை, நமது தமிழ் நாட்டில் இவ்வளவு சீக்கிரத்தில் தோன்றியதற்கு, நமது தோழர் ராமசாமி செய்த அருந்தொண்டும் உழைப்புமேயாகும். ஆங்கில தேசத்தில், "கடவுளை" மதியாதார் கோடிக்கணக்காக இருக்கின்றார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் ஆங்கில மாதா கோயில்களை தரிசிப்போர் மிகவும்குறைந்து விட்டனர். நான் அங்கு சென்றிருந்தகாலை [1902] [St. Pauls Church] செண்ட் பால் கோயிலில் பல ஞாயிற்றுக்கிழமைகளில்சில கிழங்களையும், நீண்ட தொப்பி போடும் சில பூஷ்வாக்களையும் (Bourgeois) பார்த்தேதவிரயொழிய ஆங்கு தொழில் புரியும் கோடான கோடி மக்களை பார்த்ததில்லை. நான் குடியிருந்த இடம் (London Musuem) லண்டன் காட்சிசாலையை அடுத்த [Great Ormund street] பெரிய ஆர்மண்ட் தெருவு. அங்கு ஒரு சாப்பாடு, ஜாகை, முதலியவைவயை அளிக்கும் விடுதியில் தங்கி இருந்தேன். அதை ஆண்டுவரும் லாண லேடி [Landlady] தனக்குப் புத்தி வந்தது முதல், எந்தக் கோயிலுக்கும் போய் அறியாளாம்! அந்த அம்மாளுக்கு அப்போது வயது 40 இருக்கும். ஏனென்று கேட்டதற்கு, கடவுளை தரிசிக்கத்தனக்கு சாவகாசம் [leisure] அந்த 25 வருஷங்களாக கிடைக்கவில்லையாம்! இரவும் பகலும் ஓயாது உழைப்பவ

(தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

பாரசிகர் (Parsees) களை எடுத்துக்கொண்டால், அவர்கள் இந்தியாவிற்குள் பிரவேசித்து சுமார் பதின் மூன்று நூற்றாண்டுகளாகியும் இப்போதுங்கூட தங்கள் கடவுளைப்பற்றிய இரானிய பாஷையிலேயே துதிக்கின்றனர். பேர்போன பண்டிதர்களுங்கூட அந்தப் பாஷையிலுள்ள தாத்பரியங்களில் மாறுபாடுடையவர்களாக இருப்பதுமன்றி, அந்தப் பாஷை இப்போதைய ஜனங்கள் ஒரு சிலருக்காவது விளங்குவதும் இல்லை.

பம்பாய்க்குச் சற்று தெற்கே வசித்து, இப்போது பல இடங்களிலும் பரவியுள்ள ஒரு கூட்டத்தாரைப் பல நூற்றாண்டுகளாக, ஹிந்துக்களென்றே பலரும் எண்ணியிருந்தார்கள். அவர்களெண்ணெய்ஆட்டிவிற்றுஜீவித்து வந்ததால் எண்ணெவியாபாரிகள்(Telis) என்னும் வாணிகர்களாக அழைக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களிடம் ஒருபுதுமை விளங்கியது.

அவர்களால் செய்யப்படும் பூஜைகளிலும், வைதிகச் சடங்குகளிலும் அவர்கள் ஒரு நூதன பாஷையை உபயோகித்து வந்தனர். சுமார் நூறுவருடங்களுக்கு முன்னர்தான் டாக்டர் வில்சன் (Dr. Wilson) என்ற ஒரு கிறிஸ்துவப்பாதிரியார் அவர்களுடைய பழக்க வழக்கங்களைப் பரிசீலனை செய்து வருகையில் அவர்களுடைய பாஷை ஹீப்ரு (Hebrew) பாஷையின் மருஉமொழி யென்பதாகக்கண்டு பிடித்தார். பென்-இ-இஸ்ரேபல் (Ben-i-Israels) என்று வழங்கப்படும் மேற்குறித்த கூட்டத்தார், அநேக நூற்றாண்டுகளுக்கு முன் கிறிஸ்துவ மதம் ஏகாதிபத்யம் செலுத்திய அக்காலத்தில், இந்தியாவிற்குக் குடியேறிய சில யூதர் (Jews) களின் சந்ததிகளென இப்போதுதான் அறிகின்றோம். இந்த ஜனங்கள் சகல காரியங்களுக்கும், சர்வ சாதாரணமாக வழங்கும் மராத்தி பாஷையையே கையாண்ட போதிலும் வைதிக சடங்குகளில் மாத்திரம் ஹீப்ரு பாஷையையே இன்றும் உபயோகிக்கின்றனர்.

தங்களைப்பின்பற்றும் ஜனங்களிடத்து மத நம்பிக்கையை நிலைநாட்டவும், அவர்களுடைய மனத்தில் (பக்தி எனும்) ஓர் வித மயக்கத்தை வேரூன்றவும், முன்னால் கூறப்பட்ட குலகுருக்களும் மதப்பாதுகாப்பாளர்களும் பிரயோகிக்கும் கருவி கரணங்களில் —புத்திக்கே விளங்காத பலவித

# மதப்பாதுகாப்பாளர்கள்

டாக்டர் பராஞ்சிபை அவர்கள் எழுதியதின் மொழிபெயர்ப்பு.

(சென்ற வாரத்தொடர்ச்சி)

மான சாஸ்திர சடங்குகளோ எல்லா மதங்களிலும் பிரதானமாக இருக்கின்றன.

இவ்விதச்சடங்குகள் எல்லா வகுப்பாளர்களுக்கும் பொதுவாகவும், வெவ்வேறு விதமாகவும் இருக்கின்றன. உதாரணமாக, மிகநீண்ட கோட்டைகளும், ஒரு விதப்பாதிரிக்காலர்களும், சாதாரண மனிதர்களுக்கும் கிறிஸ்தவப்பாதிரிகளுக்கும் உள்ள வேறுபாட்டை காண்பிப்பதாக இருக்கின்றன. விலைமதிப்புள்ள அநேக சாமான்களை அதிபக்தியோடு பூசைகளுக்கெனப் பூட்டி வைக்கப்பட்டு, அவைகளைப் பற்றிய விஷயங்களில் பிறர் தலையிடுவதானது, பெரிய அபராதமாகவும், அவைகளைத் தடுக்க மிகக்கொடிய தண்டனைகளையும் நியமித்துப் பாதுகாக்கப்படுகின்றன. கோவில்களிலே சுவாமிகள் என்னும் விக்கிரகங்களைப் பொழுதொரு வண்ணமாகப் பராமரிப்பது, அதற்கு அபிஷேகம் செய்வது, தூப தீபபுஷ்பங்களால் கருமமைமூட்டுவது—ஆகிய இவைகளே பூசாரிகளின் முக்கிய கடமைகள். ஒரு மானிடனுக்கு மிக உத்சாகத்திற்கு வேண்டிய, அன்ன பானதிகளாகிய சகல சாதனங்களும் அந்த விக்கிரக (கல்) சாமிகளுக்கும் வேண்டுமென்பதாக, மேற்கூறிய புரோகிதப்பூசாரிகள் கூடி, அவைகள் ஒவ்வொன்றையும் முறையே அவற்றிற்கு எதிரே ஒவ்வொன்றாக நிவேதனம் செய்வதையேகடமை யெனக்கங்கணம் கட்டிக்கொண்டு சேவிக்கின்றனர்! பக்தகோடிகள் அவைகளுக்குக் கொடுக்கணக்கான நிதிகளைக்காணிக்கைகளாகச் செலுத்துகின்றனர்!! அவைகள், சாமிகளின் தரகர்களாகிய மேற்கூறிய பூசாரிச்சன்னிதிகளால் கொள்ளையடிக்கப்பட்டு, அதன் நிமித்தம் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டு, அதற்காக சர்க்காரையும் சமாதானம் செய்விக்க அழைக்கின்றனர். மேற்குறித்த கடவுள்களுக்கும், மனிதர்களுக்கு வருவதுபோல எல்லாவித நோய்களும் வருகின்றதுந் தவிர, வருஷந்தோறும் குறித்த ஒரு மாதத்தில் வியாதிவாய்ப்பட்டு, குறிப்பிட்ட நாட்களில் உயிரும் இழக்கின்றன! சிலகோவில்களிலுள்ள சாமிகளுக்கு ஒன்றோ அல்லது பலவோ மனைவிகளும் வேண்டுமாம்; அதற்காக அறிவில்லாத ஜனங்கள் தங்கள் இளமங்கையரைச் சாமிக்குத் தொண்டாற்றி நற்கதியடையுமாறு பொட்டுக்கட்டித்தத்தம் செய்துவிடுகின்றனர். தேவதாசிகளான அம்மங்கையர், உண்மையில் கோவில் பூசாரிகளுக்கும், அவர்களது நண்பர்களுக்கும் பெண்டாகி, எங்கும் பரதாசிகளாகப் பரிணமிப்பது வெளிப்படை! சில வருஷங்களுக்கு முன்னர், கோவில்களுக்குத் தேவதாசிகளைப்பொட்டுக்கட்டி விடும் வழக்கத்தைத் தடுப்பதற்காகச் சில சீர்திருத்தக்காரர்கள் முன் வந்தபோது, வைதிகக் கோஷ்டியார் "ஐயோ மதமே போய்விடுமே" என்பதாகப் பெருத்தகூக்குரல் எழுப்பினார்கள். பம்பாய் அரசாங்கத்தாருங்கூட இவ்விதச்சீர்திருத்தத்திற்கு விரோதமாக எழுந்தார்கள்! ஆனால் நல்ல காலமாக சென்னை அரசாங்கத்தார் அதன் சட்டசபையில் அங்கத்தினராகவிருந்த ஒரு மாது சிரோன்மணியின் பிடிவாத நன் முயற்சியால் சட்டபூர்வமாகப் பொட்டுக்கட்டுவதை தடுத்தனர்.

வைதிகச் சடங்குகளெல்லாம் அதிகச் சிக்கல்களாக இருக்கின்றனவாயினும் புரோகிதர் அவற்றை ஒரு சிறிதும் தவறாது செய்வதிலேயே நோக்கமாய் இருக்கின்றனர். மணை போடுவதற்குப் புற்று மண், ஹோமம் வளர்ப்பதற்கு சம்ஹிதைகளெனப்படும் ஒருசில மரங்களுடைய குச்சிகள் விசேஷம் என்பதாகக் கருதப்படும். சில மரஞ்செடிகளுடைய புஷ்பங்கள் பச்சரிசி, நெய்—இவைகள் வைதிகச்சடங்குகளுக்கு அதிமுக்கியம். வைதிகச்சடங்கைச் செய்யும் ஒரு பிராமணன்,-தனது புரோகிதன் மேற்குறித்த பூஜா பாத்திரங்களுக்கிடையில் தக்க ஆசனத்திலமர்ந்து, சமஸ்கிருத பாஷையில் மந்திரங்களை ஓதும்போது (அந்தமந்திரங்களைத் தானே உச்சரிப்பதென்ற பாவனைக்காக, முக்கிய சந்தர்ப்பங்களில் என் அல்லது எனது எனும் பொருள் படும்படியான "மம" என்ற சொல்லைச் சொல்லிக் கொண்டு) தனது பூணூலைச் சில சந்தர்ப்பங்களில் வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்திற்கும், சில வேளைகளில் அதற்கு மாறாகவும் மாற்றிப் போட்டுக்கொண்டு, மூக்கையும், காதையும் பிடிப்பதுமாக, ஏதேதோ புரோகிதன் சொன்ன மாதிரியெல்லாம் ஆடுகின்றான். இத்தகைய வைதிகச்சடங்குகளில் ஒன்றையேனும் விவரிக்க வேண்டுமானால் ஒரு பெரிய புஸ்தகமாகவே எழுதலாம்.

இந்தமாதிரியான இன்னும் மிகச்சிக்கலான பெரியசடங்குகளை, எல்லாநாடுகளிலும் காணலாம். செர்விஸ் [Service] களென்னும் பூஜைகளை ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் [மாதா] கோவில்களில் செய்வதைப் பிறர் பார்த்தால், ஏதோ குருட்டுப் பாடமாகச் செய்யும் கிரியைகள் என்பதாகத்தெரியுமே ஒழிய, வைதீகக்கிறிஸ்தவர்கள் அவைகள் ஒவ்வொன்றிற்கும், ஒவ்வொரு அந்தரங்கத் தாத்பரியத்தைக்கற்பித்துக் கொண்டு மனமுருகுவதாகத் தென்படாது. மதப்பாதுகாப்பாளர்கள், கடவுளை நினைப்பதற்காக உபயோகப்படுத்தும் மந்திர தோத்திரங்களை ஒருவிதப் புதிய நாதத்தோடு உச்சரிக்கும்படியாக ஏற்படுத்தியிருப்பதை,—கிறிஸ்துவ, பாரசிக, யூத, ஹிந்து, மகமதியம் எனப்படும்—ஒவ்வொரு மதங்களிலும் காணலாம்.

மனிதர்களுடைய ஹிருதயத்தில் கடவுளைப்பற்றிய ஓர்வித பயத்தையுண்டாக்குவதற்காகவே அவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, கிறிஸ்து நாதருடைய பிரசாதமாகச் சாராயத்தைக் கோப்பைகளில் ஊற்றிப்பூஜா [Communion] காலங்களில், பாதிரிகள் பருகுவது, ஹிந்துக்களுக்கு எவ்வளவு வெறுப்பாய் தோன்றுகின்றதோ அதேபோல், வைதிகச்சடங்குகளுக்காகத் தங்களுடைய நிரிகரணங்களையும் புனிதமாக்குவதற்கு மிகச்சிலாக்கியம் என்பதாக [பசுவின் சாணம், நீர், பால், தயிர், நெய்கலந்த] பஞ்ச கோமயத்தை நமது ஹிந்து பக்தர்கள் பருகுவதை ஐரோப்பியர் பார்த்தால்

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

# வைதீகப்பார்ப்பானுக்கும், கோயில் பிரவேசப்பார்ப்பானுக்கும் சம்பாஷணை.

(தேசீயத்துரோகி)

வைதீகபார்ப்பனர்:—என்ன சாஸ்திரிகளே! நீங்கள்கூட பறைப்பசங்களைக் கோயிலுக்குள் விடுவது சரியென்று சொல்லுகிறீரே! நீரே இப்படிச்சொல்ல ஆரம்பித்து விட்டால் பிறகு நம்ம சாஸ்திரங்கள் என்ன ஆவது?

கோயில் பிரவேச பார்ப்பனர்:—ஆமாம்! என்ன பண்றது! இனி சாஸ்திரத்தையும் மதத்தையும் சொல்லி அந்தப்பசங்களின் சுதந்தரத்தைத் தடுக்க முடியாது. அந்தப்பசங்களும் நம்ம சாஸ்திரத்தில் என்ன சொல்லுகிறது என்று தெரிந்து கொண்டார்கள். அவர்கள் ஏதாவது கேட்கும் போது நாம் சாஸ்திரமென்றோ மதமென்றோ சொன்னால், உடனே அவர்கள் நீங்கள் அவைகளின்படி நடக்கிறீர்களா? என்று கேட்டு விடுகிறார்கள்? அதற்கு நம்மால் சரியான பதில் சொல்ல முடியவில்லை. ஆகையால் அவாள் சொல்றதை ஆமோதித்தால்தான் நம்மையும் நாலுமனுஷாள் நல்லவன் என்று சொல்லுவான்கள் போலிருக்கிறது?

வை—பா. இதற்காகவா நாம் பயந்து விடுகிறது? பிறகு நம்ம ஜாதிக்கே ஆபத்து வந்துவிடுமே. சாஸ்திரம், பிராமணனாகிய நம்ம சௌகரியத்திற்கு ஏற்படுத்தியது தானே! சாஸ்திரத்திற்கே அதிகாரிகள் நாம் தானே! நாம் அதன்படி நடந்தால் என்ன? நடக்காவிட்டால் என்ன? நம்மைக்கேட்க இந்தப் பசங்களுக்கு என்ன அதிகார முண்டு?

கோ. பி. பா.:—சரிதான் காணும். நீர் சொல்றதை யார்காதுகொடுத்துக்கேட்கிறார்கள். சாஸ்திரத்தின்படி நடந்தால்தானே நீ பார்ப்பான்? நீ, பார்ப்பானுக்குச் சொல்லப்பட்ட எல்லாக்கர்மாக்களையும் செய்கிறாயா? இங்கிலீஷ் படித்து உத்தியோகம் பண்ணும்படி உங்கள் சாஸ்திரம் சொல்லுகிறதா? காப்பி கிளப்புவைத்திருக்கிறவனையும், கள்குடிப்பவனையும், கப்பலேறிச்செல்பவனையும், மிலேச்சர்களாகிய ஆங்கிலேயர்களுடன் கைகுலுக்குகிறவனையும் பார்ப்பான் என்று சொல்ல உங்கள் சாஸ்திரம் இடங்கொடுக்கிறதா? இப்படிப்பட்டவர்களையெல்லாம் பார்ப்பனர்கள் என்று நீங்கள் ஒப்புக்கொண்டு அவர்களுக்குஎல்லாவிடங்களிலும் சமத்துவம் வழங்கும் போது நாங்களும் ஏன் சமத்துவம்பெறக் கூடாது? என்று கேட்கிறார்களே இதற்கு என்ன சொல்வது?

வை.-பா:—இதற்குத்தானா சமாதானம் சொல்ல முடியாது? காயத்திரிஜெபம் பண்ணும் சுதந்தரம் பார்ப்பானுக்குத்தான் உண்டு. ஆகையால் அவன் எந்தப் பாபத்தைச்செய்தாலும் காயத்திரிஜெபம் பண்ணி அதை நீக்கிக்கொள்ளுகிறான். அதனால் அவன் சுத்த பார்ப்பானாகி விடுகிறான் என்ற சமாதானத்தைச்சொல்லுமே.

கோ-பி-பா:—சரி, நீர் சொல்லற சமாதானத்தையே சொல்லுவதாக வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுது, அந்தக் காயத்திரி ஜெபத்தை எங்களுக்கும் கற்றுக்கொடுங்களேன்; நாங்களும் அதை ஜெபித்துக்கொண்டு பார்ப்பானாகி விடுகிறோம்; என்று சொன்னால் என்ன சொல்லுகிறது?

வை-பா:—காயத்திரி ஜெபத்தைச் சூத்திரனுக்கும், பஞ்சமனுக்கும் கற்றுக்கொடுக்கச் சாஸ்திரமில்லை. என்று சொல்லி விட்டால் போகிறது.

கோ-பி-பா:—ஆரிய சமாஜத்தைச்சேர்ந்தவர்கள், எல்லோருக்கும் காயத்திரி மந்திரத்தைக் கற்றுக்கொடுத்துப்பார்ப்பானாக்கி விடுகிறார்களே; அந்த மாதிரி நீங்களும் செய்யுங்களேன்; என்று சொன்னால் என்ன சொல்லுகிறது?

வை-பா:—ஆரிய சமாஜத்தார் செய்வது தப்பு. அவர்கள் இந்து மதத்தைச்சேர்ந்தவாள் அல்ல; அவாள் முக்கால் நாஸ்திகாள்; என்றுசொல்லி விடுவதுதான் நல்லது.

கோ-பி-பா:—சரி நீர் சொல்ற சமாதானத்தைச் சொன்னால் எல்லாரும் கேட்பார்களா? சுயமரியாதைக் காரர்கள் கேட்கும் கேள்விகளுக்குச் சமாதானம் சொல்ல முடியாமலிருக்கிறதே. அவர்கள் ஒரேயடியாக, "சாஸ்திரங்களெல்லாம் பொய் அவைகள் பார்ப்பனர்களின் வயிற்றுப்பிழைப்புக்காக ஏற்பட்டவை. மனிதர்களுக்குள் சிறிதும் வித்தியாசமே இல்லை. எல்லாமனிதர்களுக்கும் எல்லாச் சுதந்தரங்களும் உண்டு. உலகத்தில் உள்ள வித்தியாசங்கள் எல்லாம் மனிதனுல் ஏற்பட்டவைதான், அதுவும் சுயநலத்தால் ஏற்பட்டவைகள்" என்று கூறி சமதர்ம வாதம் புரிகிறார்களே அவர்களை எப்படிச் சமாதானப் படுத்த முடியும்?

வை-பா:—அடே அப்பா! சுயமரியாதைக்காரர்களா? அவர்கள் பெயரைக்கேட்டவுடனேயே எனதுவயிறு கலங்குகிறது. எல்லாம் அவர்களால் வந்த வினைதான், அவர்கள் சொல்லும் வாதங்களுக்கு ஒன்றும் சமாதானம் கூறமுடியாதுதான். அவர்கள் கொடுத்த சாட்டையால் தான், நம்ம ராஜகோபாலாச்சாரிகூட இப்பொழுது கோயில் பிரவேசத்தைப்பற்றி அதிதீவிரமாகப் பிரசாரம் பண்ணுகிறார். அவர்களுக்குக்கூற வேண்டிய சமாதானம் ஒன்றுதான். நீங்கள் நாஸ்திகர்கள், உங்களுக்கு ஒன்றும் சொல்லமுடியாது. என்று சொல்லிவிட வேண்டியதுதான். மற்றவர்களிடமும், அவர்களைப்பற்றி "நாஸ்திகர்கள், மதத்துரோகிகள், தேசத்துரோகிகள்" என்றுகூறிவிட்டால் சரியாகப்போய்விடும். ஆகையால் அதைப் பற்றிக் கவலை வேண்டாம்.

கோ-பி-பா:—ஆமாம்! இவ்வளவு சிரமந்தான் நமக்கு எதற்கு? நம்மால் தான் சாஸ்திரத்தின்படி நடக்கமுடியவில்லை. ஏதோ சும்மாவாவது சாஸ்திரம்! சாஸ்திரம்! என்று சொல்லிக் கொண்டு வருகிறோம். ராஜகோபாலாச்சாரியார் முதலியவர்கள் சொல்லுகிறபடி கோயில்களில் ஆதிதிராவிடர்கள் முதலான தாழ்த்தப்பட்டவர்களை யெல்லாம் விட்டு விட்டால் தான் என்ன? சாஸ்திரம் போனுல் போகிறது? இனிமேல்தானு சாஸ்திரம்போகவேண்டும், அதுதான் முன்னமே போய்விட்டதே!

வை-பா:—அடவைத்தியமே! உமக்குச்சிறிதும் விஷயம் புரியவில்லையே. ஏதோ; சாஸ்திரம், மதம், என்று சொல்லிக்கொண்டிருப்பதனுல்தான் கொஞ்சமாவது நமக்கு மதிப்பிருக்கிறது. நம்மை ஒன்றுந்தெரியாத பாமரமக்களாவது உயர்ந்த ஜாதியென்று நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள். இல்லாவிட்டால் அதுவும் போய்விடுமே! என்ன செய்கிறது?

கோ-பி-பா:— இப்பொழுதுதான் நமக்கு என்ன மதிப்பிருக்கிறது? நம்மை எவன் மதிக்கிறான்; இனிமேல் தானு நம்முடைய மதிப்புக் கெட வேண்டும்? யார் நமது வார்த்தையைக் கேட்கப்போகிறார்கள்?

வை பா:—அப்படியா? எத்தனையோ சோணகிரிகள் இல்லையா? கும்பகோணத்தில் ராவ்பகதூர் முத்துக் குமாரசாமிசெட்டியார், அவர்கள் யார் போன்றவர்கள் இல்லையா? அவர்களெல்லாம் நமக்குக் கௌரவம் கொடுப்பதால் தானே நம்ம சாஸ்திரத்தையும் நம்புகிறார்கள்? அவர்கள் கோயில் பிரவேசத்திற்கு எதிராக இல்லையா? அவர்களைப்போல இன்னும் பத்து பணக்காரச்சூத்திரான் நம்மை ஆதரித்தால் போதாதா?

கோ-பி-பா:—ஓ கோ! கோ! இப்பொழுதுதான் விஷயம் புரிந்தது! நாம் சாஸ்திரத்தின்படி நடக்காவிட்டாலும், நமக்கு அதில் நம்பிக்கையில்லாவிட்டாலும், நாம் சாஸ்திரங்களைத் தெய்வீகமானவைகள் என்றும், கடவுளால் ஏற்பட்டவைகள் என்றும், அவைகளை மீறி நடந்தால், பாவம், மதம் போய் விடும், தோஷம் சம்பவிக்கும் என்று பிரசாரம் பண்ணுவதனுல் நமக்கு லாபமுண்டு என்று தெரிந்துகொண்டேன். இம்மாதிரி பிரசாரம் பண்ணினுல்தான், ஒன்றுந்தெரியாத பார்ப்பனரல்லாதார் நம்மைமதிப்பார்கள், நாமும் அவர்களை மிரட்டி மதத்தின்பேராலும், சாஸ்திரங்களின் பேராலும் காசுபறிக்கலாம் என்று சொல்லுகிறீர். சரி. இனிநானும் கோயில் பிரவேசப்பேச்சைவிட்டு விடுகிறேன். எதிர்ப்பிரசாரம் ஆரம்பித்து விடுகிறேன்.

வை-பா:—சந்தோஷம். அதுதான் சரி. இப்படிச்செய்தால்தான், சுயமரியாதைக்காரர்கள் தேசாதிகாரிகளாக வரும் வரையிலாவது நம்முடைய சூழ்ச்சிகள் நிலைத்திருக்கும். இன்றேல்பிராமணீயமே அழிந்துபோகும்.

---

## திருமங்கலம்

---

### சுயமரியாதைத் தோழர்கள் சொற்பொழிவு.

---

இவ்வூரில் வாலிப நாடார் வாசக சாலையின் 3. வது வருட முடிவு விழா 9—11—32 மாலை 7 மணிக்குச் சுயமரியாதை இயக்கத்தோழரான அட்வகேட் திரு. எஸ். லக்ஷ்மிரதன் பாரதி எம். ஏ. பி. எல். அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் சாத்தான்குளம் திரு. அ. ராகவன், பழனி சுவாமி சிவநேசம், திண்டுக்கல் காளிதாஸ் முதலியோர்கள் பேசினுர்கள்.

திரு. ராகவன் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் தத்துவங்களைப்பற்றியும், மதத்தினுல் ஏற்படும் கேடுகள் பல என்றும், மக்கள் யாவரும் சமத்துவமாக வாழவிடாமல் தடுக்கும் அந்தக் கடவுள், மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக நிற்கும் அந்தக்கடவுள், ஒரு சிலர் தொட்டவுடன் இறந்துவிடும் அந்தக்கடவுள், நாசமாய்ப்போனுலும் பரவாயில்லை என்றும், இன்னும் இயக்கக்கொள்கைகளைப்பற்றியும் தெளிவாகப் பேசினுர்.

பின் திரு. சிவநேசம். திரு. காளிதாஸ், ஆகியவர்கள் பேசினுர்கள். திரு. ரத்தினம் சுயமரியாதைக் கீதங்கள் பாடிச் சபையோர்களின் மனதைக் கவர்ந்தார். தலைவர் அவர்கள் முடிவுரையாகச் சுயமரியாதை இயக்கம் தீவிரமாக வேலைசெய்ய வேண்டுமென்றும், கட்டுப்பாடாகத் திட்டங்கள் அமைத்து வேலை துவக்க வேண்டுமென்றும், வாலிபர்களின் கடமை என்ன என்பது பற்றியும் விளக்கமாகப் பேசினுர்.

பிறகு திரு. மணிமாறன் அவர்கள் வந்தனோபசாரம் கூறிய பின் கூட்டம் இரவு 11 30 மணிக்கு முடிவடைந்தது. வாசக சாலையின் சார்பாய் ஒரு சமபந்தி போஜனமும், சிறப்பாய் நடந்தேறியது என காரியதரிசி எழுதுகிறார்.

---

# குடி அரசு.

ஈரோடு 1932 நவம்பர்மீ 13-உ


## வரவேற்கிறோம்.

—:0:—

சுமார் 10 மாதங்களாக, மேல் நாடுகளில் சுற்றுப் பிரயாணஞ் செய்த நமது இயக்கத் தோழர்களான ஈ. வெ. ராமசாமி அவர்களும், எஸ். ராமநாதன் அவர்களும், எப்பொழுது வருவார்கள், வருவார்கள் என்று நமது இயக்கத்தோழர்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். நமது தோழர்களாகிய ஈ. வெ. ராமசாமி அவர்களும், எஸ்.ராமநாதன் அவர்களும், ஏனையசில இயக்கத் தலைவர்களைப்போல சுயநலமே பெரிதெனக்கருதுபவர்களல்லர். உண்மையிலேயே, நமது நாட்டின் ஏழை மக்களுக்கு, அரசியலிலும், சமூகத்திலும், மதத்திலும் உள்ள கட்டுப்பாடுகளும் தடைகளும் ஒழிந்து மக்களனைவரும் சமவுரிமை பெற்று இன்புறவேண்டுமென்னும் நோக்கத்துடனேயே நமது சுயமரியாதை இயக்கத்தைக்கண்டு அதற்காக உழைத்து வருகின்றனர். இவர்கள் மேல் நாட்டுச் சுற்றுப்பிரயாணம் செய்யப்போனதும், தங்கள் சுயநலத்தைக்கருதியோ, பெருமை புகழ்கள் சம்பாதிப்பதைக் கருதியோ, மற்றும் சிலரைப்போல் அரசாங்கத்தாரின் பிரதிநிதிகள் என்ற முறையில் அரசாங்கத்தாரின் பணச்செலவிலோ, அல்லது பொதுஜனப் பிரதிநிதிகள் என்ற முறையில் பொது ஜனங்களின் பணச்செலவிலோ சென்றவர்களுமல்லர். ஆனால், சுயமரியாதை இயக்கத்தை இன்னும் எவ்வாறு சிறந்த முறையில் நடத்திச் சென்றால்; அவ்வியக்கம் நமது நாட்டு ஏழை மக்களுக்குப் பூரணமான சமத்துவத்தையளிக்கும் என்பதை நிர்ணயிக்கும் பொருட்டு, மேனாட்டில் உள்ள பற்பல தேசங்களிலும் சமுதாய முன்னேற்ற நிலைமைகளையும், அவர்கள் சமுதாயத்துறையில் சிறந்து விளங்குவதற்கு எடுத்த வழிகளை அனுசரித்தார்கள், அனுசரிக்கிறார்கள் என்பதையும் நேரே கண்டறிந்து வரும் பொருட்டே சென்றார்கள். ஆகையினால் தான அவர்கள், மேனாட்டிற்குப் புறப்படும் காலத்திலும், எவ்வித ஆடம்பரங்களும் செய்து கொள்ளாமல் சந்நியாசிகளின் பயணத்தைப்போல் புறப்பட்டார்கள். அங்கு சுற்றுப்பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்த காலங்களில், ஒவ்வொரு தேசங்களில் நடந்த விஷயங்களையும் கண்ட காட்சிகளையும் அவர்கள் தெரிவித்துக் கொள்ளவில்லை.

ஆகையால் இங்குள்ள நமது இயக்கத்தோழர்கள் பலரும், அவர்கள் இருவரின் சுற்றுப்பிரயாணத்தைப் பற்றிய விவரங்கள் ஒன்றையும் அறியாமலும், அவர்கள் எங்கெங்கே சென்றார்கள்; என்னென்ன செய்தார்கள், எப்பொழுது திரும்புவார்கள் என்ற செய்திகளைப்பற்றி ஒன்றும் தெரியாமலும் மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அன்றியும், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் இந்தியாவில் இருந்து புறப்படும்போது உடல்நிலை சரியாயில்லாத காரணத்தால், சுற்றுப்பிரயாண காலத்தில் அவர் சரீர நிலைமை எவ்வாறு இருக்கிறதோ என்று கவலைபட்டவர்களும் மிகப்பலர்.

இதற்கிடையில், வெளிநாடு சென்றிருந்தநமது தோழர்கள் பால் இயக்கத்தின் பால், பொறாமை கொண்டவர்களும், வெறுப்புக் கொண்டவர்களும், நமது இயக்கத்தை ஒத்துக்கொள்ளாதவர்களும், நமது இயக்கத்தினால் தமது சுயநலம் பாதிக்கப்படும் என்று கருதியவர்களான புராணமரியாதைக்காரர்களும்சோம்பேறிகளாய் இருந்து வாழ நினைத்தவர்களும்தேசியப் பிழைப்புக்காரர்முதலியவர்களும்பலவகையான விஷமப்பிரசாரம் செய்து கொண்டிருந்தனர்.

அரசாங்கத்தார், நமது தோழர்கள், இருவரையும் இனி இந்நாட்டிற்குவர அனுமதிக்கமாட்டார்களென்றும், ஆகையால் போனவர்கள் இனி திரும்பப்போவதில்லை யென்றும், ஆகவே சுயமரியாதை இயக்கம் அடியோடு ஒழிந்துபோய்விடும் என்றும் பரிகசிக்கத்தக்கமுறையில் தப்புப் பிரசாரம் பண்ணிக்கொண்டு வந்தனர்.

ஆனால் இவ்வளவு பேர்களும், திடுக்கிடும்படி நமது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் 17—10—32 திங்கட்கிழமையன்று சிலோன்வந்து சேர்ந்து அங்கு 3 வாரம் சுற்றுப்பிரயாணம் செய்து விட்டு தூத்துக்குடி, மதுரை, திருச்சி, ஆகியவூர்களில் இறங்கிவிட்டு 11—11—32-உ ஈரோடு வந்து சேர்ந்தார்.

நமது தோழர் மேல் நாட்டிற்குச் செல்லும் போது எந்நிலையில் சுயமரியாதை இயக்கத்தை நம்தோழர்களிடம் விட்டுச் சென்றார்களோ, அந்நிலைக்கு சிறிதும் குறைவு வராத மாதிரியில் எவ்வளவோ எதிர்ப்புகளுக்கிடையில் நிலை நிறுத்தி வைத்திருக்கிறதை கண்டு களிப்பார் என்றே கருதுகின்றோம். ஆகவே அவர்கள் இந்நிலையில் இருந்து இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தி இன்னும் மும்முரமாக தமிழ் நாடு மாத்திரமல்லாமல், இயக்கக்கொள்கைகள் நாடு முழுமையும் பரவவும், கொள்கைகள் செயல்முறைகளில் நடத்தப்படுவதற்கான காரியங்கள் செய்யவும் தக்க ஏற்பாடுகள் செய்வார்களென்றே கருதுகின்றோம்.

மேலும் இயக்கத்தில் தொடக்கமுதல் உழைத்து வந்த உண்மைத்தோழர்கள் சிலர் சிறு காரணங்களால் அபிப்பிராய பேத மேற்பட்டு பிரிந்து நின்று தொண்டாற்றிவந்ததையும் இனி மாற்றியாவரும் ஒன்றுபட்டு ஒரு மனப்பட்டு தொண்டாற்றுவதற்கான காரியங்களையும் செய்வார் என்றே நம்புகின்றோம்.

நிற்க, இனி கூடிய சீக்கிரம் குடி அரசின் ஆசிரியப்பொறுப்பையும் ஏற்று வாசகர்களுக்கு நல்விருந்தளித்து ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஊட்டிச் சமதர்மப் புரட்சியை அதிவிரைவில் நடத்தவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

---

## ஈ. வெ. ரா. குறிப்பு.

தோழர்களே, எனது மேல் நாட்டுச் சுற்றுப்பிரயாணம் ஒருவாறு வெற்றியுடன் முடிந்து 11—11—32 தேதி காலை ஈரோடு வந்து சேர்ந்திருக்கிறேன். நீண்ட பிரயாணத்தினால் நான் சிறிது களைப்புற்றிருந்தாலும் சமீபத்தில் களைப்பு நீங்கி இயக்க வேலையை மும்முரமாய் தொடங்க உறுதி கொண்டிருக்கிறேன். என்னுடன் கூட வந்த தோழர் ராமநாதன் அவர்கள் என்னைமார்செயில்ஸில் இந்தியாவுக்கு கப்பலேற்றி விட்டு ஜினிவாவுக்கு சென்று இருக்கிறார். அங்கு சில விஷயம் அறிந்து 2 அல்லது 3 மாதத்தில் இந்தியா திரும்புவதாகச் சொல்லிப் போயிருக்கிறார். அதற்குள் கூடிய சீக்கிரம் நமது இயக்கத்தோழர்கள் பலரைக் கூட்டிக் கலந்து பேசி ஒரு வேலைத் திட்டத்துடன் தீவிர பிரசாரம் நடத்த உத்தேசித்திருக்கிறேன்.

சீக்கிரத்தில் எனது சுற்றுப்பிரயாணத்தின் விருத்தாந்தங்களையும், காட்சிகளையும், அதனால் நான் கொண்ட கருத்துக்களையும்அதை எந்த அளவுக்கு நாம் பின்பற்ற வேண்டும் என்பதையும் விளக்கி சீக்கிரம் பத்திரிகைகளில் வெளியிடவும் உத்தேசித்து இருக்கிறேன். நான் இங்கு இல்லாத போது இயக்கத்தைத் தொடர்ந்து முன்னிலும் பல மடங்கு அதிகமாக எழுத்தாலும் உபன்யாசங்களாலும் மகாநாடுகள்கூட்டியும் பக்களுக்கு உண்மை உணர்ச்சிகளை ஊட்டி தீவிரமாய் வேலை செய்துவந்த தோழர்கள் யாவருக்கும் நான் என் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

### முக்கியகுறிப்பு.

இயக்கத்தோழர்களும் இயக்க அபிமான தோழர்களும் இனி ஒருவருக்கொருவர் அழைத்துக் கொள்ளுவதிலும், பெயருக்கு முன்னால் பின்னால் மரியாதை வார்த்தை சேர்ப்பது என்பதிலும் ஒரே மாதிரியாக தோழர் என்கின்ற பதத்தையே உபயோகிக்க வேண்டும் என்றும், மகா-ா-ஸ்ரீ, திருவாளர், திரு, தலைவர், பெரியார், திருமதி, ஸ்ரீஜத் என்பது போன்ற வார்த்தைகளை சேர்த்து பேசவோ எழுதவோ கூடாது என்றும் வணக்கமாய் வேண்டிக் கொள்ளுகிறேன். "குடி அரசி"லும் அடுத்த வாரம் முதல் அந்தப்படியே செய்யவேண்டுமென்று தெரிவித்துக் கொண்டிருக்கிறேன்.

ஈ. வெ. ரா

## சென்னை சுயமரியாதை 2-வது மகாநாடு.

நவம்பர் 1-தேதி சென்னை புரசை வெங்கட்டம்மாள் சமாதிரோட் பொன்னன் வீதி, தோழர் குப்புசாமியவர்கள் இல்லத்தின் மேல் மாடியில் சென்னை சுயமரியாதைச் சங்க ஜனரல்பாடி கூட்டம் ஷை சங்க பிரசிடெண்ட் வி. பி. எஸ். மணியர் அவர்கள் தலைமையின் கீழ் கூடிற்று. அவ்வமயம் ஷை சங்கக் காரியதரிசிகளான ஜி. இன்னியாசிமுத்து சி. ஆர். எ. வாசகம் அவர்களால் சென்னை சுயமரியாதை இரண்டாவதுமகாநாடு சென்னையில் நடத்தவேண்டுமென கொண்டுவந்த தீர்மானத்தைச் சங்க அங்கத்தவர்கள் ஏகமனதாய் ஒப்புக்கொண்டனர்.

பிறகு தலைவர் முடிவுரையில்நமது சென்னை சுயமரியாதைச் சங்கம் ஸ்தாபித்த ஓராண்டு அளவில் பொதுஜனங்கட்குச் சுயமரியாதை உணர்ச்சி அதிதீவிரமாய் பரவி வருகிறதென்றும், சுயமரியாதை மகாநாடு நாம் யாவரும் முனைந்து நமது சங்க

# ஈ. வெ. இராமசாமியின் இந்தியா விஜயம்.

## தூத்துக்குடி.

தோழர்கள். ஈ. வெ. ராமசாமி, நாகம்மை சி. நடராஜன், அ. இராகவன் ஆகியவர்கள் 8-ந் தேதி காலை தூத்துக்குடி துறைமுகம் வந்து சேர்ந்தார்கள். அவர்களை தூத்துக்குடி பிரபல வர்த்தகர்களும் மற்றும் ஏராளமான வாலிபர்களும் கப்பலுக்குச் சென்று மாலையிட்டுவரவேற்று துறைமுகமேடைக்குஅழைத்து வந்தார்கள். வெளியில் வந்ததும் சுமார் 3000, 4000 பேர்களுக்கு மேலாகவே இருந்து பெருத்த ஆரவாரத்துடன் பாண்டுவாத்தியங்களுடனும் மோட்டாரில் ஊர்வலமாக தோழர் கைலாசம் அவர்கள் மாளிகைக்கு அழைத்துச் சென்றார்கள். வழியில் பல இடங்களில் வரவேற்று உபசரித்தார்கள். அன்று மாலை தோழர் வைகுண்டம் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. சுமார் 2000 பேர் இருந்தார்கள். பெண்களும் அதிகமாய் வந்திருந்தார்கள். அக்கூட்டத்தில் பல உபசாரப் பத்திரங்கள் வாசித்துக்கொடுப்பட்டன.

அதாவது, தூத்துக்குடி பொதுஜன வரவேற்பு சங்கத்தாரால் ஒரு உபசாரப்பத்திரமும், சுயமரியாதைச் சங்கத்தாரால் ஒரு பத்திரமும், தூத்துக்குடி மாதர் முன்னேற்ற சங்கத்தாரால் ஒரு பத்திரமும், வடக்கரை சுயமரியாதைச் சங்கத்தாரால் ஒரு பத்திரமும், தூத்துக்குடி சுயமரியாதை தொண்டர்படையாரால் ஒரு பத்திரமும் சமதர்ம நிலயத்தாரால் ஒரு பத்திரமும் வாசித்திக்கொடுக்கப்பட்டது. பிறகுதோழர் இராமசாமி 2 மணி நேரம் உபன்யாசம் செய்தார். அவற்றில் பெரிதும் நாட்டில் மதத்தின் பேரால் நடக்கும் அட்டூழியங்களைக் கண்டித்து, உலக கொடுமைகளுக்கெல்லாம் பெரிதும் மத நடவடிக்கைகள் காரணமாயிருக்கின்றது என்று சொன்னதுடன்மேல்நாடுகளில்,மதம் படும்பாடுகளையும் மதத்தலைவர்களு

---

சார்பிலேயே நடத்தினால் மிகவும் நன்மை பயக்குமென்றும், டிசம்பர் மாதம் கடைசிவாரம் சென்னை சுயமரியாதை இரண்டாவது மகாநாடு நடத்தியே தீரவேண்டுமென்றும் அரிய சொற்பொழிவாற்றியமர்ந்தார்.

பிறகு சங்கக் காரியதரிசி சி. ஆர். ஏ. வாசகம் அவர்களால் வந்தனோபசாரம் கூறிக் கூட்டம் இரவு 8-30 மணிக்குக் கலைந்தது. ஒரு சிருபர்.

உள்ள போக்கியத்தையும் எடுத்துச் சொன்னார். பிறகு தலைவர் முடிவுரை கூறினார். இதுசமயம் ஒரு வாலிபர் எழுந்து மேடைக்கு வந்து பார்ப்பனரையும், பாதிரிமாரையும் என் குற்றம் சொல்லவேண்டும் என்று கேட்டார். போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் அவ்வாலிபரை பார்த்து உமக்கு ஆக்ஷேபணை இருந்தால் நாளை நீர் இதை மறுத்துப்பேசும் என்று சொன்னார். பிறகு தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிவுக்கு வந்தது. ஜனங்கள் வெளியில் போகும் போதுகொட்டகைவிளக்குகள் அணைந்தது, ஒரு நாற்காலி மேடையில் விழுந்தது விளக்கு போடப்பட்டவுடன் யாரும் காணப்பட வில்லை.

மதுரை சுயமரியாதை சங்க காரியதரிசி தோழர் விஜயமூர்த்தி தூத்துக்குடிக்கு வந்து எல்லோரையும் மதுரைக்கு அழைத்தார். அதற்கு இணங்கிமறுநாள் காலை 10 மணிக்கு தூத்துக்குடியில் இருந்து எல்லோரும் மதுரைக்கு பிரயாணமானார்கள்.

## கோவில்பட்டி.

கோவில்பட்டி தோழர் குப்புசாமி தலைமையில் பல தோழர்கள் ரயில் மேடைக்கு வந்து வரவேற்று உபசாரம் செய்தார்கள்.

## விருதுநகர்.

தோழர் வி.வி.தனக்கோடி பி.ஏ. அவர்களும் ஏ. ஏ. எஸ். ஆறுமுகம் திருவண்ணமலை, மாரிமுத்து முதலியோர் வந்திருந்ததும் தவிர, மதுரை வரை வந்துபொதுக்கூட்டத்தைநடத்தியும் கொடுத்தனர். ரயில் விருதுநகருக்கு வந்ததும் தோழர் செந்திக்குமார் அவர்களும் மற்றும் பல தோழர்களுமாய் சுமார் 200 பேர்கள் மேடையில் சந்தித்து மாலையிட்டு சுகம் விசாரித்து உபசாரம் செய்தார்கள்.

## திருமங்கலம்.

ரயில் திருமங்கலத்திற்கு வந்ததும் அங்கு சாமி சிவநேசம், வாலிப நாடார் சங்கத்தலைவர்களுமாக ஏராளமான ஜனங்கள் மேடையில் வரவேற்று உபசரித்தார்கள்.

## மதுரை.

பிறகு ரயில் மதுரைக்கு வந்தவுடன் அங்கு மேடையில் சுமார் 300, 400 பேர்களுக்கு மேலாகவே வந்து வரவேற்று மோட்டாரில் பாண்டுவாத்தியங்களுடன் ஊர்வலமாக சுயமரியாதை சங்கக்கட்டிடத்திற்கு அழைத்துச்சென்றார்கள். அங்கு ஒரு உபசாரப்பத்திரம் படித்தபின், இயக்க காரியதரிசி தோழர் வெங்கிடுசாமி அவர்கள் ஜாகையில் விருந்து நடந்தது. மாலையில் நாடகக்கொட்டகையில் ஒரு கூட்டம்நடந்தது. கூட்டத்திற்கு 2000 பேர்களுக்குமேலாகவே வந்திருந்தார்கள். கூட்டத்திற்குதோழர்முகமதுசுல்தான்எம்.ஏ.,பி.எல்., அவர்கள் தலைமை வகித்தார், மதுரை நகர்வாசிகளால் ஒரு உபசாரப்பத்திரமும், மருத்துவ சங்கத்தாரால் ஒரு உபசாரப்பத்திரமும் வாசித்துக்கொடுக்கப்பட்டது. பிறகு தோழர் இராமசாமி நீண்டநேரம் பேசினார். அதில் கடவுள் மதம், பழக்க வழக்கம், தேசபக்தி என்பவைகளின் பேரால் மனித சமூகத்திற்கு ஏற்பட்ட-ஏற்பட்டு வரும் கெடுதிகளை எடுத்து தெளிவாய்ச் சொல்லி வருகையில் கூட்டத்தில் இருந்த ஜனங்களுக்கு எளிதில் விளங்கி அவர்களது ஆமோதிப்பு குறிகள் தோன்றினதைக் கண்ட "சில தேசபக்தர்கள்" தங்களுக்கும் பேச அனுமதிக்கவேண்டும் என்று கேட்டார்கள். தலைவர் அனுமதி கொடுத்ததுடன் தங்களுக்கு தோன்றும் சந்தேகங்களும் கேட்கலாம் என்றும் அதற்கும் பதில் சொல்லப்படும் என்றும் சொன்னார். அந்தபடியே முழு உபன்யாசமும் முடிந்ததும் சில கேள்வி கடிதங்கள் அனுப்பப்பட்டன. அதற்கு பதில் சொல்லப்பட்டு,மற்றவர்கள் பேச அனுமதிகொடுக்கப் பட்டது இரு காங்கிரஸ்காரர்கள் பேசினார்கள். அவர்கள்பேசியதாவது, தோழர் இராமசாமியின் அபிப்பிராயம்தான், காங்கிரஸ் அபிப்பிராயம் என்பதாக பேசி: இந்த அபிப்பிராயங்களையே காங்கிரசில் வந்து பேசினால் நாங்களும் இதற்கு அனுகூலமாய் இருக்கமுடியும் என்று பேசினார்கள். பிறகு தலைவர் முடிவுரை கூறி கூட்டத்தை முடித்தார்.

சில காங்கிரஸ்காரர்கள் காந்திக்கு ஜே! என்றார்கள், சிலர் சுயமரியாதைக்கு ஜே! என்றார்கள், ஒருவர் சுயமரியாதை ஒழிய என்றார், சிலர் காந்தியம் ஒழிக என்றார்கள். இது கூட்டத்தினர்களுக்கு பரிகாச காட்சியாய் காணப்பட்டது.

## திருச்சி.

பிறகு மறுநாள் காலை 11-மணிக்கு மதுரையில் இருந்து தோழர்கள் ஈரோட்டிற்குப் புறப்பட்டார்கள். மத்தியில் திருச்சி ஜங்ஷனில் தோழர்கள் விஸ்வநாதம், லீலாவதி, ராமசுப்பிரமணியம், டி. வி. சோமசுந்திரம் வக்கீல், கே. எம். பாலசுப்பிரமணியம் வக்கீல், டி. பி. வேதாசலம் வக்கீல், சா.மா.சி. பரமசிவம், செல்வக்கணபதி ஆகிய இன்னும்பலர் வந்து வரவேற்று, அங்கு இரங்கி ஊருக்குள் வந்து போகவேண்டுமென்று அழைத்துச் சென்றார்கள். தோழர். டி. எம். நாராயணசாமி பிள்ளை எம். எல். சி. அவர்களும் அழைத்தார்கள். பிறகு தோழர். லீலாவதி ராமசுப்ரமணியம் அவர்கள் ஜாகைக்கு அழைத்துச்செல்லப்பட்டு அங்கு உள்ளூர் பிரமுகர்கள் பலர் விஜயம் செய்து சற்றுப் பிரயாணத்தைப்பற்றிய பல விஷயங்கள் பேசிக்கொண்டிருந்து இரவு விருந்திற்குப்பிறகு ஈரோடு அனுப்பிக்கொடுக்கப்பட்டார்கள்.

## ஈரோடு.

பிறகு இரவு 11-மணிக்கு திருச்சியில் ரயில் ஏறி விடியற்காலை 4-மணிக்கு தோழர்கள்இராமசாமி, நாகம்மை, நடராஜன், இராகவன் ஆகியவர்கள் ஈரோடு வந்து சேர்ந்தார்கள். ஸ்டேஷனுக்கு தோழர்கள் ஈரோடு சேர்மென் ஷேக்தாவுது சாயபு, முத்துக்கருப்பஞ்செட்டியார், வக்கீல் அற்புதசாமி, சிக்கய்யநாயக்கர், வி. வி. சி. முருகேச முதலியார், வி. எஸ். சென்கோட்டையா பிரதர்ஸ் முருகேசமுதலியார், ஈ. வெ. கிருஷ்ணசாமி மற்றும் ஏராளமான ஜனங்கள் வந்து மாலையிட்டு வரவேற்று அழைத்துச் சென்றார்கள். நேரே வீட்டுக்குச் சென்றதும் அங்கிருந்து தனது தாயார் இருக்கும் பங்களாவுக்குச் சென்று தாயாரை பார்த்துவிட்டு வந்தார். பிறகு அன்று இரவு 12 மணி முதல் அநேக நண்பர்கள்உள்ளூரிலிருந்தும், வெளியூரிலிருந்தும் வந்து கண்டு மகிழ்ந்தவண்ணமாய் இருக்கிறார்கள்.

---

## மதுரை சுயமரியாதைச் சங்கத்தார்

# ராமசாமிக்கு

## வரவேற்பு.

ஐரோப்பிய பிரயாணவ முடித்து தாயநாடு திரும்பிவரும் சுயமரியாதை இயக்க ஸ்தாபக தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்களுக்கு மதுரை சுயமரியாதை சங்கத்தார் வாசித்தளித்த வரவேற்பு உபசாரப்பத்திரம்:—

தன்மதிப்பியக்கங்கண்ட தலைவ!

"திடீரென தோன்றிய செல்வச் செருக்கால் ஜனசமூகத்தை ஏமாற்ற நினைப்பாரேயாயின் திடீரெனத் தோன்றிய செல்வம் உன்னைவிட்டுத்

# கிறிஸ்துமதத்திலும் தீண்டாமை.

## சி. எப். ஆன்டிருஸ் பிரசங்கம்.

சமீபத்தில் இங்கிலாந்தை அடுத்த உல்ஸ்டர் ஹாரட்டனில் கூடிய சர்வ கிறிஸ்துவ [கடவுளை வணங்கும் கழகத்து] ஐக்கிய மஹாநாட்டில் ரெவரெண்ட் சி. எப். ஆண்டிரூஸ் கிறிஸ்து மதத்திற்கே இழிவாயிருந்துவரும் தீண்டாமை என்பதொன்றை அடியோடொழிக்க வேண்டுமென்று பேசிய போது—தென்னிந்தியாவிலே உள்ள பெரும்பகுதியான கிறிஸ்தவர்களை, ஹிந்துக்களெப்படி அம்மதத்தில் பெருந்தொகையாயுள்ள தாழ்த்தப்பட்டோரை தொடப்படாதவர்களாக கருதப்பட்டு வருகின்றார்களோ, அது போன்றே ஹிந்துமதததிலும் குறைவாயுள்ள கிறிஸ்து மதத்தில் தமது சகோதரர்களை தீண்டப்படாதவர்களாக சொல்லுவது மிகுந்த கேவலமானதல்லவா? இதனால் யாமாகிய கிறிஸ்தவர்களனைவரும் குற்றமானவர்களென்று நிந்திக்க கூடியவர்களாயிருக்கின்றோமென்பதற்கு என்ன தடை. இத்தகைய ஒரு இடையூறை அடியோடறுத்தெரிய இந்தியாவிலும், பிறநாட்டிலும் முற்படவேண்டியது யாமாகிய கிறிஸ்தவர்களின் கடமை யல்லவா? என்றனர்.

இங்ஙனம் தாழ்ந்தோரென்றும், தொடப்படாதாரென்றும், சொல்லியும் செய்தும் வருவதற்கு ஒருவிதத்து பாதிரிகள் காரணஸ்தரும், இன்னொரு விதத்து மதந்தான் காரணமும், மற்றொரு விதத்து மதத்தை அனுசரிப்போரும் காரணமாக விளங்குவர். எப்படி எனில் முதலாவது பாதிரிகள் எப்படி காரணஸ்தராவரென்றால்—ஒருவன் கிறிஸ்தவனானால் போதும், அவன் என்ன சீர்கேடாயும், வேதவிரோதமாயும் நடந்துகொண்டாலும் அதை கண்டும் காணாதுமிருப்பதோடு நேரில்கண்டித்துத் திருத்துவதில்லை. கிறிஸ்தவனானபின்பும் ஜாதிவாலேயும், ஜாதி ஆச்சாரத்தையும் கைக்கொண்டபோதும் பாதிரிகள் கண்டிப்பதில்லை இப்படி இருப்பதால் அவ்வேதத்திற்கு அது இழிவென்பதையும் எண்ணுவதில்லை— இதில் சில குருக்களோ ஜாதி நாற்றமுடையவர்களாக இருந்துவருகின்றனர். இரண்டாவதாக மதந்தான் எப்படி காரணமாகுமென்றால்-குருக்கள், பாதிரிகள், சந்நியாசிகள் அம்மதத்திலுள்ள ஊழலைக்கண்டுங் காணாதுபோலிருப்பதும், மதத்தைச்சேர்ந்த மற்றவர்கள் வேதத்திற்கு முற்றும் விரோதமாயும் இழிவாயும் நடப்போரை ஏற்றுக்கொண்டிருப்பதாலும், அம்மதம் அதற்கு இடந்தந்திருப்பதாலுமே! மூன்றாவதாக மதத்தை அநுசரிப்போரும் எப்படி காரணமாகுவரெனிலோ? மதம் எல்லாருக்கும் பொதுவானது, சொந்தம் பாராட்டுவது, சமத்துவம் பொருந்தியது. இதில் ஒருவன் உயர்ந்தவனாகவும் மற்றவன் தாழ்ந்தவனாகவும் அதே மதத்தில் சொல்லவும் கட்டவுமானால் அந்த மதம் அவருக்கு அப்புறப்பட்டதோடு, தாழ்ந்தவனாக கருதப்பட்ட ஒருவன் ரோஷமற்ற தன்மையில் அவன் அதிலிருந்துகொண்டு அம்மதத்திற்கு உரியவனாக வெறுமனே சொல்லிக்கொள்ளுவதாலுமே!

இத்தகைய வகுப்புவாதங்களும், சகிக்கமுடியாத ஜாதிச்சண்டையும் பெரும்பாலும் தென்இந்தியாவில் நிகழ்ந்து வருவதை நாளையும் நேரிற் காணலாம். இத்தகைய சீர்கேட்டை சரியான வழியில் திருத்தியமைப்பது அம்மதக்குருக்களின் ஒழுங்காகும்.

எப்போது ஒரு மதத்தில் ஒருவனுக்கு மதிப்பில்லேயோ அவன் அப்போதே அம்மதத்தை விட்டொழிவதுதான் பகுத்தறிவும் சுயமரியாதைக்காரனுமாகுவன்.

மதங்கள் யாவும் பெரும்பாலும் உயர்ந்தோரும் தாழ்ந்தோருமான இந்தியர்களாலே கட்டப்பட்டிருக்கிறது! எப்போது இவர்கள் அறிவில்லையோ அப்போது அம்மதமும் அழியவேண்டியதே! இத்தகைய கொள்கையுடைய மதங்களெல்லாம் குருட்டு நம்பிக்கை உடையனவே ஆகும். அதற்கேற்ப இந்தியர்கள் கண்டதை எல்லாம் நைப்பற்றும் குணமுடையவர்கள் என்று சொல்ல என்னதடை,

இவ்வித ஊழல்கள் இந்தியாவில் மாத்திரம் இருக்கிறதென்றாலோ—வெளிநாடாகிய தென் ஆப்பிரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் உள்ள கிறிஸ்தவர்களின் முகச்சாயல்—நிறம் மாறுபட்டிருக்கக் கண்டால் அவர்களைத் தாழ்ந்தவராக வெண்ணி அவர்களோடு சேர்ந்து ஆலயங்களில் தொழுவதில்லை என்ற அநாச்சாரக்கொள்கையை நேரிற் கண்ட சி. எப். ஆண்டிரூஸ் ஆங்கிலப்பத்திரிகையில் முறையிடுகின்றார். அதனை இங்கு பலருடைய கவனத்திற்கு, முக்கியமாக தாழ்த்தப்பட்ட கிருஸ்தவர்களின் சிந்தனைக்கு-கொண்டு வருவானேன் டி சேர்வை முருசேர்.

## சுயமரியாதைத் திருமணம்.

18—11—32-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை8-மணிக்கு ஈரோட்டில் சுயமரியாதை இயக்கத் தோழர். ஈ. வெ. இராமசாமி அவர்கள் இல்லத்தில் அன்னாரின் தலைமையின் கீழ் தோழர்கள் சங்ககிரி ரேஞ்ச் பாடசாலை டிப்டி இன்ஸ்பெக்டர் ஏ. மாரிமுத்து, பி. ஏ., எல். டி., அவர்கட்கும் சாரதாம்பாள் அவர்கட்கும் சுயமரியாதைத்திருமணம் நடைபெறும். அவ்வமயம் சுயமரியாதைத் திருமணம் என்னும் பொருள்பற்றி தோழர்கள். கே. வி. அழகர்சாமி, அ. பொன்னம்பலனார், அ. இராகவன், ஆர். அன்னபூரணி முதலியவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். அன்பர்கள் அனைவரும் விஜயம் செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

எஸ், சி. ஆர். சாமி,
எஸ். கே. வரதராஜலு,
சுயமரியாதைத் தொண்டர்கள்.

---

திடீரென பிரிந்துபோம்'' என்ற ரஷ்ய ஜனநாயக புரட்சி இயக்கத் தலைவர் லெனின் அவர்களின் உண்மைத் தத்துவத்தை தமிழ் நாட்டுக்குத் தந்த தலைவரே! வருக!! வருக!!!

உண்மை உரைக்கும் உத்தம!

சமுதாய சீர்திருத்த இயக்கங்களுக்காக தமது கொள்கையை விட்டுக்கொடுக்க நேர்ந்த சமயத்தும், தமது கொள்கையை விட்டுக்கொடுக்காமல் தமது உயிரையே தியாகம் செய்த மேல் நாட்டுத் தலைவர்கள் சாக்ரட்டீஸ், கிராமர் போன்ற பெரியார்களைப் பின்பற்றி நமதியக்கத்தில் இனி நீவிரும் அதிதீவிரமாக உழைக்குமாறு கேட்டுக்கொண்டு சுகத்துடன் தாய் நாடு திரும்பிய தங்களை ஆவலுடன் நாங்கள் வரவேற்கிறோம்.

பகுத்தறிவின் தூண்டுகோலே!

சமுதாய புரட்சிப்போர் கிட்டிவிட்டதென்பதை வாலிபர்கள் உணர்ந்து போருக்கு முனைந்துவிட்டனர். இனியும் அவர்களது உணர்ச்சியை அடக்கமுடியாதென்பதை வைதீக வெறிபிடித்த கூட்டத்தினருங்கூட கண்டுகொண்டார்கள். எனவே மற்ற ரஷ்ய, சீன, ஜெர்மன், துருக்கி தேச வாலிபர்கள் போன்று நம் நாட்டு வாலிபர்களும், சிறப்பாக மாதர்களும் கூட நம் நாட்டைச் சீர்திருத்த முன்வந்திருக்கும் இந்தநல்ல சர்தர்ப்பததில் தாங்கள்மேல் நாட்டில் கண்டுவந்த முற்போக்குகளை யெல்லாம் உடனே வாலிபர்களுக்கு எடுத்தோதி நமதிக்க சங்கத்தை ரிஜிஸ்டர் செய்து வெளி நாட்டு மக்களும் தெரிந்து கொள்வதற்கான பிறபாஷை பத்திரிகையையும் ஆரம்பித்து தாய்நாட்டின் விடுதலைக்கானவழியில் உழைத்து தென்னிந்திய லூதராக, சாக்ரட்டீசாக லெனினாக, வேமாலராக உழைப்பீர்களென நம்பி தாய் நாட்டுக்கு சுகமே திரும்பிய தங்கள் வரவு தென்னிந்திய சரித்திரத்தில் புதியதோர் சகாப்தம் தங்களால்தோற்றுவிக்கப்படவேண்டுமென்று நாங்கள் விரும்பி மீண்டும் தங்களை வரவேற்கிறோம்.

மதுரை சுயமரியாதை சங்கத்தார்,
9—11—32.

---

## ஈ. வெ. ராமசாமியின் வருகை.

மேல்நாட்டுச் சுற்றுப்பிரயாணம் சென்றிருந்த தோழர் ஈ.வெ. இராமசாமி அவர்களும், அவரைச் சந்திக்க கொழும்பு சென்றிருந்த தோழர்களான நாகம்மை, நடராஜன், இராகவன் முதலியோர்களுடன் 11—11—32ந் தேதி காலை 5மணிக்கு ஈரோடு வந்து சேர்ந்தார்.

---

## கடவுள்

என்ற வார்த்தை ஒழிந்த
அன்றே உலகம்
விடுதலையடையும்.

---

மதுரையில்
குடி அரசு கிடைக்குமிடம்.
எம். முத்துசாமி
ஜெனரல் நியூஸ் ஏஜன்சி
கீழவெளிவீதி மதுரை.

---

## கொக்கோகம்.

மூலமும் உரையும்-காலிகோபயின்ட்
64 வகை சிற்றின்ப அசல் கிலேஸ் போட்டோ படங்கள். சதிபதிகளும், தனி மாதர்களும் சேர்ந்த தனி கட்டடத்தோடு, விலை ரூ. 5. வெளிநாட்டினர் ரூ. 5—8—0 முன் பணம் அனுப்பவேண்டும்.

T. G. பாக்கியம் & கோ.,
வேப்பேரி, சென்னை.

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

எள்ளிநகையாடுவர் என்பதும் வாஸ்தவமே!

இம்மாதிரியான முட்டாள்தனம் விஷயமுணர்ந்தோரிடத்தும் சாதாரணமாகப் பரவியிருக்கும் போது; விஷய ஞானமேயில்லாத பாமரஜனங்களுக்கு இவ்விதச்சடங்குகளால்நேரக்கூடிய தீமைகள் எத்தகையதென்பதை நாம்கூறவும் வேண்டுமோ? இத்தகைய அட்டூழியங்களெல்லாம் மதத்தைப்பாதுகாக்க நியமிக்கப்பட்ட புரோகிதக்கோஷ்டிகளால், —மதத்தின் பெயராலும், வருணாச்சிரம தர்மங்களின் பெயராலும், சிவலோக வைகுந்த சுவர்க்க புவனங்களின் பெயராலும் — கண்ணே போல் போற்றப்படுகின்றன!!

"ஆவலோடு ஜனங்கள் பார்க்கின்ற வகையில் நமது புரோகிதக்குருக்கள் இல்லை, ஆனால் நம்முடைய மனப்பான்மையின் மௌடீகமே அவர்களை எல்லாமுணர்ந்தோராக்கி வருகிறது" என்பதாக வால்டேயர் [Voltaire] என்ற ஒரு பெரியார் கூறியவாக்கு முற்றிலும் உண்மையே.

ஆபாசங்கள் அறவேயொழிந்த பாரமார்த்திக வாழ்க்கையையே இலக்ஷியமாகக் கொண்டுழைக்கும் இந்த புரோகிதக்குருமூர்த்திகளை—பொது ஜனங்களைவிட மேலானவர்கள்; சுயநலமற்றவர்கள்; தூயவழியில் நடப்பவர்கள்; என்பதாக ஒருசிலர் நினைத்தலுங்கூடும். அவ்வாறு அவர்கள் நினைத்தல் முற்றிலும் தவறேயாம். மத்திய காலத்தில் (Middle Ages) கிறிஸ்துவப்பாதிரிகள் மதத்தின் பெயரால் செய்த அட்டூழியங்கள் யாவும் நமக்குத் தெரிந்ததேயாகும்.

மேனாடுகளிலே பிராடஸ்டென்ட் கிறிஸ்துவப்பாதிரிகள், நினைத்தற்கே முடியாத பெரிய பெரிய குற்றங்களைச் செய்ததனால், அதற்கென விதிக்கப்பெற்ற தண்டனைகளைப் பத்திரிகைகளில் இக்காலத்தும் நாம் படிக்கின்றோம்! பாதிரிகளின் பிரமச்சரிய விரதம் பலவிதங்களிலும் அவர்களைக் கெட்ட வழிகளில்விழ்த்துவதோடு, அந்த விரதத்தால் விளையக்கூடிய ஏதோ "புனிதம்" என்ற நிலைமையிக்க கேவலமானதாகவே விளங்குகின்றது.

இந்தியாவிலே குலகுருக்கள் எனப்படுவோருடைய உண்மை ஊழல்கள் பம்பாயில் மஹாராஜாகேஸ் (Maharaj Libel Case) சம்பந்தமாக வெளிவந்த, பாடியா [Bhatia] என்போரைப்பற்றிய அவதூறான விஷயங்களால் நன்கு வெளியாயிருக்கின்றன. உண்மையைக் கூறவேண்டுமானால், ஒரே அந்தஸ்தும் படிப்பும் உள்ள ஒரு சாதாரண மனிதனுக்கும், பரம்பரையாக [புரோகித] குரு பதவிகளில் இருக்கும் ஒருவருக்கும் நடத்தையில் மேம்பாடிருப்பதாக எனக்குப்புலப்படவில்லை. அறிவின் சம்பந்தமான அத்தாட்சிகள் ஒரு புறமிருக்க, ஒழுக்கத்தையும் நடத்தையையும் பொறுத்த மட்டிலும் அவற்றின் முன்னேற்றத்திற்கு மதம் என்ற ஒருகோட்பாடு அத்யாவசியமா? இல்லையா? என்ற கேள்விக்குப் போதிய கண்கண்ட சாட்சியாக இந்த மதப் பாதுகாப்பாளர்களாகிய புரோகித குரு சன்னிதானங்களுடைய நடவடிக்கைகளே எடுத்துக் காட்டாக நிற்கின்றன.

---

[7-ம் பக்கத்தொடர்ச்சி]

ளுக்கு, "கடவுள்" இருந்தென்ன, இல்லாவிட்டாலுமென்ன என்றுள்!! இம்மாதிரி அபிப்பிராயங்கொண்ட பிரிட்டிஷ் ஸ்திரீகள், கோடிக்குமேல் இருக்குமாம்!!! இது 1902 வருஷத்தில். இன்று 30 வருஷங்கடந்த காலத்தில், பிரிட்டிஷ் கோயில்களின் கதி என்னும்! நாஸ்திகம், பிரிட்டிஷ் தேசத்தில் பரவும் மாதிரியைக்கண்டு மாபெரும் பாதிரிமார்கள் நடுக்க முறுகின்றார்கள்! டாக்டர் இஞ்ச் [Dr. Inge] என்ற ஓர் மாபெரும் பாதிரி, மதமற்ற வாழ்வு [Irreligion] ஆங்கில நாட்டில் பரவும் அவசரத்தைக்கண்டு திகைப்புறுகின்றார். ஆனால், பிரிட்டிஷ் தீவுகளில் வாழும் பல கோடி மக்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மாதா கோயில்களுக்குப் போகாவிடில் வேறு எந்த இடங்களுக்காகிலும் போய் வருகின்றார்களாவெனக்கேட்கலாம்? ஞாயிற்றுக்கிழமைகளில் "கடவுளை" தரிசிப்பதை விட்டு, நந்தவனங்களையும்[Parks]கலைகாட்சிசாலைகளையும்[Exhibitions] கடலோரங்களையும் [sea side resorts] கண்டுகளித்து உல்லாசமாக தாங்களும் தங்கள் பெண்டுபிள்ளைகளும் மறுநாள் திரும்பி ஆறுதலை அடைந்து, மனச்சாந்தி பெற்று தத்தம் வேலைகளுக்குச் செல்கின்றார்கள்.

நமது நாட்டையாளும் சீர்மையில் "கடவுள்" "அவர் மாளிகை"களின் கதி இப்படியானால், மற்ற தேசங்களில், அவைகள் நிலைமை என்னும்! பிரஞ்சு தேசத்தில் [France] மிக பலம்வாய்ந்த ஜெஸுயிட் பாதிரிமார் [Jesuit Priests] ஊரைவிட்டுத் துரத்தப்பட்டார்கள். அவர்களுடைய சொத்துக்கள் யாவும் [Church properties] பறிமுதல் செய்யப்பட்டன. அதாவது பொதுவுடைமை ஆக்கப்பட்டன! நேற்று புரட்சி கொண்ட, ஸ்பெயினில் எல்லா கோயில் சொத்துக்களும் பொதுவுடைமையாக்கப்பட்டன!! அவ்வூர் பாதிரிமார்களின் வாழ்வை அருவருத்த பொது ஜனங்கள் பலர், "கடவுள்" இருப்பிடங்களை தீயிட்டுக்கொளுத்தி விட்டனர்! தங்கள் அரசனையும் ஊரை விட்டுத்துரத்தியதுமல்லாமல் 'கடவுள்' இருப்பிடங்களையும் தீயிக்கு இரையாக்கினர்கள்!! இதுபோன்ற பக்தி அற்ற செய்கைகள் ஆங்கிலநாட்டைப்போன்ற பூஷ்வா தேசங்களாகிய ஸ்பெயின், பிரான்சு தேசங்களில் நடைபெற்று வருகின்றன. ஆனால் பொரிலிடேரியன் [Proletarian] அதாவது தொழிலாளர் தேசமாகிய ரஷ்யாவில் மதத்தையே பற்றற அரசியலைவிட்டு அகற்றி விட்டனர். அத்தேச முழுமையும், சிறுவர் பள்ளிக்கூடங்களில் கடவுளைப்பற்றிய பக்தி, விசுவாச வார்த்தைகள் [Faith] சொல்லப்படாதெனவும், சிறுவர்கள் காதில் படக்கூடாதெனவும் கட்டளையிட்டுள்ளார். பெரிய மாதா கோயில்களில் மதங்கள் பொது மக்களுக்கு விஷத்தைப்போன்றவை [Religion is the Opium cf the People] என்று கொட்டை எழுத்துக்களில்வரையப்பட்டுள்ளது. இளைஞர்களுக்கு மதபோதனை செய்வோரை, தண்டிக்கப்படுவார்களென்ற திட்டத்தையும் வகுத்துள்ளார்! பிறக்கும் குழந்தை காதில் "கடவுளென்ற நாமதேயமே படக்கூடாதாம்!! இந்த கட்டளைக்குட்பட்ட மக்கள் அன்னாட்டில் 16 கோடியே!!!

பொதுவுடைமை பரவிவரும்ஜர்மன் தேசத்திலும் சுமார் இரண்டு கோடி மக்கள் மதமற்ற வாழ்க்கையைக்கைக்கொண்டுள்ளார். ஆயிரக்கணக்கான மதவிரோத [Anti-Religious] ஸ்தாபனங்களை, ஸ்தாபித்துள்ளார். இதற்கு முன்னால், சுயமரியாதையோர் செய்துவரும் நிரீஸ்வர வாதம் எம்மட்டு! ஆனால் நமது இயக்கம் பரவப்பரவ, மற்ற மாபெரும் நாடுகளைப் போல் ஆஸ்திகத்தை ஒழித்து நாஸ்திகத்தைப் பரவச்செய்யுமென்பதற்குத் தடையில்லை. நமது இயக்கம் அரசியலில் ஆதிக்கத்தைப்பெற்றதும், அந்நிலைமை துரிதமாகவே உண்டாகும். நமது நாடு இந்த முடிவு[This consummation] அடைவதற்கு விரை விதைத்த தோழர் ராமசாமிக்கு நமது மனமார்ந்த ஆசி கூறுதும்!

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு பெருந்தஆட்சேபணையை கவனிக்கவேண்டும். மதமொழிந்து நாஸ்திகம் உலகில் அனுஷ்டிக்கப்படுமாகில், உலகம் அழிந்து விடுமா? மனித பூண்டு ஒழிந்துவிடுமா? கொலை, களவு, அதிகரிக்குமா? என்ற கேள்விகள் பிறக்கின்றன. நமது இயக்கத்தைக் கண்டிக்கும்போதெல்லாம் இந்த கேள்விகளைக்கேட்கின்றார்கள். நாஸ்திகத்தால் நாடு கெட்டுவிடுமாம்! கடவுள் இல்லாமல் பொழுது விடியாதாம்!! பக்தியற்ற சிறுவர்களும் சி[illegible]களும் தீய நடத்தையில் நடப்பார்களாம்!!! நமது எதிரிகள் இத்தியாதி கேள்விகளை அடுத்தடுத்து கேட்பதோடு, [illegible]தூரமாகவும் பேசுகிறார்கள். உங்கள் இயக்கம் மதமொழியவேண்டுமென்ற கொள்கையை பூரணமாகக்கொண்டிருப்பதாகவே நான்எண்ணுகிறேன். ஆதலின் உங்கள் எதிரிகள் கூறும் குறைகளை நாம் பரந்த மனதுடன் கேட்டு அவைகளுக்குத் தகுதியாக விடை பகரல் வேண்டிய பொறுப்பு நமதாகும்.

முதலில் "கடவுள் இல்லையாகில் உலகம் அழிந்துபோம்" என்ற உத்தேசத்தை சற்று விசாரிக்கப்பாம். உலகம் உண்டாகி 200 கோடி வருடமென்கிறார்கள். இந்த 200 கோடியில், உயிர் உலகில் முளைத்து 40, 50 கோடி வருடமிருக்கலாம். இந்த 40, 50 கோடி வருடத்தில் சற்று மூன்று லட்சவருடமுந்திதான் மனிதன்உலகில்தோன்றியது! கடந்த மூன்று லட்ச வருடத்தில் மனிதன் பேசத்தொடங்கி சுமார் லட்சம், லட்சத்தி ஐம்பதினாயிரம் வருடங்களாய் இருக்கலாமாம். இவன் பேசத்தொடங்குவதற்கு முன்னால், எந்த சீவனும் "கடவுள்" என்ற பெயரை சொல்லியுமறியா, கேட்டுமறியா!! ஆதலின் உலகம் 199 கோடியே 97 லட்சம் வருடங்களாக "கடவுள்" என்ற நாமதேயத்தையே கேட்டறியாமலும், சொல்ல அறியாமலும், அதனதன் வேலைகளைச் செய்துகொண்டே வந்திருக்கின்றன. இவ்வளவு காலம் "கடவுள்" என்ற பெயரை கேட்டறியாமல், சொல்ல அறியாமல் வாழ்ந்து வந்த உலகம், மனிதன் "கடவுள்" என்ற பெயரை சொல்லா விட்டாலா அழிந்துவிடும் என்று கேட்கின்றேன்? ஆதலின், கோடானகோடி வருடம் நாஸ்திகமாயிருந்த உலகம், இன்னும் பலகோடி வருடம் நாஸ்திகமானால், என்ன அதற்குக் கெடுதிநேரும்? மனிதன் நாஸ்திகமானாலும், ஆஸ்திகமானாலும், உலகிற்கு அதைப்பற்றி கவலையேயில்லை. பெய்யும் மழை பெய்துகொண்டுதான் இருக்கும், பிறக்கும் குழந்தை பிறந்து கொண்டேதான் இருக்கும். உலகின் நடத்தைகள் ஓர் இம்மியளவேனும் மாறப்போவதில்லை. "கடவுள்" பெயரை உலகில் வழங்கினாலும், வழங்காவிடினும் உலகம், கடந்த 200 கோடி வருடம் இருந்த மாதிரியாகவே, இருந்து வரப்போகின்றது. கடவுளுக்கு பெரும் மாதா கோயில்களை தீக்கிரையாக்கிய ஸ்பெயின் தேசத்து மக்கள் நாசமானார்களா? அல்லது அழிவுற்றார்களா? பலபல மாதாகோயில்களை நோயாளிகளுக்கு சிகிச்சை சாலையாகவும், பள்ளிக்கூடங்களாகவும், காட்சி சாலைகளாகவும் மாற்றிய பலகோடி ரஷ்ய மக்கள் ஒழிந்து விட்டார்களா? ஆஸ்திகமாயிருந்த ரஷ்யாவைவிட ஆயிரம்பங்கு,

அதிகமாக நாஸ்திக ரஷ்யா இன்று துலங்குகின்றது!! "கடவுள்" பெயர் கேட்காத உலகம் நாசமுறும் என்பது கட்டுக் கதையேயாகும்.

"கடவுள்" பெயரைக் கேட்காத மனிதன், அல்லது சொல்லாத மனிதன், கெட்டா போவான்? பொய், களவு, கள், காமம், கொலை செய்தா விடுவான்? அன்பு, ஈகையில், குறைந்தா விடுவான்? இவ்வுலகில், மகாபாரதம், இராமாயணம் முதலிய காலங்கள் முதல் நாளது வரை செய்து வரும் கொலைகளும், சொல்லும் பொய்களும், மோசம், பித்தலாட்டங்களும், சமூக வாழ்க்கைக்கு விரோதமான செய்கைகளை (Anti Social Acts) யார் செய்து வருகிறார்கள்? நாஸ்திகர்களா? ஆஸ்திகர்களா? நான் இருந்த ஜெயிலில் கொலையாளிகளும், திருடர்களும், இன்னும் பலவித குற்றங்களைச் செய்தவர்களும் தான் வாராவாரம் பகவத் பஜனை செய்து வந்தனர். கடவுள் பெயரால், விபசாரமும் அநேகர் செய்து பிழைக்கும் தேசம் நமதாகும். ஆதலின் நாஸ்திகத்தால் கொலை களவு அதிகரிக்குமென்பது பொய்யே உத்தமர்களாகிய ரஸாயன விஞ்ஞானிகளி [Chemists] ல் அநேகர் ப்ரபல நாஸ்திகர்களாய் இருந்து வருகின்றனர். ஆனால் ஆஸ்திகத்தில் பழுத்த மடாதிபதிகள் செய்துவரும் கேடுகளுக்கு அளவே இல்லை. கொலை செய்யாத அரசாங்கம் எங்குளது? போர் புரியாத ராஜரீகம் எங்குளது? ஆனால் எல்லா அரசாங்கங்களும் ஆஸ்திகத்தில் மூழ்கிக்கிடக்கின்றன! கடவுள் பெயரால், ஜர்மன் சக்ரவர்த்தி ஆங்கில நாட்டை அழிக்க முயன்றான்—அவனை எதிர்த்து மற்ற அரசுகளும், தத்தம் கடவுள் பெயரால், ஜர்மனியை அழிக்க முயன்றன—கடந்த 5000 வருஷங்களாக கடவுள் பெயரால் நடக்காத கொலைகள் இல்லை, பொய்களில்லை, வஞ்சனை, மோசம், பொறாமைஇல்லை எல்லா துர்ச்செய்கைகளையும், "கிருஷ்ணார்ப்பணம் கிருஷ்ணார்ப்பணம்" என்று சொல்லிக்கொண்டே செய்து வந்தனர். ஆஸ்திகத்தால், உலகிற்கு விளைந்தகேட்டை தெரிந்து கொள்ள வேண்டியவர்கள், "மதத்திற்காக செய்துவந்த கொடுமை" (Religious persecutions) என்ற புத்தகத்தை வாசித்தறியலாம் கடந்த 5000, 10000 வருஷங்களாக உலக சரித்திரம் கடவுள் பெயரால் இரத்தத்தால் எழுதப்பட்டு இருக்கின்றதாயின், (அதற்கு என்ன சந்தேகம்?) கடவுள் இருந்துமென்ன இல்லாமற்போயுமென்ன? மனிதன் வாயில் இந்த வார்த்தை வராமலிருந்தாலே, கோடான கோடி தீச்செயல்கள், இவ்வுலகில் நடந்தேறியிரா, இனியும் நடவா:— மனிதனிடம் தோன்றியுள்ள தீக்குணங்கள், தீச்செய்கைகள், மனிதனைப்போன்ற சீவராசிகளிடத்து தோன்றாமையால் அவ்வித தீச்செயல்கள் யாவும், "கடவுள் அருளால்" நடந்து வருகின்றதென்றே சொல்லவேண்டும்.

மனிதனிடத்துள்ள களவு, திருட்டு, பொய், மோசம், புல், பூண்டு, செடி, புழு, மீன், பட்சி, மிருகங்களிடத்திலுண்டா? எந்த சீவன் மனிதனைப்போல் குடித்து வெறித்து, தன் மனைவியாளையும், தன்மக்களையும் வருத்துகிறது? எந்த மிருக ஜாதியில் தீண்டாதவர்கள் என்னும் வேற்றுமை இருந்து வருகிறது. எந்தப் பிராணிகளில், பலகோடி ஜீவராயிரம் பசித்து வருந்தி கிடக்க, இரண்டொருவரே நெய்யாலும், பாலாலும் வளர்கின்றார்கள். கோடிக்கணக்கான மனிதகூட்டங்களுக்கு உண்ண உடுக்க, வசிக்க போதுமான வசதிகள் இல்லாமலிருக்க, எந்த மிருகக் கூட்டங்களில், இந்த அகோர வாழ்வை பார்க்கலாம்? மனிதனைத்தவிர எந்த சீவராசிகள், கேவலம் மண்ணுக்கும், பொன்னுக்கும், சண்டை இடுகின்றன? மனிதனைத்தவிற மற்ற எந்தப்பிராணி, கட்டைக்கும், கல்லுக்கும் பூசை நெய்வேத்தியம் செய்கின்றன? கோடாகோடி மக்களுக்கு உறங்க இடமில்லாமலிருக்க எந்த சீவன் கோயில்களும், குளங்களும், விக்ரகங்களும், கோபுரங்களும், மசூதிகளும், மாதாகோயில்களும் கல்லுக்கும், கட்டைக்கும் கட்டுகின்றன? சோம்பித்திரியும் பண்டாரங்களுக்கும், பார்ப்பனர்களுக்கும், பாதிரிமார்களுக்கும் எந்த உலகில், எந்த சீவ கூட்டங்களில், உணவும், ஆடையும், பங்களாக்களும் கிடைத்து வருகின்றன? உழைத்து சீவிக்கும் மக்களுக்கு போதுமான உணவு, ஆடை, விடுதி கிடைக்காமலிருக்க எந்த மிருக கூட்டத்திலாவது, சில மிருகங்கள் உலக சுகபோகங்களை அனுபவித்து வருகின்றனவா? பட்டுப்பட்டாடை உடுக்கின்றனவா? சிலருக்கு மாத்திரம் கம்பளியும், பலருக்கு கைகளபீனங்கூட இல்லாமல் இருக்கின்றனவா?

கடவுளென்ற பெயரை, மனிதன் உச்சரிக்கப்போய், இவ்வித அனர்த்த வாழ்வு மனித வாழ்வில் மாத்திரம் கிடைக்கப்பெற்றுளன என்றால், இந்த பாழாய்ப்போன "கடவுள்" என்ற பெயரை ஏன் உச்சரிக்கவேண்டும்? மனித பாஷையிலிருந்து "கடவுள்" என்ற பெயரை எடுத்து விட்டால், மனிதகுலம், புனிதவாழ்வை அடைந்து இக்ஷணமே சுகம் பெறுமென்பதற்கு என்ன தடை?

"கடவுள்" மேல், மனிதர் வைத்துள்ள பக்தி, விசுவாசம், அன்பு, (Faith and Love) இல்லாவிடில், மனித சமூகத்தில், அன்பு, ஈகை, தயை, காருண்யம், நீதி, நியாயம், தானதருமம் இல்லாமலே போகுமென்பார் சிலர். இந்த வார்த்தைகளை சற்று விசாரித்தறிவோம். சீவராசிகளில் (Living Beings) தனித்து வாழும் சிற்சில புலி, சிங்கம் போன்ற, மற்ற சமூக சீவன்களில் யாவும் (Social animals) மேற்கூறிய தயை, தாட்சண்யம், ஈகை, அன்பு, ஆசைக்குறிய செய்கைகளைப் பார்க்கலாம். ரஷ்ய தேசத்து பிரின்ஸ் குருபாட்கின்: (Prince Kropotkin) "ஒருவருக்கொருவர் உதவி" (Mutual Aid) என்ற ஓர் நூலை இயற்றியுள்ளார். அதனை வாசிப்போர் மிருகங்களிலும், தாழ்ந்த உயிர்களிலும் எவ்வளவு ஈகை, தயை, தாட்சண்யம் அன்பு, ஆசை, காட்டுகின்றனவென்பதை எளிதில் அறிந்துகொள்ளலாம். அவ்வளவு சிரமம் எடுக்காவிடினும் (புஸ்தகங்களை படிப்பது கூட, சிரமமா?) எறும்பு, காக்கை, பீவர் (Beaver) முதலிய சமூக சீவன்களில் (Social animals) காணும் சமூக குணங்களாகிய தயை, தாட்சண்யம் கூட்டுறவு (Co-operation) மனித கூட்டங்களில் காண்பதரிது. —காக்கை, மற்ற காக்கைகளை கூவி அழைக்காமல் உண்பதில்லை. ஆனால் மனிதனே, தான் சாப்பிடும்போது மற்றொருவன் பார்த்தால் தோஷமென்று உண்ணும் உணவை சாக்கடையில் போட்டு விடுகின்றான். திருஷ்டி தோஷமென்று, பிராமண எம். கே. ஆச்சாரியார், எங்களுடன் உண்ண அசங்கிதப் படுகின்றார்!! சூத்திரர்கள் மனித வகையில் சேர்ந்தவர் அல்லவென்று சில இந்திய ஓட்டல்களிலும, காபி கிளப்புகளிலும், அவர்களுக்கு இடமில்லை என்று விளம்பரம் செய்யப்பட்டுள்ளது!!! தீண்டாதவர்களென்றே ஒரு தனி ஜாதி, எழு எட்டு கோடிமக்கள் நாயைவிட கேவலமாக நமது தேசத்தில் நடத்தப்பட்டு வருகின்றார்கள்? இந்த மானக்கேடான நடத்தை [Behaviour] எந்த மிருக கூட்டங்களில் பார்க்கின்றீர்கள்? மனிதனை மனிதன் இழிவு செய்யும் இந்த நாடு வேதவேதாந்தம் ஓதும் நாடாம்! நால்வர் தோன்றிய நாடாம்!! சென்னடாம்!!! பொன்னுடாம்!!!! சிவனை, விஷ்ணுவை, பிரமனை படைத்த நாடாம்!!!!! இருளன், வீரன், காட்டேரிக்கு பலி இடும் நாடாம்!!! இந்த நாட்டில் தான் மும்மூர்த்திகளும், முப்பத்தி முக்கோடிதேவர்களும், 48000ரிஷிகளும், கின்னரர், கிம்புருடர்(இவர்கள் யார்?) தோன்றியுள்ளாராம்! இவர்களுக்குத்தான் கோயில்களும், குளங்களும்,பிராமணனும், ஓதுவானும், தாசி வேசியரும் ஏற்பட்டுள்ளாராம்! இத்தியாதி பட்டப்பகல் பயித்திய சொற்கள் [Midsmmur mad words] இவ்வுலகில் ஏன் தோன்றினவோ? அதுவிளங்கவில்லை. ஆனால் கல்லையும், செம்பையும், மண்ணையும் கைகூப்பி தொழும் உலகத்தை, பயித்திய உலகமென்பதற்கு என்ன சந்தேகம்!

ஆதலின்; "கடவுள்" என்றபெயர் இன்றே உலகை விட்டுமறைந்து விடுமாயின், மனிதனுக்கு எவ்வித தீங்கும் விளையாதென அறிக. ஆனால், (On the contrary) அவன் படும் துன்பங்களுக்கு முதற்காரணமாயுள்ள "கடவுள்" என்றபெயர், ஒழிந்த மாத்திரத்தில், அவன் பலவித துன்பச் செயல்களிலிருந்து விடுபட்டு சுகமுறுவது நிச்சயமெனவும் அறிக.

இந்த முடிவை, நமதுசுயமரியாதை முதியோரும் விடாமுயற்சியுடன் விரும்பி உழைப்பார்களாக! நமதுதேசமக்களுக்கு, கடவுள், கோயில், பேய், பிசாசு, மந்திர தந்திரங்களின் மேல் வைத்துள்ள மூடநம்பிக்கை ஒழிய முயற்சிக்கவேண்டும். கோயில் குருமார்கள், மடாதிபதிகள் எத்தொழிலும் புரியாமல் வயற்றை வளர்த்து வரும்பழக்கத்தை நிறுத்த வேண்டும். கற்களின் பேரிலும், செம்புகளின் பேரிலும் போட்டுப் பார்க்கும் அளவிறந்த திரவியங்களை, வாழும் உயிர்களுக்கு உபயோக மாகும்படி பார்க்க வேண்டும். மோட்சநரகமென்ற பித்தலாட்டங்களை பாமர மக்களின் மனத்தினின்றுஓட்டவேண்டும். மறுபிறப்பென்றும், அதுவொழிந்த நிர்வாண நிலையென்ற வெறுஞ்சொற்களின் ஆபாசங்களின் எடுத்துக்காட்டவேண்டும். இவைஅனைத்தும் விடாமுயற்சியுடன்செய்து, பாமரமக்களின் அறியாமையைப் போக்கி, உலகை நாஸ்திகவழியில்திருப்புவதுதான், நமது பெருங்கடமையாகும். இதைவிடமேம்பணி உலகில் உண்டோ.

—— (தொடரும்)

## இராமசாமிக்கு கொழும்பில் இந்தியர்கள் விருந்து.

தென்னிந்திய சுயமரியாதை இயக்கத்தலைவரும், "குடி அரசு" பத்திராதிபருமாகிய திரு. ஈ. வெ. ராமசாமியார் தற்போது கொழும்பில் இருக்கிறார் என்பது நேயர்கள் அறிந்ததே. நேற்றிரவு, புறக்கோட்டை குமார வீதியிலுள்ள பெர்சியன்ஹோட்டலில் கொழும்பிலுள்ள இந்திய சமூகத்தார், இவருக்கு ஓர் விருந்துக் கொண்டாட்டம் கொண்டாடினார். அவ்வமயம், தொழில் மந்திரியாகிய கௌரவ திரு. பெரிசுந்தரம் தலைமை வகித்தார். கௌரவ திரு. இ. டபிள்யூ. அபயகுணசேகரா, கௌரவ திரு. ஜியார்ஜ் இ. டி. சில்வா, திரு. டி. சாரநாதன், திரு. பீ. ஜீவேந்திரசிங்கா, கௌரவ திரு. எஸ். பீ. வைத்திலிங்கம், திரு. வீ. சோமசுந்தரம், திரு. வீ. சோமசுந்தரம், திரு. ஏ. அருணாசலம், டாக்டர் கௌரவ எஸ். ஏ. விக்கிரமசிங்கா மற்றும் பலர் கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்தார்கள்.

"தினகரன்"

—— 21-10-32

# "மண் பூனை, எலி பிடிக்குமா?"

## எதிர்ப்புக்களை வரவேற்கிறோம்!

### "இரண்டு கண்ண"னுக்கு மக்கள் பயந்த காலம் மலையேறி விட்டது!

(திருமதி. ஆர். அன்னபூரணி)

"மடியில் கனமிருந்தால் வழியில் பயம்" என்பது ஓர் வழக்கச்சொல். பணத்தை மூட்டைகட்டி எடுத்துக்கொண்டு தனிவழியே போனால் திருடர் அடித்துப்பறித்துக்கொள்வார் என்பது அவ்வாக்கின் வெள்ளை அர்த்தம். "குற்ற முள்ள நெஞ்சு குறுகுறுக்கும்" "துரும்பியுள்ளது தினவெடுக்கும்" என்பது அக்கருத்துக்கொண்டே எழுந்தவாக்கியங்களாம்!

தன்னிடத்தில் ஏதேனும் குற்றத்தை மறைத்து வைத்துக்கொண்டிருப்போருக்குயாரேனும் உலக வசனமாக அதைப்பற்றி பேசினாலுங்கூட, அக்குற்றத்திற்குடையவர் தன்னைப் பற்றித்தான் கூறுகிறாரென்று எண்ணி, சட்டென ஏதாவது ஆத்திரத்துடன் கூறி "எங்களப்பன் குதிர்க் கூடையிலில்லை" என்ற கதையை மெய்ப்பித்துத் தங்களைத்தாங்களே 'சம்மனி'' ல்லாமல் "ஆஜர்" செய்து விடுவர்!

இதேகதைதான் இன்றைய வைதீகர் என்போரிடம் காணப்படுகின்றது! சுயமரியாதை இயக்கத்தின் தீவிரமான அபிவிர்த்தி வைதீகரென்போரைக்கிலிபிடித் தாட்டச்செய்கிறது! சுயமரியாதை என்ற பெயரைக்கேட்ட மாத்திரத்திலேயே பயம் இந்த மடிசஞ்சிகளின் உச்சிக்குடுமியைப்பிடித்து உலுக்குகிறது! வைதீகர்கள் என்றவுடன் இந்த மத "பெத்த பழங்கள்" மட்டிலுந்தான் என யாரும் எண்ணிவிட வேண்டாம்! இந்துமத குருக்கள் கூட்டத்துடன் கிறிஸ்துவப் "பாதிரி" மார்கள் "மேற்றிராணி" மார்கள், "முஸ்லீம்" மார்க்கத்தின் "முல்லாக்" கள் "ஆலிம்" கள் ஆகிய எல்லோருந்தான் சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க நோக்கி ஓங்கிய குரலில் ஓலமிடுகின்றனர்!

இன்னோரின் ஓலத்தையோ, அன்றி ஒப்பாரி மாரடிப்பையோ பற்றி நமக்குச்சற்றும் கவலையில்லை. இந்த "பூச்சாண்டி" களெல்லாம் நமது சமதர்ம இயக்கத்தை ஒன்றும், செய்து விடமுடியாது! எனினும் இரண்டொரு விஷயங்களைமட்டிலும் இந்த ஒப்பாரிக் கூட்டத்தினருக்கும்;இளைஞருலகத்திற்கும் நினைப்பூட்ட விரும்புகிறோம்!

இன்று வெற்றிமேல்வெற்றியுடன் யாண்டும் பரவிவரும் தன்மதிப்பியக்கம், குறிப்பிட்ட எந்த ஒரு மதத்தையோ, ஜாதியையோகடவுளையோ, அன்றி மனிதரையோ, தாக்கி ஒழிக்கவேண்டு மென்ற குறிக்கோளின் மேல் எழுந்த தன்று. உலகில் பிறந்த மக்களெல்லோரும் எல்லாவகைகளிலும் இன்புற்று வாழவேண்டும்'' என்னும கருத்தினையே கொண்டு இவ்வியக்கம் இயங்குகிறது. அவ்வின்பவாழ்க்கைக்கு எதிரிடையாய்— முட்டுக்கட்டையாய் நிற்பவை எவை எவையோ, அவையெல்லாம் அழிந்தொழிய வேண்டுமென்னும் அவசியத்தை நன்குணர்ந்து இவ்வியக்கம் வேலை செய்கின்றது!

இந்த அவசியத்தில் மதங்களும், சால்திரங்களும்; ஜாதிகளும், பழையக்கட்டுப் பாடுகளும், கடவுளின் பேரால் நடக்கும் அக்கிரம, அநீத, அயோக்கியத்தனங்களும், அடிபடுகின்றன. ஏனெனில் மக்களின் இன்பவாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு இவைகள் பலவகைகளிலும், முட்டுக் கட்டைகளாயிருப்பதினால்தான்; என்பது இதுகாலை வெள்ளிடை மலையென விளக்கப்பட்டுள்ளது.

இந்தக்கட்டுப்பாடுகளின் பெயரால் உடல் நோவாது உண்டு வாழ விரும்பும் ஒருசிலரின் சுயநலமும், வஞ்சகமும், பொய் புரட்டுகளும், ஏமாற்று மயக்குவார்த்தைகளும், தன்மதிப்பியக்கத்தின் லட்சியங்களுக்கு நேர் எதிரானவைகளாதலின் அவைகளும் தாமாகவே அம்பலத்திற்கு கொண்டு வரப்படுகின்றன!

மனிதன் சுகமாக வாழ்வதற்கு எதிரிடையாய் உள்ளவை எவை எவையோ, அவையெல்லாம் பட்டொழியட்டும் எனச்சுயமரியாதை இயக்கம் கூறுகையில் "எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும்" என எண்ணுவோர் எவரும் இவ்வியக்கத்தைப் போற்றி வரவேற்கவே கடமைப்பட்டுள்ளார்களென்பது விளக்கமாம்! அங்ஙன மிருக்க ஒருசிலர் மாத்திரம் இதனை எதிர்த்து உலகமே மூழ்கி விடப்போவதாகக் கூக்குரலிடுவதானது சுயநலமும், பிறரைஏமாற்றி பிழைக்கும் மானங்கெட்ட தன்மையும் தங்களிடத்திலிருக்கின்றன வென்பதை "எங்களப்பன் குதிர் கூடையிலில்லை" என்ற தோரணையில் தாங்களே வெளியாக்கிக்கொள்வதாகத்தான் இவர்களது கூக்குரல் உணர்த்து மென்பதை இக்கூட்டத்தினர் உணராது போயினும், உலகம் உணராமற் போகாது என்பதை இவர்கள் அறிந்து கொள்ளாதிருப்பது இரங்கற்குரிதாம்!

சுயமரியாதை யியக்கமெனும் நெருப்பில் தங்களது சுயநல வஞ்சகப் புரட்டுகளும், அவற்றிற்கு சான்று தரும் ஓலைச்சுவடிகளும் பொசுக்கி நீராக்கப் படுவதையும், அதனால் தங்களது ஏமாற்று பிழைப்பில் தென்னியமண் விழுவதையும் அறிந்தே இச்சிற்றறிவினர், தன்மதிப்பியக்கத்தை ஒழித்து விடுவான் வேண்டி தனித் தனியாகவும் கூட்டங்கள் கூடியும் எதிர்த்து பார்த்தனர். மகாநாடுகள் கூட்டி கண்டனத் தீர்மானங்கள் செய்தும், பத்திரிகை வாயிலாய் பொய்ப்பிரசாரம் செய்து எதிர்த்தும் பார்த்தனர்! பாமர மக்களிடம் வெட்கங்கெட்ட முறையில் இவ்வியக்கத்தின் தன்மைகளைத்திரித்துக்கூறி அவர்களின் கோபத்தை இவ்வியக்கத்தின்மேல் திருப்பியும் பார்த்தனர்!

இன்னும் அர்ச்சகர் கூட்டத்தினர் சுயமரியாதை இயக்கம் செத்து போகட்டு'' மென கடவுள்களை "சகஸ்திர நாம அர்ச்சனைகள்" மூலம் வேண்டியும் பார்த்திருக்கலாம்! இன்னும் கும்பகோணங்கள் கூடி ஆடுரித்துத்தின்று தன்மதிப்பியக்கம் மாண்டு மடியட்டு,, மென அக்கினியில் நெய்யூற்றி அவிர்ப்பாகங்களிலும் கொடுத்திருக்கலாம்,

ஆனால்; இவையெல்லாம் தன்மதிப்பியக்கத்தை இதுவரையில் என்ன செய்துவிட்டன? வென்பது தான் கேள்வி. தன்மதிப்பியக்கத்தை ஒரு அணுவளவேனும் இவை அசைத்ததாக இல்லை! அதற்குமாறாக, அதனைவிளம்பரப்படுத்தி, தங்கள் ஜம்பம்பலிக்கவில்லை யென்பதையும் பொதுமக்களுக்கு விளக்கிக்காட்டி, அதனால்பெரும்வெற்றியைத்தான் இவ்வியக்கத்திற்களித்தன!

தன்மதிப்பியக்கம் இந்துமதத்திலுள்ள மூடக்கட்டுப்பாடுகளைத்த கர்த்தெறிந்துதவிடு பொடியாக்குகையில் கிறிஸ்துவ மதமும், முஸ்லீம் மதமும்பருப்பில் நெய்வார்த்தது போல் மகிழ்சிப்பெருக்கால் மனம்பூரித்திருந்தன வென்பதை நாடறியும்! ஆனால், சுயமரியாதை இயக்கத்தின் நெருப்புக்கொழுந்து கிறிஸ்துவ, இஸ்லாமிய, மதங்களிலும் வீசஆரம்பித்தவுடன் பாதிரி, முல்லாக்கூட்டங்கள் மீசைகளை முறுக்குகின்றன! சுயமரியாதை இயக்கத்தின் நெருப்புப்பிழம்பு இம்மதங்களிலும் பற்றியதெனில், அம்மதங்களிலுள்ள மூடக்கொள்கைகள்தான் அதற்குக்காரணமாகும் என்பதைநாம் விளக்கிக்காட்ட வேண்டுவதில்லை.

இதுவரையில் இந்த எதிர்ப்புக் கோஷ்டியினரின் எதிர்ப்புகளெல்லாம் வீணாரவாரமாகவே முடிந்ததோடு, தன்மதிப்பியக்கம் அவற்றையெல்லாம் மேளதாளத்தோடு வரவேற்றதென்பதை பொதுமக்கள் நன்கறிவர். இதுவரை சுயமரியாதை இயக்கம் கூறியுள்ளவற்றில் அறிவிற்குப் பொருந்தாதவை எவையென்பதைத் தெள்ளத் தெளிய எடுத்து பத்திரிகைகள் மூலமாயும், உபந்நியாசங்கள் மூலமாயும் பொதுமக்களுக்கெடுத்துக் காட்ட எந்த ஜீயரும், அந்த மடாதிப திபண்டார சன்னதியும், எந்த தர்ப்பைப்புல் வீரரும், எந்த பாதிரி, முல்லாக்களும் வெளிவரக்காணோம்! கூட்டத்தில் "கோவிந்தா" போடுவது போல் "சுயமரியாதை இயக்கம் குடி கெடுக்கப் பார்க்கிறது" எனத்தொண்டைகிழிய கத்தி மண்டையை உடைத்துக்கொண்டதுதான் இதுவரையில் இவர்கள் செய்துள்ள வேலையாகும்! 'வாதம் புரிவோர் வரலா'' மென அறைகூவியழைக்கப்படும் எந்த சுயமரியாதைக் கூட்டங்களிலும் இந்த கோஷ்டியினர் வாதம் புரிவதை விட்டு நரிகள், நண்டு, நத்தைகள் போல் சந்துபொந்துகளில் பதுங்கிக்கொண்டு காலிகளை ஏவிக்கூட்டத்தில் கல்லையெறியச்செய்வதும் இவர்கள் சாதித்துள்ள மற்றொரு வேலையாகும்!

கத்தோலிக்க, கிறிஸ்துவ மார்க்கத்திலுள்ள இளைஞர்களின் மனதில் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள் ஆழப்பதிந்து, அதனால் அவர்களைப் பற்றியிருந்த மூடக்கொள்கைகள் ஒழியவே, சாதாரணபிறப்பு, இறப்பு, கலியாணம் முதலியவற்றில் அதற்குமுன் அவர்களுக்கு இருந்த தெய்வீக மதிப்புபோய் விடலாயிற்று. அது அவர்களின் மனதைப் பிணைத்திருந்த அடிமைத் தளையை ஒரு சிறிது அகற்றி சுயேச்சையளித்தது ஆனால், அதேசமயத்தில் அது பாதிரிமார்களின் வரும்படியில் மண்ணைப் போடுவதாயிருப்பதைக் கண்டபாதிரிமார்கள், தாடிகளைத்தட்டிக் கொண்டு பதறி எழுந்திருக்கிறார்கள்! மகாநாடுகள் கூட்டி சுயமரியாதை இயக்கத்தை கண்டிக்கிறார்கள்; குடிஅரசைப் படித்தால் ஜாதிப்பிரஷ்டம் செய்து விடுவதாகப் பூச்சாண்டிகாட்டியிருக்கிறார்கள். ஆனால் இவைகளெல்லாம் "எவ்வெந்த நியாயங்களைக்கொண்டு" என்பதுதான் விளக்கப்படவில்லை! மேலும் பொதுக் கூட்டங்களிலும் பத்திரிகைகளிலும் மகாநாடுகளிலும் சுயமரியாதை இயக்கத்தை கண்டித்து எதிர்ப்பிரசாரம் செய்ய வேண்டு மென்றும் தீர்மானித்திருக்கிறார்களாம்! ஆஹா! எத்தனை வீரம!

ஆனால் சுயமரியாதை இயக்கம் இவற்றிற்கெல்லாம் உலகறிந்த நல்வரவேற்பளிக்கிற தென்பதை இந்த கத்தோலிக்க குருமார்களுக்கறிவிக்க விரும்புகிறோம்.

எந்த மதங்களிலுமுள்ள தெய்வீக நம்பிக்கையும், அர்த்தமற்ற கட்டுப் பாடுகளும், சடங்காச் சாரங்களும்

இன்றைய மக்களுக்கு வயிற்றுக்கு சோற்றையும், உடுக்க உடையையும், ஒண்டியிருக்க வீட்டையும், நோயற்ற வாழ்வையும் கொடுக்குமாயின் அவற்றில் நம்பிக்கைகொண்டு கையாடுவதில் சுயமரியாதை இயக்கத்திற்கு தண்டா இல்லை. ஆனால் அறிவிற்கு பொருந்தாததும், அவசியமற்றதும் வீண்செலவிற்கு வழிவைப்பதும் காலத்தை வீணாக்குவதுமான பழக்க வழக்கங்கள், சட்ட திட்டங்கள், எந்த ஜாதியின் பேராலிருப்பினும், எந்த சமயத்தின் பேராலிருப்பினும், எந்த சாமியின் பேராலிருப்பினும், எத்தனை நீண்டகால பழக்கத்திற்குள்ளாயிருப்பினும் அவை மக்களுக்கு ஒரு சிறிதும், அணுவளவேனும் நன்மை பயக்காதென்பதையும், நன்மைக்கு மாறாகப்பல சங்கடங்களையே நல்குமென்பதையும் உறுதியுடன் கூற சுயமரியாதை இயக்கம் சற்றும் தயங்க வில்லை. இவ்வுண்மையைச் கோபுரத்தின்மீதிருந்தும் "சர்ச்சுகள்" "பள்ளிவாசல்கள்" "விகாரங்கள்" ஆகியவற்றின் உச்சி மீதுருந்தும் உரத்த தொனியில் கூறவும் தன் மதிப்பியக்கம் எப்பொழுதும் தயாராயிருக்கிறதென்பதை இக்கோஷ்டியினருக்கறிவிக்கிறோம்.

கடைசியாக, நாமிக்கூட்டத்தினருக்குஅறிவிக்கவிரும்புவதென்னவெனில், "அதோ பூச்சாண்டி" "இதோ இரண்டு கண்ணன்" என்பதற்கெல்லாம் மக்கள் பயந்த காலம் மலையேறிவிட்டதென்பதையும், மேலும் அர்த்தமற்ற சமூகக்கட்டுப்பாடுகள் மக்களின் இன்றைய இன்பவாழ்க்கைக்கு துணைபோகுமென்று எதிர்பார்ப்பதும் இவ்வித எதிர்ப்புகளெல்லாம் சுயமரியாதை இயக்கத்தைக் குழிதோண்டி புதைத்து விடலாமென எதிர்பார்த்தும் "மண் பூனை எலிபிடிக்கு"மென எதிர்பார்த்தவன் கதையையே ஒக்கும் என்பதையும், இவ்வைதிகக்கோஷ்டியினரும் இளைஞருலகமும்தீர்க்கமாய் அறியவேண்டுகிறோம்!

---

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

ரிடமும் அறிவு இருக்கின்றதென்பதை அறியலாம். ஆனால் அவ்வறிவு வளராமல் பலரிடம் குன்றியிருப்பதற்குக் காரணம் நம்பிக்கை ஒன்றேயாகும். அதாவது ஒரு பொருளைப் பற்றித்தானே சிந்திப்பது என்ற நிலைமாறி, ஒருவர், அதாவது பெரியோர் என்பவர் கூறியதை அப்படியே நம்புவது; ஏற்றுக்கொள்ளுவது என்ற நிலை ஏற்பட்டதே காரணமாகும்.

மதங்களிலும், மதசம்பந்தமான நூல்களிலும் கூறும் செய்திகளை அப்படியே நம்பவேண்டுமென்பது தான் மதக்கட்டளையாக இருக்கின்றது. அவற்றை நம்பாதவன்—சந்தேகிக்கின்றவன், கடவுள் தண்டனைக்கு ஆளாவான்; நரகத்திற்குச் செல்லுவான்; என்று பயமுறுத்தி அவைகளை நம்புமாறு செய்யப்படுகின்றது.

இத்தகைய மதங்களைப்பற்றிய கட்டளைகளைப்பற்றியும், நூல்களைப் பற்றியும் பிரச்சாரம் பண்ணிய புரோகிதர்கள் ஜனசமூகத்தினிடம் நம்பிக்கை என்னும் குணத்தை உண்டாக்கிவிட்டனர். இதுவே மக்களுடைய அறிவுக்கு எமனாய் முடிந்தது. ஆகவே மக்களுடைய அறிவுவளர்ச்சியடைய வேண்டுமானால் இந்த நம்பிக்கை என்னும் பாழும் குணம் நம்மை விட்டு ஒழிய வேண்டும்; நாம் காணும் எதையும், ஆராய்ந்து அறிய வேண்டும்; நாம் கேட்கும் எதையும் சிந்தித்துப்பார்த்து நம்பவேண்டும். இத்தகைய நிலை ஏற்பட்டால்தான் மக்களுடைய அறிவு வளர்ச்சியடைய முடியும்.

ஆகையால், "நம்பினால்தான் நன்மையுண்டு; நம்பாவிட்டால் நரகம் கிடைக்கும்" என்னும் போலி மொழிகளுக்கு அஞ்சாமல் "எப்பொருள் யார் யார்வாய்க்கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்பது போல உண்மையறிய முயல வேண்டும். நம்மைக்காட்டிலும், உயர்ந்தவர்—அறிவுடையவர்—திறமையுடையவர்—பெரியவர் என்பவர்கள் சொற்களையும் ஆராய்ந்து அறிந்தே நம்பவேண்டும். நம்மைக் காட்டிலும்— இழிந்தவர்—அறிவற்றவர்—திறமையற்றவர் என்பவர்கள் கூறும் சொற்களையும் அலட்சியம் பண்ணலாகாது; அவைகளையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அவைகளில் உள்ள அறிவுக்கிசைந்த கருத்துக்களை—அனுபோகத்திற்கு ஒத்த செய்திகளை ஒப்புக்கொள்ள வேண்டும்.

இத்தகைய சிந்திக்குமறிவு நமது மக்களிடம், அதாவது ஜனசமூகத்தின்பால் ஏற்பட்டுவிடுமானால், இப்பொழுது இருக்கும் போலி மதங்களுக்கும், போலிசாத்திரங்களுக்கும் வேலையில்லை; எல்லாம் தாமே ஒழிந்துவிடும்; ஆகையால் நமது வேலை ஜனசமூகத்தின்பால் சிந்திக்கும் அறிவை உண்டாக்குவதேயாகும். ஆகையால் 'எதையும் யோசனை செய்து பாருங்கள்! சிந்தித்துப் பாருங்கள்! கண்மூடித்தனமாக நம்ப வேண்டாம்" என்றே நாம் சொல்லி வருவோம். "அறிவில்லார் எவரும் இல்லை; எல்லோரும் அறிவுடையவரே" என்று பறைசாற்றுவோம். "அறிவை அமிழ்த்துவது நம்பிக்கையே; கண்மூடித்தனமான நம்பிக்கையே; பகுத்தறிவற்ற நம்பிக்கையே" என்பதை எடுத்துக்காட்டுவோம்; மக்களை உணரச் செய்வோம்.

---

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

னும் வித்தை கையாளப்படுகிறதென்பதைப் பலர் அறிந்திருக்கலாம். இத்தகையதன்னம்பிக்கைக்கு, "நான் இக்காரியத்தை எப்படியாவது செய்து முடிப்பேன்" என்ற மனோ உறுதியும், அதற்கான சாதனங்களைப் பெறுதலுமே வழிகளாம்.

ஆனால் பெரும்பாலான மக்கள் கடவுளிடம் பெரும்பாரத்தைப்போட்டு, எல்லாம் அவரது செயலால் தான் ஆகிறதென்றும், மனித யத்தனித்தில் எதுவும் ஆவதில்லை, எல்லாம் விதியின் பிரகாரம் தான் ஆகிறதென்றும்; எல்லாம் அவரவரது அதிர்ஷ்டம் போலதான் ஆகுமென்றும் நம்பும் மனப்பான்மையால் மக்களது தன்னம்பிக்கைச் சக்தி குறைபடுகுறது.

இவ்விந்திய நாட்டில், இந்து மதத்தின் பேரால் எழுதப்பட்டுக்குவிந்து கிடக்கும் நூல்களில், "அவனன்றி ஓரணுவும் அசையாது" "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" "கொடுக்கும் தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுக்கும்" "ஊழ்வலி தன்னின் மிக்கது உலகினில்லை" என்பவை போன்ற வாக்கியங்கள் மலிந்து கிடக்கின்றன. அவற்றை நம்பும் மக்களே பெரும்பான்மையினராயிருக்கின்றனர். ஆதலின் இம்மக்கள் எதைச்செய்ய முற்படினும் "எல்லாம் அவன் செயல்" என்று மனதைச்சமாதானம் செய்து வாளாவிருக்கின்றனர்.

யாரேனும் ஒருவர் ஒருகாரியத்தைச்செய்ய முற்படுகையில், எவ்வாற்றானும் செய்துமுடிப்போம் என்று நம்பிக்கையின்றி "என்னவோ அமைப்புப்போல் ஆகும்" என்றெண்ணிக்கொண்டு செய்ய முயலுவானேல், அவன் அவ்வேலையில் முழு ஊக்கங்கொண்டு செய்தல் எங்ஙனம் இயலும்? ஒருக்கால் அவன் மேற்கொண்ட வேலையில் ஏதேனும் குறையேற்பட்டு அவ்வேலை முற்றுப்பெறாது போமாயின், அவ்வளவில் அவன் "என்னவோ அது இறைவன் அமைப்பு அவ்வளவுதான் போலும்! இவ்வேலையைச் செய்து முடிக்க நமக்குப் 'பிராரப்தம்' இல்லைபோலிருக்கிறது" என்று தன்னைத்தானே சமாதானஞ் செய்து கொண்டு அம்மட்டில் அவ்வேலையைத்தாளத்தில் போட்டு விடுகின்றனர்.

இந்த "பிராரப்தம்" "அமைப்பு" கொடுத்து வைத்தது அவ்வளவுதான்" "இறைவன் சித்தம் இப்படி" என்பவற்றைக் கவனிக்காத ஒருவன் என்ன செய்கிறான்?

தான் மேற்கொண்ட காரியத்தில் தான் வெற்றி யடையாது போனதற்குக்காரணம் என்னவென்று ஆராய்கிறான். விசேஷ ஆராய்ச்சியின் மேல் தனது தவறைக்கண்டு பிடிக்கிறான். பின்னர் அத்தவறைத்திருத்திச்சரிப்படுத்திக்கொண்டு மீண்டும் அவ்வேலையைத்துவக்குகிறான் அவ்வேலை பூர்த்தியாகிறது.—முதலில் இவனது தவறால் பூர்த்தியாகாது போன அதேவேலையைப்பின்னர் அவன் தனது விசேஷ முயற்சியால் பூர்த்திசெய்து விட்டான். ஆனால் முதலில் அவ்வேலையில், குறைவேற்பட்டு அது முடிவுபெறாது போனவுடன், அவன் "இவ்வேலையைச் செய்து முடிக்க நமக்குப் பிராரப்தமில்லை போலும்" என்றெண்ணி அம்மட்டில் சும்மா இருந்து விடுவானேல் இந்த வெற்றி அவனுக்கு ஏற்பட்டிருக்குமா?

எனவே, இன்னோரன்ன நியாயங்களால் "தன் அறிவிற்கும் அனுபவத்திற்கும் அப்பாற்பட்ட "பிராரப்தம்" "விதி" "அவன் செயல்" என்பவற்றின் பேரில் பழியும், பொறுப்பும் வைத்து தன் முயற்சிக்கு ஓர் தடையைத்தானாகவே மனிதன் ஏற்படுத்திக் கொள்வதால்—"தன்னம்பிக்கை" என்னும் அரிய சக்தி மனிதனிடமிருந்து பாழாகிறது.—இவ்வகையாகவே மனிதனின் "தன்னம்பிக்கை" க்ஷீணதசைக்கு வரலாயிற்று.

மனிதன் மறுபடியும் தன்னம்பிக்கையுடையவனாய் சலியாஊக்கத்துடனும், விடாமுயற்சியுடனும், முயன்றஎக்காரியங்களிலும் வெற்றிபெறவேண்டுமானால், இந்த "பிராரப்தம்" போன்ற தொகுதிகள் தொலைக்கப்படவேண்டும் என்பது பெறப்படுகின்றமை காண்க.

இவற்றை அகற்ற முயலுகையில் இந்த "பிராப்தம்" "விதி" "அவன் செயல்" என்பன எல்லாவற்றையும் சாத்திரங்களும், மதங்களும், கடைசியில் கடவுளும் கை கொடுத்து ஆதரித்து நிற்பதால்—"பிராரப்த" "விதி" வகையராவை ஒழிக்க முயலுகையில், இந்த மத சாஸ்திர, கடவுள்கள் அம்பலத்திற்கு வருகின்றன.

எனவே "தன்னம்பிக்கை"யை விரும்பும் எவரும் இந்த பிராரப்த பல்லவிகளை ஒழிக்கவேண்டுமாயின், அங்கு மதம், கடவுள் முதலியனவும் இடம் பெறாது போகவேண்டும். "உண்மையில் கடவுளும், பிராப்தமும் இருப்பதானால் இருக்கட்டும்; என் வேலையை என்னால் இயன்ற மட்டில் முயலுவேன்" என எண்ணும் மனப்பான்மை மனிதனுக்கு வேண்டும்.

ஆகவே "சமதர்ம" வாழ்வில் தன் மதிப்பும், தன்னம்பிக்கையும் நிலைநிற்கவேண்டியதவசியம் என்பதும், அவ்வவசியத்தில், ஏழை, பணக்காரன் முதலாளி, தொழிலாளி, மேல் ஜாதி, கீழ் ஜாதி என்பவையும், "அவன்செயல்" "பிராரப்தம்" "விதி" எனப்படுவையும் தகர்த்தெறியப்படுகின்றமை காண்க.

---

## புரோகிதம் ஒழிக்கப்பட்டது.

புதுக்கோட்டை சமஸ்தானம் மாஜி சட்டசபை மெம்பரும் விசலூர் குன்னண்டார் கோவில் தேவஸ்தான விசிட்டருமாகிய புலியூர் ஆர். எஸ். சிவம் அவர்கள் 17-10-32 தேதி காலஞ்சென்று விட்ட தனது சிறிய தந்தை பொன்னுசாமி பிள்ளையவர்களுக்குச் செய்யவேண்டிய பிதிர்க் கருமாதிகளனைத்தும் மூடச்செயலென்றுணர்ந்து பிரேத அடக்கம் தவிர மற்றக்கிரிகைகளை முழுதும் நீக்கிவிட்டார்கள். ஒரு நிருபர்.

## ஈரோடு முனிசிபாலிட்டி.

### ஜில்லா கலெக்டர் பாராட்டு

இம்முனிசிபாலிட்டியின் தற்போதய தலைவர் உத்தியோகம் ஏற்றசிறிது காலத்திற்கு பின்புதான் சர்க்கார் மெமோராண்டம் 37836-1. பி 2-ம், சர்க்கார் ஆர்டர் 5414 எல், எம் பாஸ் செய்யப்பட்டதானாலும், இம் முனிசிபல் நிர்வாகத்தில் குறிப்பிடத்தக்க அபிவர்த்தி ஏற்பட்டிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

தனிகர் வசிக்கும் சுற்றுப்புரங்களிலுள்ள ரோடுகளும், ஜலதாரைகளும் இருப்பதுபோல் ஏழைமக்கள் வசிக்கும் சுற்றுப்புரங்களிலும் ரோடுகளும் ஜலதாரைகளும் நல்லநிலைமையிலேயே இருக்கின்றன. நகரம் சுத்தமான தாயிருக்கிறது. எந்தஜலதாரையும், அசுத்தமானதாயும், குப்பை கூளங்கள் நிறம்பியுமிருக்கப்பார்க்கவில்லை. ஆரம்பப் பாடசாலைகள் ஆண்பிள்ளைகள் சம்பந்தப்பட்டவரையில் போதுமான திருக்கிறது. ஆனால் பெண்கள் கல்விஅபிவிர்த்திக்கு போதியவசதிகள் உண்டாக்கப்படல்வேண்டும். முனிசிபாலிட்டியார் ஆயூர்வேத ஆஸ்பத்திரியை எடுத்துவிட்டது நியாயமேயாகும். ஏனெனில் நகரமெங்கும் வைத்தியசிகிச்சைக்கும் உதவிக்குப் போதுமான ஸ்தாபனங்கள் இருக்கும்போது இதொன்று அவசியமில்லையென்றே தோன்றுகிறது. சிசுமரணம் சற்று குறைந்தே காணப்படுகின்றது. சிசு சம்ரக்ஷணவிடுதிகள் ஏற்படுத்துவது சம்பந்தமாய் கவுன்சில் யோசித்து வருவதாய் அறிகிறேன்.

புதுச்சந்தப்பேட்டையில் மோட்டார் பஸ்களும் வண்டிகளும் நிறுத்துமிட மொதுக்க யோசித்து வருவதாய் தெரிகிறது. இதில்லாத குறையால் ஜனநெருக்கத்தால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டு வருகிறது.

வரிவசூல், கணக்குகள் சம்பந்தமாய் கணக்குப்பரிசோதகர் அறிக்கையிலிருந்து மிகுந்த திருப்திகரமாயும் ஒழுங்காயும் இருப்பதாய் அறிகிறேன்.

அங்கத்தினரது நன்மதிப்பும் ஒற்றுமையும் தலைவர் பெற்றிருக்கிறார். ரெவின்யூ டிபார்ட்மெண்டாரது உதவியும், யோசனையும் பெறத்தயாராயிருப்பதும் சந்தோஷிக்கத்தக்கதே.

---

## நண்பர்களுக்கு.

திருச்சியிலிருந்து தோழர். ராம சுப்பிரமணியம் எழுதுவதாவது:-

காரைக்குடி குமரனுபீசிலிருந்து இம்மாதம் புதிதாக வெளிவந்த 'ஊழியன்' மாதப்பதிப்பில் ஆசிரியர் ராம சுப்பரமணியன். செட்டியார், பிரிண்டர், பப்ளிஷர் சொ. முருகப்பா என்று குறிக்கப்பெற்றுள்ளது. அதிலுள்ள ஆசிரியர் ராம சுப்பரமணியன் செட்டியார் தாங்களா? அல்லவா? அதில் ஏதாவது சம்பந்தம் உண்டா என்று தெரிவிக்குமாறு பல கடிதங்கள் நண்பர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றேன்.

எனக்கு தபாலில் கிடைத்த ஊழியன் மாதப்பதிப்பில் ஆசிரியர் ராம சுப்பரமணியன் செட்டியாருக்குக்கீழ் கண்டனார் என கையால் எழுதப் பெற்றிருக்கிறது. மற்றை யோருக்கு இவ்வாறு எழுதப்படவில்லை என்பதை வினுக்கடிதங்களிலிருந்து அறிகிறேன். என் பெயருக்குப் பின் வரும் செட்டியார் என்னும் ஜாதிப்பட்டம் என்னால்கழிக்கப்பெற்றவற்றுள் ஒன்றாகும். ஆகவே ஊழியன் மாதப்பதிப்புக்கும், எனக்கும் எவ்வித சம்பந்தமில்லை என்பதை நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

---

## நாகை சுயமரியாதைச் சங்கம்.

இச்சங்க வாரார்ந்திரக் கூட்டமொன்று சங்கத்தலைவர் தோழர் ஆர். வி. கோபால் தலைமையில் 6-11-32ந் தேதி கூடியது. தோழர் குஞ்சு அவர்களால் சுயமரியாதைக்கீதங்கள் பாடப்பெற்றபின் "ஆதிதிராவிடரும், நமது கடமையும்" என்பதுபற்றித் தோழர்கள் எம். ஆர். பதி, எஸ். பி. கிருஷ்ணன், எம். ரங்கசாமி, கே. முருகேசன் முதலியவர்கள் பேசிய பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள்நிறைவேறின.

1. பார்ப்பனரல்லாத பிரமுகரான கனம்பொப்பிலி அரசர் முதன்மந்திரியாக நியமிக்கப்பட்டதைக் குறித்து இக்கூட்டம் மகிழ்ச்சியைத்தெரிவித்துக்கொள்கிறது.

2. சென்னை நகரசபைத்தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. செட்டிநாட்டுக் குமாரராஜா அவர்களை இக்கூட்டம் பாராட்டுகிறது. ஒரு நிருபர்.

---

## திண்டுக்கல்.
### அகிலதேச கூட்டுறவாளர் தின கொண்டாட்டம்.

5—11—32ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு அமெரிக்கன் மிஷன் பள்ளிக்கூட கட்டிடத்தில் பாதிரியார் இ. ஜி. நிக்கல்ஸ் எம் ஏ. பி.டி., அவர்கள் தலைமையின் கீழ் அகிலதேச கூட்டுறவாளர் தினக் கொண்டாட்டம் திண்டுக்கல் விற்பனை சொஸைடி ஆதரவில் நடைபெற்றது. சுமார் 100 கூட்டுறவாளர்கள் குழுமியிருந்தனர். அதில் கத்தோலிக்க தாழ்த்தப்பட்ட கிறிஸ்துவர்கள் அதிகமாக வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. பல அன்பர்கள் பல அறிய விஷயங்களைக்குறித்துப்பேசப்பட்டு கூட்டம் கலைந்தது.

---

## திருச்செங்கோடு வாலிப சகவாச சங்கம்.
### சமரஸ சீர்திருத்தவீரர்களுக்குப் பாராட்டு.

நவம்பர் மாதம் 6-தேதி ஞாயிறு மாலை சுமார் 4-30 மணிக்கு வாலிப சகவாச சங்கக்கட்டிடத்தில் வாராந்திரக்கூட்டமொன்று கூட்டப்பட்டது. கூட்டத்திற்கு தோழர் எஸ். வி. மகாலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார். அவ்வமயம் "மக்களும் மணமும்" எனும் பொருள்பற்றித் தோழர்கள் வி. ருத்ரம், எஸ். கே. வரதராஜுலு, எஸ். சி. ஆர். சாமி, டி. ஏ. கைலாசம், டி. ஏ. சங்கரலிங்கம் முதலாயினோர் மிகவும் உருக்கமாகச் சொற்பொழிவாற்றினர்கள். பின்னர் அக்கிராசனர் முடிவுரையானதும் கீழ்க்கண்ட தீர்மானங்கள் கூட்டத்தாரால் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

### தீர்மானங்கள்.

1. நமது நாட்டிலுள்ள தீண்டாமைப் பேயை ஒழிப்பதற்கும், உயர்வு தாழ்வை ஒழிப்பதற்கும் சமத்துவம் சகோதரத்துவம், சுதந்திரம் முதலியவைகளை உண்டாக்குவதற்கும் ஆதாரமாகவுள்ள ஆலயப்பிரவேசத்தீர்மானத்தை சென்னை சட்டசபையில் நிறைவேற்றிய நமது சமுதாய சீர்திருத்த வீரர் கனம் டாக்டர் பி. சுப்பராயன் அவர்களையும் அதற்கு ஆதரவளித்த அங்கத்தினர்களையும் இக் கூட்டம் பாராட்டுகிறது.

2. சென்னை மாகாண முதன் மந்திரி பதவியை கனம் பொப்பிலி மகாராஜா அவர்கள் ஏற்றுக்கொண்டதைப்பற்றி இக்கூட்டம் மிகவும் சந்தோஷப்படுகிறது.

3. கனம் செட்டி நாட்டு குமாரராஜா அவர்கள் சென்னை நகரசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைபற்றி இக்கூட்டம் சந்தோஷிக்கிறது. ஒரு நிருபர்.

## பட்டுக்கோட்டை
### பனகாலரசர் வாசகசாலை ஆரம்பவிழா.

1932ஆம் நவம்பர் மீ 7உ திங்கட்கிழமை இரவு 8மணிக்கு பட்டுக்கோட்டை பெரியகடைவீதியில் வாசகசாலைக்கென ஏற்படுத்தப் பெற்றிருக்கும் கட்டிடத்தில், ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. உயர்திரு. பி. எஸ். தண்டபாணி அவர்கள் தலைமை வகித்து வாசகசாலையின் அவசியத்தையும், அதனால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் பற்றி எடுத்துகூறினார். அதன் பிறகு பனகாலரசர் வாசகசாலை என்ற பெயருடன் முன்பு நடந்து கொண்டிருந்த வாசகசாலையை மீண்டும் திருத்தியமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கு பல அன்பர்களை நிருவாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. பிறகு தோழர்களான ராஜகோபால், டேவிஸ் பி. ஏ., குஞ்சிதபாதம் முதலியவர்கள், வாசகசாலையின் நோக்கங்களைப்பற்றி விரிவுரையாற்றப்பெற்று தலைவர் முடிவுரையுடன் கூட்டம் நிறைவெய்தியது. ஒரு நிருபர்.


## சாலாமிசிரி லேகியம்

(ரிஜிஸ்டர்டு)

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

மிகுந்த பலத்தையும், வீர்ய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

| | |
|---|---|
| கை கால் அசதி<br>இடுப்புவலி<br>பலக்குறைவு<br>ஆயாசம்<br>நரம்புத்தளர்ச்சி<br>சொர்ப்பனஸ்கலிதம் | திடசரீரத்தைஉண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். எவ்வளவுகடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. |
| சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கும். | சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது. |
| ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக் கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும் | ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை, 1-சேர் டப்பி ரூ. 2-8-0 |

பார்சல் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை

**டி. சி. சிங்காரம் அண் கோ.,**

சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,

தேப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

தூரமுள்ள நவல்பட்டிய அல்கின்ற ஊரிலிருந்து தோட்டக்காரரும் ம. பேங்கிக்காரருமான தோழர் சந்தனம் கண்டிக்கு வந்து தங்கள் ஊருக்கு வரவேண்டுமென்று அழைத்துச்சென்று அங்கு ஒரு வரவேற்பும் விருந்தும் நடத்தினர்.

ஹட்டன்.

அடுத்த நாள் காலையில் அங்கிருந்து சுமார் 30 மைல் தூரமுள்ள ஹட்டன் என்னும் பட்டணத்திற்கு வரும்படி இலங்கை தொழிலாளர் சங்கத் தலைவர் தோழர் நடேசய்யரும், கோவை திருமதி மீனாட்சியம்மையும் டிக்கோயா,சுயமரியாதைச்சங்கத்தலைவர்தோழர் நைனாரும் அழைத்ததிற்கிணங்கஹட்டனுக்குபுறப்பட்டு சென்றார்கள். ஹட்டனில் தோழர் நடேசய்யர் ஆதரவையில் இலங்கை தொழிலாளர் பிடேரஷனில் ஜாகையில் அமர்த்தப்பட்டிருந்ததுடன் அன்று பிற்பகல் 3 மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கூட்டத்திற்கு சுமார் 3000 பேர் வரையில், பெரிதும் தோட்டத் தொழிலாளர் [கூலி] களாகவே வந்திருந்தார்கள்.தோழர்நடேசய்யர் தலைமைவகித்தார். "சமத்துவ போதினி" பத்திராதிபர், சுயமரியாதை சங்கத் தலைவர் தோழர் நைனார் டிக்கோயா சுயமரியாதை சங்க சார்பாக ஒரு உபசாரபத்திரம் படித்தார். தோழர் நாதன் இலங்கை தொழிலாளர் நிலைமையை எடுத்துச் சொன்னார். தோழர்கள் ஈ. வெ. இராமசாமி, அ. இராகவன், கோ. மீனாட்சியம்மை ஆகியவர்கள் பேசினார்கள்.

பிறகு, மறுநாள் காலையில் தோழர்கள் நடேசய்யர், ஈ. வெ. ராமசாமி, நாகம்மாள், ராகவன் அவர்களை கண்டிக்கு அழைத்து வந்து விட்டுப்போனார்.

அன்று இரவே யாழ்பாணம் பருத்தித்துறைக்கு தோழர் எஸ். கே. எஸ். விஸ்வலிங்கம், எஸ். வி. சதாசிவம் இவர்கள் கொழும்புக்கும் கண்டிக்கும் வந்து அழைத்த அழைப்பிற்கு இணங்கி கண்டியிலிருந்து புறப்பட்டு மறுநாள் காலையில் பருத்தித் துறைக்கு 10 மைல் தூரமுள்ள கொடிககாமம் ஸ்டேஷனுக்கு போய்ச் சேர்ந்தார்கள். அங்கு தோழர்கள் சதாசிவம், விஸ்வலிங்கம் அவரது மனைவியார் ராசம்மாள், குமாரத்தி காந்திமதி முதலியவர்கள் ஸ்டேஷனுக்கு வந்து வரவேற்று, காரில் பருத்தித்துரைக்கு அழைத்துச்சென்றார்கள். அன்று முழுவதும் தோழர். விஸ்வலிங்கம் வீடு கல்யாணவீடுபோலவே சதா பெருங்கூட்டமாகவே இருந்தது. பலர் மதத்தைப்பற்றியும், ஜேசியத்தைப்பற்றியும் பேசி விவாதம் செய்தவண்ணமாகவே இருந்தார்கள். பல நண்பர்கள் கூட்டத்தில் கலவரம் நடக்கக்கூடும் என்று பயந்து கொண்டே இருந்தார்கள். மறுநாள் மாலை 3-30 மணிக்கு ஒரு பெரிய பள்ளிக்கூடமண்டபத்தில் கூட்டம் துவக்கப்பட்டது. கூட்டத்திற்கு 1000 பேருக்குமேல்வந்திருந்தார்கள்.தோழர் விஸ்வலிங்கம் தலைமை வகித்தார், யாழ்பாணம் பருத்தித்துறை சு-ம சங்கத்தலைவர் தோழர் எஸ். குணரத்னம் சங்க சார்பாக ஒரு உபசாரப்பத்திரம் வாசித்தார். பிறகு ராமசாமி 2 மணி நேரம் ஒரு உபன்யாசம் செய்தார். கூட்டத்தில் கலகம் செய்ய வந்தவர்களும், கேள்வி கேட்க வந்தவர்களும், கேள்விக்கு பல ஆதாரங்கள் கொண்டுவந்தவர்களும், மற்றும் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி குறைகூறிக்கொண்டிருந்தவர்களும், ராமசாமிபேசப்பட்ட விஷயங்கள்அவ்வளவையும் பொருமையுடன்கேட்டுக்கொண்டிருந்ததோடல்லாமல்,கூட்டமுடிவில் ஒவ்வொருவரும் நேரில்வந்து தாங்கள் இதுவரை தவருதலாய் எண்ணி இருந்ததாகவும் இவ்விஷயங்கள் இதுவரை யாராலும் விளக்கப்படாதம் போதிய பிரசாரமில்லாததுமே தப்பபிப்பிராயத்துக்கு காரணம் என்றும் சொன்னார்கள். அன்றியும் பல வெளியூர்காரர்கள் தங்கள் தங்கள் ஊருக்கு வரவேண்டுமென்றும் அழைத்தார்கள்.

ஆனால், அவற்றிற்கு இது சமயம் போதிய சாகவாசமில்லையென்றும், மறுசமயம் வருவதாகவும்சமாதானம்சொல்லப்பட்டு வட்டுக்கோட்டை, யாழ்பாணம்முதலியஇடங்களுக்குமாத்திரம் சென்று பார்த்துவிட்டு சில நண்பர்களுடன் பேசிவிட்டும் வரப்பட்டது.

மறுநாள் காலை பருத்தித்துரையில் இருந்து கொடிக்காமம் சென்று அங்கிருந்துநேரே3-11-32க்தேதி மாலை 8 மணிக்கு கொழும்புக்கு வந்து தோழர் ஹமீத் அவர்களின் "மீனு மேன்ஷன்" என்னும் பங்களாவில் தங்கப்பட்டது. இரண்டு நாளையில் கொழும்பில் இருந்து நேரே தூத்துக்குடிமார்க்கம் இந்தியாவுக்கு புறப்பட ஏற்பாடாகி இருக்கிறது.

[நமது நிருபர்]

## கோவை சுயமரியாதை வாலிபர்சங்கம்


சென்ற 5-11-32க்தேதி மாலை 7 மணிக்கு சங்கத்திணைரவில் புதுமந்திரிகளைப்பாராட்டுவதற்காக ஒரு விசேஷக்கூட்டம் சங்கத்தலைவர் தோழர்.எ.ஆர்.சிவானந்தம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் தோழர் கஸ்தூரி அவர்கள் சுயமரியாதைக்கீதங்கள் பாடினர். பின் தலைவர் கூட்டங்கூடியதின் நோக்கத்தைப்பற்றி அழகாகப்பேசினர். பின் சில தீர்மானங்கள் நிறைவேறியது. அது வருமாறு:- பார்ப்பனரல்லாதாரிபக்கத்தலைவர்களான கனம் பொப்பிலி அரசர் முதல் மந்திரியாகவும், இரண்டாம், மூன்றும் மந்திரிகளாக கனம். பி. டி. ராஜன், எஸ். குமாரசாமி ரெட்டியார் ஆகியவர்களை நியமனம் செய்ததற்கு அரசாங்கத்தாரைப்பாராட்டுகிறது.

சென்னை நகராகஷிக்கழகத் தலைவராகப்போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட செட்டிநாட்டு குமாரராஜ எம். எ. முத்தையா அவர்களைப்பாராட்டுகிறது என்பதுவும், இன்னும் பலதீர்மானங்களும் நிறைவேறிய பின் தலைவர் முகவுரைக்கு பின்கூட்டம்கலைந்தது.

ஷைசங்கத்திணைரவில் 6-11-32க்தேதிமாலை7மணிக்கு ஒருகூட்டம் நடைபெற்றது. அதுசமயம் சிலதீர்மானங்கள் நிறைவேறிய பின்கூட்டம்கலைந்தது. ஒருநிருபர்.


# ஹிமகிரி தைலம்.

ஸ்நானத்திற்கு ஏற்றது.



உடம்பையும், கண்களையும், மூளையையும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் குளிர்ச்சி செய்கிறது. சுறுசுறுப்பை உண்டாக்குகிறது. தலைவலிக்கு சிறந்த மருந்து அபிப்பிராயம்:- ஆர். எஸ், முட்டனு பி. இ. எலக்டிரிக்பவர் ஹவுஸ் உதகமண்டலம். கடந்த ஆறுமாத காலமாக தங்கள் தைலத்தை நான் உபயோகிக்கிறேன் எல்லாத்தைலங்களைவிட தங்கள் தைலம் சிறந்து விளங்குவதோடு குளிர்ச்சியையும் உற்சாகத்தையும் தரத்தக்கதாயிருக்கிறது. உள்நாட்டு மூலிகைகளைக் கொண்டு செய்யப்பட்ட விலை சகாயமான தைலம் இதுவே. நல்ல பலந்தரக் கூடியதாயிருக்கிறது. பொது ஜனங்களுக்கு இதை சிபார்சு செய்கிறேன்.

விலை 1—0—0, 0—8—0.

## ரத்னமிஸ்ரி ஹல்வா.

மூளையையும்,உடலையும், பலப்படுத்துவது.

பலவீனம், ஜீரணக்குறைவு, சோம்பல், இந்திரிய ஸ்கலிதம் முதலியவற்றை நீக்கவல்லது. தாதுவிர்த்திக்கேற்றது. விலை 2—8—0, 1—4—0.

நற்சாட்சி பத்திரங்களும், தங்கமெடல்களும் பரிசுபெற்றது.

கிடைக்குமிடம்:—

எம். பெருமாள் நாயுடு,
மளிகை ஈரோடு,

மெடிகல் எம்போரியம், ஈரோடு.

சோல் ஏஜண்ட்,
அனந்தகிருஷ்ண பிளவர் மில்ஸ்,
பெங்களூர்சிட்டி.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இயற்கைமதம் ... | 0—8—0 |
| 2. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 3. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 4. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 5. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 6. | சுயமரியாதை தத்துவ கீதங்கள் ... | 0—4—0 |
| 7. | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—C |
| 8. | மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.


### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. 4—0—0 |

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
**ஈரோடு.**


## 3 ரூபாய்க்கு 3 கடியாரங்களும் 90 சாமான்களும் இனாம்.




வாசனையிற் சிறந்தது ஒட்டோ மோட்டியாவே. இது புஷ்பங்களின் சத்து. ஒரே தடவையில் 3 ரூபாய்க்கு 6 பாட்டில்கள் வாங்கு வோருக்கு, சோல்ட் கில்ட் டம்மிரிஸ்ட் வாட்ச் ஒன்றும், 5 வருஷ உத்திரவாதமுள்ள ஜெர்மன் 'பி' டைம்பீஸ் 1-ம், ரயில்வே டைம் டம்மிபாக்கட் வாட்ச் 1-ம், பவுண்டன் பேனா 1-ம், இன்னும் 90 சாமான்களும் இனாமாய் கொடுக்கப்படும். இனாம் சாமான்கள் சேர்த்து விலை ரூ. 3. பாக்கிங் தபால் செலவு வேறு.

General Trading Agency
15/1 Joymitter St., Hatkhola P. O., Calcutta.


## கடவுள்கள் என்பவை விளையாட்டுக் கருவிகள்.


## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்க வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.



பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

## மாதர் சுதந்திரம் அல்லது பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு.

இம்பீரியல் பிரஸ், மாயவரம்



## மாதர்களுக்கு

இதுதான்வேண்டியது.

### கெர்ப்ப எண்ணெய்



மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம் சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம்உண்டாகும்மிகக அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அன்னிய நாட்டார் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி S. I.


## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தகரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

## "குடி அரசு" கிடைக்குமிடங்கள்.

தஞ்சாவூர்.
மணியம் பிரதர்ஸ்,
ரயில்வே ஸ்டேஷன் ரோடு.

பாபநாசம். அப்துல்ரசாக் சாயபு,
இரும்புவியாபாரம்.

காஞ்சீபுரம். எம். கே. எல்லப்பன்,
திருப்புக்குடல் வீதி.

கோயமுத்தூர்.
வி. ரங்கராஜலு, நியூஸ் ஏஜண்ட், ராஜவீதி.

சேலம். சித்தய்யா,
தனலட்சுமி விலாஸ் பேங்க்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோததியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.
இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.
இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.
இதன் விலை அணா. 0—2—0,

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.
இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.
இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.
இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.
இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0 2—0

## கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சித்தாராமைய்யாவும், என் எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.
இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.